Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 110 • 17.09.2017

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா



உடனே அழையுங்கள்
076 82 555 67 / 60
தீபம் எப்பொழுதும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்




ஹசனலியுடன்
மோத தயாராகும் ஹக்கீம்

இந்தியாவிற்கு பக்கத்தில்
புலிகளின் ஆயுத கப்பல்கள்!

வைத்த பொறியில்
சிக்குமா கூட்டமைப்பு?

## கிருசாந்தி
ஒரு கொலையின் துயரக்கதை



### மட்டக்களப்பு
## போலி உறுதி மூலம் காணி மோசடி!
## சாராய விநியோகத்தருக்கு அரச விடுதி!!

NCT
TRANSPORTERS



No.350,Navalar Road, Jaffan
0212223509
0212227904

NCT TRANSPORTERS.
Jaffan-Kilinochchi -Colombo
No-71,wolfendhal street
Colombo -13
0112336186

உங்கள் பொருட்களை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கும்
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் மற்றும் கிளிநொச்சிக்கும்
குறைந்த செலவில் எடுத்து செல்ல...




# TOPAZ

No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றீயல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
| --- | --- | --- |
| No 72, Grand Bazaar<br>Jaffna<br>Tel 021 222 4743<br>Fax 021 222 7645 | No 80/24, Kasthuriyar Road<br>Jaffna<br>Tel 021 222 4643<br>Email : topazagn@gmail.com | No 195, Power House Road<br>Jaffna<br>Tel 021 222 4933<br>021 221 9933 |



# தீபம் குடும்பத்துடன் இணைந்து பணியாற்ற விருப்பமா?

தமிழின் முதல் தர வார இதழ் தீபத்துடன் இணைந்து பணியாற்ற
துடிப்பான இளைஞர்கள், யுவதிகளை வரவேற்கின்றோம்

பின்வரும் பதவிகளில் கடமையாற்ற விரும்புவர்கள் இன்றே விண்ணபியுங்கள்

| பதவிகள் | எண்ணிகை |
| --- | --- |
| நிர்வாக உத்தியோகத்தர். | (1) |
| மாவட்ட இணைப்பாளர்கள். | (6) |
| சந்தைப்படுத்தல் முகாமையளார் | (1) |
| சந்தைப்படுத்தல்உத்தியோகத்தர்கள் | (6) |

(மாவட்டத்திற்கு ஒருவர் என்ற வகையில் தேர்வு முக தேர்வு இடம் பெறும்)

அலுவலக உதவியாளர் (1)


கிழக்கு மாகணத்தில் கடமையாற்ற விரும்புவர்களுக்கு
மட்டகளப்பில் இடம்பெறும்.

13/09/2017 திகதிக்கு முன்
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகப் பணிப்பபாளர் (தீபம் வார மலர்)
நோர்சி மீடியா(பிறைவேற்) லிமிற்றட், 989/1 பருத்தித்துறை வீதி கல்வியங்காடு,
நல்லூர். யாழ்ப்பாணம் 0768255560,0214927561

யாழ் புகையிரத
நிலையத்துக்கு அருகாமையில்
சகல வசதிகளுடனும்
அதி உயர்தர
வலம்புரி ஹோட்டல்.







Green Grass

# The Valampuri

148/10 Railway Station Rd, Jaffna 40000 Phone: 021 2 220111

# TILKO

## JAFFNA CITY HOTEL

Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com

**Mob : 077 780 393, 0777 696 443**

TILKO hotels



# ஒப்ரேஷன் சக்ஸஸ்; பேஷண்ட் அவுட்!

## 3 மில்லியனிற்கு அதிக சம்பளத்தில் நால்வர்

**கொழும்பு, செப். 17**

சிறிலங்கன் விமான நிறுவனம் பெருமளவு நட்டத்தில் இயங்கிவரும் நிலையில் அதன் உயரதிகாரிகள் நால்வர் மாதாந்தம் தலா மூன்று மில்லியனிற்கும் அதிகமான கொடுப்பனவை பெறும் தகவல் வெளியாகியுள்ளது. பெரும் தொகை சம்பளத்தை பெறும் அதிகாரிகளால் நிறுவனத்தை இலாபமடைய வைக்க முடியாதா என்ற விமர்சனமும் எழுந்துள்ளது.

சிறிலங்கா விமான நிறுவனத்தின் கணக்கறிக்கைகளின் பிரகாரம் 2016/17 நிதியாண்டில் 28 பில்லியன் ரூபாவிற்கும் அதிக தொகை நட்டத்தில் இயங்கி வருவது தெரிய வந்துள்ளது. அதன் அன்றாட செலவை அரச வங்கிகளில் பெற்ற 7.5 பில்லியனை பயன்படுத்தியே ஈடுசெய்து வருகிறது. கடந்த காலங்களில் நிறுவனத்தில் நிலவிய முகாமைத்துவ குறைபாடு, முறைகேடுகளால் பெருமளவு இழப்புக்களை சந்தித்து வருகிறது. எனினும், நிறுவனத்தின் உயர்பதவிகளில் உள்ள

தொடர்ச்சி 9-ம் பக்கம்...

# தாளையடி தனியார் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆதாயமடைவது யார்?

**பருத்தித்துறை, செப். 17**

வடமராட்சி கிழக்கு தாளையடியில் தனியார் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை நிறுவ மேற்கொள்ளப் பட்டு வரும் முயற்சிகள் பற்றிய தகவல் களை தீபம் கடந்தவாரம் வெளிப்படுத் தியிருந்தது. அரச உயர்மட்ட அனுசர ணையுடன் இந்த திட்டப்பணிகள் முன் னெடுக்கப்படுகின்றன என்பதை குறிப் பிட்டிருந்தோம். இது பற்றிய மேலதிக சில தகவல்களை தீபம் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவில் உள்ள எஸ்.சுந்தரம் பிள்ளை என்பவருக்கு சொந்தமான ரகுபா (tacuba (pvt) limited) நிறுவனமே இந்த கடல்நீரை நன்னீராக்கும் நிலையத்தை நிறுவ முயற்சி செய்து கொண்டிருக்கிறது. 10.48 ஹெக்ரெயர் நிலப்பரப்பை இதற்காக கோரியிருந்தது. மருதங்கேணி பிரதேச செயலாளர் அதற்குரிய நிலத்தை அடையாளமிட்டுள்ளார்.

தனியார் நிறுவனத்திற்கு காணியை பெற்றுக்கொடுப்பதிற்கு முன்னாள் மாகாண காணி ஆணையாளர் ஒருவர் நேரடியாக தலையீடு செய்துள்ளார். காணி வழங்குமாறு யாழ் மாவட்ட செயலகமும் மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளது. கடந்த இதழில் குறிப்பிட்டதை போல, அதிக அரசியல் தலையீடும் இதில் இருந்துள்ளது.

10 ஏக்கர் நிலத்தில் கடல் நீர் சுத்திகரிப்பு நிலையமும், 14 ஏக்கரில் கழிவுநீரிலிருந்து உப்பு மற்றும் எரிசோடா உற்பத்திக்கான நிலையமும் அமைப்பதே நிறுவனத்தின் கோரிக்கை. கடல்நீரை நன்னீராக்கி நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு வழங்குவதே ரகுபா . திட்டத்தின் முன்மொழிவு. குறிப்பிட்ட காலம் தனியார் நிறுவனமாக இயங்கிய பின்னர், நீர் வழங்கல் வடிகாலமைப்பு

தொடர்ச்சி 9-ம் பக்கம்...

# விடைத்தாளை அனுப்ப தவறிய மாணவி!

**பருத்தித்துறை, செப்.17**

நடந்து முடிந்த உயர்தர பரீட்சையில் மாணவியொருவர் விடைத்தாளிற்கு பதிலாக வேறொரு தாளை இணைத்து அனுப்பிய சம்பவம் பதிவாகியுள்ளது. இந்த துரதிஸ்டவசமான சம்பவத்திற்கு பரீட்சை நிலையத்தில் கடமையில் இருந்தவர்களின் கவனயீனமும் ஒரு காரணமென விமர்சனம் எழுந்துள்ளது. வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பெண்கள் பாடசாலையில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இரசாயனவியல் பரீட்சை யிலேயே மாணவியொருவர் இந்த துரதிஸ்டமான நிலைமையை எதிர்நோக்கியுள்ளார். குறித்த பரீட்சையில் வினாத்தாளிலேயே விடையளிக்க வேண்டியிருந்தது. பரீட்சை முடிந்தபோது விடைத் தாளை இணைப்பதற்கு பதிலாக செய்முறைக்கு பயன்படுத்திய தாளை தவறுதலாக இணைத்து விட்டார். பரீட்சை மண்டபத் தில் கடமையில் இருந்த கண்காணிப் பாளர்கள் வழக்கமான பரீட்சை நடைமுறைகளிற்கு அமைவாக விடைத்தாள்களில் கையெழுத்திட்டு அவற்றை சரி பார்த்து சேகரித்துள் ளனர். எனினும், அப்பொழுதும் மாணவி விடைத்தாளை இணைக் காமல் விட்டதை பரீட்சை மண்டப அலுவலர்கள் கண்டறியவில்லை.

பரீட்சை முடிந்து வீட்டுக்குசென்ற பின்னர்தான் நடந்த விபத்தை மாணவி அறிந்து கொண்டார். மிக குறுகிய நேரத்தில் பாடசாலைக்கு திரும்பி வந்து விடயத்தை தெரியப் படுத்தியுள்ளார். எனினும், பரீட்சை விதிமுறைகளின் அடிப்படையில் அந்த விடைத்தாளை இணைக்க முடியாதென பரீட்சை மண்டப அலுவலர்கள் மறுத்து விட்டனர்.


பின்னர், தனது கவனக்குறை வினால் இந்த சம்பவம் நடந்ததென மாணவியிடமிருந்து கடிதம் ஒன்றை பெற்று, மாணவியின் விடைத் தாளுடன் புலனாய்வு என்ற விதி முறைக்கமைவாக அனுப்பி வைத் துள்ளனர். குறித்த மாணவி பாட சாலையில் முன்னணி மாணவிகளில் ஒருவராக விளங்கியுள்ளார்.

பரீட்சை மண்டபத்தில் கடமை யில் இருந்த அலுவலர்கள் அவதான மாக நடந்திருந்தால், இந்த துரதிஸ்ட வசமாக சம்பவத்தை தவிர்த்திருக் கலாம். அதிகாரிகளின் அசமந்தத்தை மாணவியின் மீது சுமத்திவிட்டு தப்பிக்க முயற்சிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள் ளது.

# யாழ் - கொழும்பு பயணிகளிடம் அறாவிலை விற்கும் உணவகங்கள்!

## சொகுசு பேரூந்து உரிமையாளர்களும் உடந்தை?






**யாழ்ப்பாணம், செப்.17**

யாழ்ப்பாணம் கொழும்பு பயணிகள் சேவையில் ஈடுபடும் சொகுசு பஸ்கள் நிறுத்தப்படும் உணவகங்கள் பகல்கொள்ளையில் ஈடுபடுவதாக பொதுமக்கள் கடும் அதிருப்தி தெரிவிக்கிறார்கள். பொதுமக்களின் நலனில் அக்கறை கொள்ளாமல் உணவகங்களின் பகல் கொள்ளையிக்கு பேரூந்து உரிமையாளர்களும் உடந்தையாக இருக்கிறார்கள் என்பதே மக்களின் குற்றச்சாட்டு.

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் சொகுசு பேரூந்துகளும், கொழும்பிலிருந்து புறப்படும் சொகுசு பேரூந்துகளும் உணவிற் காக நிறுத்தப்படும் இடங்களில் உணவுப் பண்டங்களின் விலை மிக அதிகமாக உள்ளது. குறிப்பிட்ட காலஅவகாசத்தில் சாப் பிட்டு விட்டு புறப்பட்டு விட வேண்டும், மொழிப் பிரச்சனை, இந்த பகுதிகளில் வேறு கடைகள் இல்லாமை போன்ற பல காரணங்களால் இதை தட்டிக் கேட்பவர்கள் மிக குறைவு. இதை வாய்ப்பாக பயன்படுத்தி உணவுப்பண்டங்களை அறாவிலைக்கு விற்று கொள்ளை இலாபமீட்டுகின்றன சில உணவகங்கள்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் சொகுசு பேரூந்துகள் நீர்கொழும்பு பகுதியில் இரவு உணவிற்காக அல் அம்ரா உணவகத்தில் நிறுத்தப்படுகின்றன. அண்மையில் அங்கு இரவு உணவிற்காக சென்ற பயணியொருவரிற்கு நேர்ந்த அதிர்ச்சி சம்பவம் இது. உணவகத்தில் உட்கார்ந்தவரிடம் பரிமாறுபவர் தேவையான

தொடர்ச்சி 9-ம் பக்கம்...


# ஹசனலியுடன் நிந்தவூரில் மோத தயார் - ஹக்கீம்; முடிந்தால் பொத்துவிலில் மோதி பாருங்கள் - ஹசனலி


## சூடு பிடிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் மோதல்

**தாருஸ்ஸலாம், செப்.17**

ஹசனலியும், தாஹிரும் தேர்தலொன்றில் நிந்தவூரில் போட்டியிட்டால், அவர்களிற்கு எதிராக அங்கு நான் களமிறங்க வேண்டிவரும். இவ்வாறு சூளுரைத்துள்ளார் முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம். கடந்த சனிக்கிழமை (09) நடைபெற்ற கட்சியின் உயர்மட்ட கூட்டத்திலேயே இதனை தெரிவித்துள்ளார். கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் இந்த கூட்டம் நடைபெற்றது.

மு.காங்கிரசின் செயலாளர் நாயகமாகப் பதவி வகித்த எம்.ரி. ஹசனலியும், அந்தக் கட்சியின் உயர்பீட உறுப்பினராக இருந்த நிந்தவூர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிரும் நிந்தவூரைச் சேர்ந்தவர்கள். இருவரும் கட்சி தலைமையின் நடவடிக்கைகளை விமர்சித்து, கட்சியில் இருந்து ஒதுங்கி, தூய முஸ்லிம் காங்கிரஸ் அணியாக செயற்பட்டு வருகிறார்கள்.





இவர்களின் நடவடிக்கைகள், புதிய கூட்டணியொன்றின் ஊடாக தேர்தலில் போட்டியிட கூடும் என்ற எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. புதிய கூட்டணியொன்றிற்காக இவர்கள் முயன்று வருவதாகவும் கூறப்படுகிறது. இதுதவிர, அதிருப்தியாளர்களின் விமர்சனங்களால் கட்சி தலைமை கடும் நெருக்கடியையும் சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையிலேயே, கட்சி உயர்மட்ட கூட்டத்தில் ஹக்கீம் இந்த அதிரடி கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அங்கு அவர் உரையாற்றியபோது "ஒவ்வொரு வட்டாரத்திலும் முஸ்லிம் காங்கிரசின் கிளைக் குழுக்களை அமைக்க வேண்டும். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஒவ்வொரு வட்டாரத்திலும் வேட்பாளராகக் களமிறக்கக் கூடிய நபர்களை இப்போதே இனங்காண வேண்டும். பிரபல்யமானவர்களையே வேட்பாளர்களாகத் தெரிவு செய்ய வேண்டும்.

நிந்தவூரில் ஹசனலியும், தாஹிரும் தேர்தலில் போட்டியிடவுள்ளனர் என கூறப்படுகிறது. அப்படி நடந்தால் நான் அங்கு களமிறங்குவேன்" என்றார்.

ஹக்கீமின் இந்த கருத்து கட்சி முக்கியஸ்தர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அண்மைக்காலமாக கட்சி மீது விமர்சனங்கள் தீவிரம் பெற்றிருந்த நிலையில், ஹக்கீம் உற்சாகமாக களமிறங்கவுள்ளதை சாதகமாக பார்ப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். "களமிறங்குவேன்" என ஹக்கீம் சொன்னதன் அர்த்தம் ஹசனலி, தாஹிரை தோற்கடிக்க தீவிரமாக பிரச்சார நடவடிக்கையில் களமிறங்குவேன் என்பதாக இருக்கலாமென்றும் சில உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, ரவூப் ஹக்கீமுடன் தேர்தலொன்றில் நேருக்குநேர் சந்திக்க தான் தயாராக இருக்கிறேன் என ஹக்கீமின் சவாலை ஏற்றுக்கொண்டுள்ளார் ஹசனலி. ஹக்கீமினால் முடிந்தால் பொத்துவில் தொகுதியில் தன்னுடன் போட்டியிட வேண்டுமென்றும் சவால் விடுத்துள்ளார்.

இங்கிலாந்திற்கு சென்றுள்ள ஹசனலி, அங்குள்ள இணைய ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதெ இதனை தெரிவித்துள்ளார். முஸ்லிம் காங்கிரஸ் மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தி அடுத்த தேர்தலில் வெளிப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

"தொகுதிவாரி தேர்தல் முறையில் ரவூப் ஹக்கீம் ஏதாவதொரு தொகுதியை தேர்ந்தெடுத்தே ஆக வேண்டும். அவரால் முடிந்தால் பொத்துவில் தொகுதியில் என்னுடன் போட்டியிட வேண்டும். இதன்மூலம் யதார்த்தத்தை உணர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.


சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டதன் உண்மையான நோக்கம் வழிதவறியிருக்கிறது. அதனை சீர்படுத்தும் இறுதி முயற்சியாக அனைத்து முஸ்லிம் தலைவர்களையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

# அதாஉல்லாவிற்கு மீண்டும் அதிர்ச்சி வைத்தியமளித்த அமீர்!

## பின்னணி பற்றி கட்சி சந்தேகம்

**அம்பாறை, செப்.17**

கிழக்கு மாகாணசபை அண்மையில் 20வது திருத்த சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தது. தேசிய காங்கிரசை சேர்ந்த உறுப்பினர் எம்.எல்.ஏ.அமீர் கட்சியின் முடிவை மீறி வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் தவிர்த்ததன் மூலம், கட்சியின் முதுகில் குத்திவிட்டார் என்று கட்சி வட்டாரத்தில் பரவலான அதிருப்தி எழுந்துள்ளது. வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்த்ததன் மூலம், அவர் 20வது திருத்தத்தை ஆதரித்துள்ளார் என்று கட்சி முக்கியஸ்தர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.



20வது திருத்தம் தொடர்பாக கிழக்கு மாகாணசபையில் இழுபறி நீடித்து வந்தது. பலத்த சந்தேகங்களிற்கிடையில் கடந்த 11ம் திகதி நடந்த வாக்கெடுப்பில் 24 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்திருந்தனர். 8 உறுப்பின்ர்கள் எதிராக வாக்களித்திருந்தனர். ஒரு உறுப்பினர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலைமை வகித்தார்.

20வது திருத்த சட்டத்தை கிழக்கு மாகாண சபையில் தோற்கடிக்குமாறு தேசிய காங்கிரசின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில், அவரது கட்சியை சேர்ந்த உறுப்பினர் அமீர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் தவிர்த்து அதிர்ச்சி வைத்தியம் அளித்துள்ளார்.

20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்குமாறு கோரி, கிழக்கு மாகாண எதிர்க்கட்சினரிடம் முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் தரப்பில் பேரம் பேசுதல்கள் இடம்பெற்றதாகஎதிரணி உறுப்பினர் எம்.எஸ். சுபையிர் அண்மையில் குற்றம்சாட்டியிருந்தார். ஆதரவாக வாக்களிக்காமல் விட்டாலும் பரவாயில்லை, வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்ந்து கொண்டாலே போதுமாமென எதிரணியிடம் பேரம் பேசுதல் நடந்திருக்க வேண்டுமென தேசிய காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் குற்றம்சுமத்தி வருகிறார்கள்.


ஆட்சி மாற்றத்தின் பின்னர் அதாஉல்லாவின் தேசிய காங்கிரஸைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்கள் எதிரணியில் அமர்வதெனத் தீர்மானித்த நிலையில், மாகாண சபை உறுப்பினர் அமீர், ஆளுந்தரப்பில் அமர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் போவதாக, தேசிய காங்கிரஸ் அறிவித்ததையடுத்து, எதிர்க்கட்சியினர் பக்கமாக அமீர் அமர்ந்தார். இந்த நிலையில் மீண்டுமொருமுறை கட்சியின் முடிவிற்கு மாறாக அமீர் நடந்து கொண்டுள்ளார்.

# மீராவோடை மாணவன் சாதனை!

**மட்டக்களப்பு, செப்.17**

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திலுள்ள மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலயத்தில் கடந்த வருடம் உயர்தரப்பரீட்சை எழுதிய வை.எம்.சைபுதீன் எனும் மாணவன் பாடசாலையின் வரலாற்றில் முதன்முறையாக பொறியியல் பீடத்தில் தெரிவாகி சாதனை படைத்துள்ளார்.



பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட மாணவனுக்கு பாடசாலையின் அதிபர் ஏ.எல். அபுல் ஹசன் மற்றும் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். பொறியியல் பீடத்தில் சாதனை படைத்த மாணவன் வை.எம்.சைபுதீன் மீராவோடை மீரா ஜும்ஆப் பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபையின் பொருளாளர் அல் ஹாஜ் எஸ்.எம். யஹியா அவர்களின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சுகாதார வைத்திய அதிகாரி நியமனம்!

**மட்டக்களப்பு, செப்.17**

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப்பிரிவின் கீழுள்ள ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதார வைத்திய அதிகாரியாக ஏறாவூரைச்சேர்ந்த வைத்திய அதிகாரி ஜீகூஷ். எம்.எச்.எம். தாரிக் கடமைகளை கடந்த 1ம் திகதி பொறுப்பேற்றுக் கொண்டார்.

• ஏறாவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட Dr.எம்.எச்.எம். தாரிக் கடந்த 1996ம் ஆண்டு வைத்தியராக முதல் நியமனத்தை இப்பிரதேசத்தில் பெற்றுக்கொண்டு, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை, மாஞ்சோலை பிரதேச வைத்தியசாலைகளில் கடமையாற்றி சிறப்பான சேவையை இப்பிரதேசத்துக்கு வழங்கியுள்ளதுடன், இப்பிரதேச மக்களின் நன்மதிப்பைப்பெற்ற ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நல்லிணக்கம் சமரசப்படுத்தல் அல்ல!

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0214927562
அலுவலகம்: 0214927561
விநியோகம்: 0214927542
விளம்பரம்: 0768255560
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் 36வது அமர்வுகள் சந்தடியின்றி ஜெனீவாவில் ஆரம்பமாகி விட்டன. கடந்த காலங்களில் இலங்கை அரசியலில் ஜெனீவா ஒரு திருவிழாவை போலிருந்தது. உணர்வுபூர்வ அரசியல் நிகழ்வுகள் அரங்கேறிய ஒரு களத்தை வெறும் திருவிழாவென நாம் வர்ணிப்பதாக பலருக்கு ஆதங்கம் எழலாம். அந்த ஆதங்கம் நியாயமானதுதான். அப்படியொரு நியாயமான ஆதங்கத்தின் பாற்பட்டே அதனை திருவிழாவென குறிப்பிட்டுள்ளோம்.

உலகின் மோசமான படுகொலைகளை சந்தித்த இனங்களில் தமிழினமும் ஒன்று. ஆனால் அதற்கான நீதியை தமிழினத்தால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு ஜெனீவா அமர்வின் பின்னரும், உலகம் நீதி வழங்கவில்லையென்றுவிட்டு அடுத்த காரியத்திற்கு சென்றுவிடுவோம். பின்னர் மீண்டும் அடுத்த வருடம் மூட்டை முடிச்சுக்களுடன் ஜெனீவா செல்வோம். புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்தும் வருவார்கள். ஒரு வாரமோ, பத்து நாளோ தங்கியிருந்து விட்டு மீண்டும் இலங்கைக்கு வருவார்கள்.

கடந்த மூன்றாண்டுகளில் இலங்கை விவகாரம் ஜெனீவாவில் வீரியம் இழந்து வருகிறது. இதை தெரிந்து கொள்ள பெரிய அரசியல் வித்துவம் வேண்டியதில்லை. உலகம் நவீனமடைந்து வரும் சூழலில், ஈழத்தமிழர்களிடம் ஊடகங்கள் பெருகி வரும் நிலையில் ஏன் மனிதஉரிமைகள் பேரவையில் நம்மால் தாக்கம் செலுத்த முடியவில்லை?

இந்த கேள்வி கட்சிகள், சிவில் அமைப்புக்கள், ஊடகங்கள், பொதுமக்கள் அனைவரும் தங்களை தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி.

யுத்தத்தின் பின்னர் தமிழ் அரசியல் பிளவுபட்டு நிற்கிறது. 2009 இற்கு முன்னராக கிட்டத்தட்ட இரண்டரை தசாப்தங்கள் தமிழர்களை ஒருங்கிணைத்து வைத்திருந்தார்கள் புலிகள். இது மாற்றுக்குரல்களை புறமொதுக்கும் கருத்தல்ல. புலிகளின் காலத்தில் மாற்றுக்குரல்கள் பல ஒலித்தன. ஆனால் அவை ஒரு அளவிற்கு மட்டுமே எல்லையை கொண்டிருந்தன. பெரும்பான்மை தமிழ் சமூகத்திற்கு புலிகள் தலைமை வகித்தார்கள்.

புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர் அந்த பாத்திரத்தை ஏற்க யாராலும் முடியவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் வரையறையிருக்கிறது. உலகளாவிய தமிழர்களை தலைமையேற்க வேண்டிய தமிழ்தேசிய கூட்டமைப்பு தலைமை என்ற அடையாளம், தமிழரசுக்கட்சியை தலைமையேற்கும் வீழ்ச்சிக்கான அறிகுறியும் இப்பொழுது தென்படுகிறது. இரா.சம்பந்தன் தலைமை பதவியில் இருக்கும்வரை அந்த அபாயத்திற்கான வாய்ப்பில்லையென்றாலும், அவரது கணிசமான அதிகார விட்டுக்கொடுப்புக்களின் பின், புதியவர்களிடம் அந்த பக்குவம் கிடையாதென்பதை அண்மைய தமிழ் அரசியல் நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ் தேசிய ஆதரவாளர்கள், கூட்டமைப்பு முன்னணி ஆதரவாளர்கள், அதிலும் வடக்கு, கிழக்கு, புலம்பெயர்ந்த தமிழர்கள், அந்ததந்த நாடுகள், அமைப்புக்களை சேர்ந்தவர்கள் என தமிழர்கள் மத்தியில் ஆயிரம் பிளவுகள். எல்லோருமே தனித்தவில் வாசிப்பவர்கள்தான். கூடவே, போட்டித்தவில் வாசிப்பவனை கவிழ்ப்பதற்கும் வழிபார்ப்பார்கள்.

கடந்த இரண்டு வருடங்களில் மனித உரிமைகள் பேரவையில் தமிழர்களின் அரசியல் பிளவு பகிரங்கமாக வெளிப்பட்டது. மனதஉரிமைகள் பேரவையில் தமக்கு நியாயம் கிடைக்க முயற்சித்ததைவிட, தமிழர்கள் தங்களிற்குள்ளேயே பிடுங்குப்படுவதிலேயே அதிக சக்தியை செலவிட்டார்கள்.

தமிழ் அரசியலில் ஒருங்கிணைந்த தன்மை ஏற்படாத வரை இப்படியான சர்வதேச அரங்குகளில் தமிழர்களால் வெற்றியடைய முடியாது. தமிழர் பிரதிநிதிகள் ஜெனீவாவிற்கு செல்வதில் காட்டும் அக்கறையை விட, தமிழர்களை ஒருமித்த சக்தியாக்கி, அதன் வீச்சை ஜெனீவாவில் செலுத்துவதே புத்திசாலித்தனம்.

கடந்த சில வருடங்களாக மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு காலஅவகாசம் வழங்கப்பட்டு வருகிறது. சர்வதேச அரசியல் நோக்கத்தினடிப்படையில் அங்கு தீர்மானங்கள் இயற்றப்படுகின்றன. அந்த சர்வதேச அரசியலில் தீர்மானிக்கும் சக்தியாக ஈழத்தமிழர்களால் ஆக முடியவில்லை. அந்த நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படும் ஒரு துரும்பாகவே தமிழர்கள் இருக்கிறார்கள். இந்த நிலை நீடிக்கும் வரை சர்வதேச அரங்குகளில் தமிழர்கள் நீதியை எதிர்பார்ப்பது பலனற்றது.

36வது மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய, உயர்ஸ்தானிகர் அல் ஹூசைன் இலங்கை தொடர்பாக சில அவதானங்களை செலுத்தியுள்ளார். இலங்கையின் மறுசீரமைப்பில் நீடிக்கும் மந்தகதி, பயங்கரவாத சட்டத்திற்கு மாறாக சர்வதேச தராதரங்களிற்கமைவான மாற்று சட்டம், 30/1 தீர்மானத்தில் இலங்கை ஒப்பிய வாக்குறுதிகளை நிறைவேற்றல், அதற்கான தெளிவான காலஅவகாசம் ஆகிவற்றை ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

அதாவது, கடந்த சில வருடங்களாக மனிதஉரிமைகள் பேரவையில் தமிழ் பிரதிநிதிகள் எந்தெந்த விடயங்களை சுட்டிக் காட்டினார்களோ, அதே விடயத்தை இன்று ஆணையாளர் சுட்டிக்காட்டுகிறார். பொறுப்புக்கூறல் என்பது அனைத்து மக்களினதும் உரிமைகளை பூர்த்தி செய்யும் அத்தியாவசிய காரியமாக பார்க்கப்பட வேண்டுமே தவிர, மனித உரிமைகள் பேரவையை சமாதானப்படுத்த மேற் கொள்ளும் நடவடிக்கையாக அணுகப்படகூடாதென இடித்துரைத் துள்ளார்.

ஆணையாளர் இப்பொழுதுதான் பிரச்சனையின் தார்ப்பரியத்தை புரிந்து கொண்டுள்ளார். பொறுப்புக்கூறல், நல்லிணக்க செயற்பாடுகளில் சிங்கள தனிமனிதர்கள் பலர் நேர்மையாக இருக்கிறார்கள். ஆனால் ஒரு தேசமாக அதை அவர்களால் முன்னகர்த்த முடியுமா என்பதே கேள்வி. சிங்கள தேசத்திடம் உள்ள இப்படியான பலவீனமான புள்ளிகளை தொட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச அரசியலை முன்னகர்த்தும் பொது வேலைத் திட்டங்களை தமிழர்கள் உருவாக்க வேண்டும். அப்படி செய்யாத வரை, சாதகமான களங்களிலும் கையாளப்படும் தரப்பாகவே இருப்போம்.

## அக்கம் பக்கம்

நந்தனார்

# லோட் நெல்சனை வீழ்த்திய மைத்திரி!

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் ஒரு புத்தகம் வெளியானது. ஜனாதிபதி தாத்தா (ஜனாதிபதி அப்பா) என்ற அந்த புத்தகத்தை எழுதியது ஜதுரிகா சிறிசேன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதல்வி.

தந்தையார் எதிர்கொண்ட சவால்கள், அவர் பற்றி தான் அறிந்த தகவல்கள், வரலாறு என மைத்திரி பற்றிய ஒரு ஆவணமாக இந்த நூல் இருக்குமென ஜதுரிகா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த நூல் இன்னும் கடைகளில் விற்பனைக்குவரவில்லை.வந்தபின்னர்தான் அதில் உள்ள விடயங்களை கூறலாம். ஆனால், அண்மையில் பொலன்னறுவவை சேர்ந்த ஒருவர் பழைய நினைவுகள் சிலதை கிளறியிருந்தார். அவர் குறிப்பிடும் நினைவுகளை எழுதாமல் மைத்திரியின் வாழ்க்கை வரலாறு முழுமையடையாது என்பது உண்மைதான்.

பொலன்னறுவ அப்பொழுது ஐக்கிய தேசியக்கட்சியின் அசைக்க முடியாத கோட்டை. லோட் நெல்சன் கொடிகட்டி பறந்து கொண்டிருந்தார். அவரை வீழ்த்திதான் மைத்திரி பொலன்னறுவவை சுதந்திரக்கட்சியின் கோட்டையாக்கினார். லோட் நெல்சனை வீழ்த்த மைத்திரியுடன் இணைந்து கடுமையாக பாடுபட்டவர் ஒரு முஸ்லிம். மர்ஹூம் இஸ்மாயில்தான் அந்த தோழன்.

அவர் ஒரு சிறிய அரிசி ஆலைக்கு சொந்தக்காரனாக இருந்தார். ISUZU TXD ரக லொறியொன்றும் (ரோஸி என பெயரிடப்பட்டிருந்தது) வைத்திருந்தார். இரண்டும்தான் அவரது சொத்துக்கள். மைத்திரியின் வெற்றிக்காக, அரிசி ஆலையை அடகு வைத்தார். லொறியை விற்றார்.

இஸ்மாயில் வீட்டில் அனேகமான பொழுதை மைத்திரிபால கழித்திருக்கிறார். இஸ்மாயில் யாருக்கும் அஞ்சாத அரசியல்வாதியாக இருந்தார். அவரது ஒரே குறிக்கோள் பொலன்னறுவவில் சுதந்திரக்கட்சியின் கொடி பறக்க வேண்டும், மைத்திரி வெல்ல வேண்டும்.

தீவிர ஐ.தே.க ஆதரவாளரான பண்டய்யாவை எல்லோரும் பச்சை பண்டயா என்றுதான் அழைப்பார்கள். கட்சியில் அவ்வளவு விசுவாசி. அவர் பயன்படுத்தும் உடை, பொருட்கள் அனைத்தமே பச்சையாக இருக்கும். ரணில் கட்சியை விட்டு விலகினாலும் நான் விலக மாட்டேன் என சொல்லிக் கொண்டு திரிவார். இன்றும் அதே பச்சை பண்டயாவாகவே இருக்கிறார்!

கட்சி போட்டியில் ஒருமுறை பண்டயாவை யாரோ “தூக்கி” விட்டார்கள். ஆளரவமற்ற இடத்தில் பண்டயாவை கட்டி, இரயில் தண்டவாளத்தில் போட்டு விட்டார்கள். இரயில் வந்தது. பண்டயாவிற்குமரணதூதன் கண்முன்னால் வந்தான். இரயில் மிக நெருக்கமாக வந்த பின்னர் பண்டயாவை தண்டவாளத்தில் இருந்து எடுத்து விட்டார்கள். அந்த மயிர்கூச்செறியும் சம்பவத்தில் இருந்து வழமைக்கு திரும்ப நீண்டநாள் எடுத்ததாக பண்டயா இப்பொழுது சிரித்துக் கொண்டு சொல்கிறார். தன்னை கட்டிப்போட்டது இஸ்மாயில்தான் என்கிறார் பண்டயா!

இப்படி அந்த நாளில் நடந்த சம்பவங்கள் ஏராளம் இருக்கிறது. ஜதுரிகா இதையெல்லாம் எழுதியிருப்பாரா? அது முழுமையான வரலாற்று நூலாக அமைந்துள்ளதா என்பதெல்லாம் விரைவில் தெரியவரும்.

# மசாஜ் நிலைய பெண்கள்

கடந்த வாரம் கொழும்பு பத்திரமுல்லையில் மசாஜ் நிலையம் என்ற பெயரில் இயங்கிய விபசார நிலையம் பொலிசாரால் முற்றுகையிடப்பட்டிருந்தது. நிலையத்தின் முகாமையாளர் மற்றும் அங்கு தங்கியிருந்து தொழில் புரிந்த இரண்டு யுவதிகள் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த விபசார நிலையம் கண்டறியப்பட காரணமாக இருந்ததே ஒரு பெண்தான். இந்த சம்பவம் பற்றி அவர் சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

காலை வேளையில் மகனை பாடசாலைக்கு விட்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயத்தில், சிக்னலில் வாகனத்தை நிறுத்தியிருக்கிறார். தற்செயலாக திரும்பி பார்த்தபோது, கண்ணாடி யன்னல் ஒன்றிற்குள் இருந்து பெண்ணொருவர் தட்டி கத்திக்கொண்டு இருந்திருக்கிறார். கண்ணாடியை கடந்து குரல் வெளியில் வரவில்லை. அவள் ஏதோ ஆபத்தில் இருக்கிறாள் என்பதை அந்த பெண்மணி புரிந்துள்ளார். இந்த சமயத்தில் வாகனங்கள் நகர்வதற்கு பச்சை விளக்கு எரிந்துள்ளது. வாகனத்தை முன்னால் நகர்த்தி, ஓரமாக நிறுத்தி விட்டு அந்த வீட்டிற்கு சென்றிருக்கிறார்.

20 வயதுக்குள் உள்ள மெலிந்த சிங்கள யுவதி அவள். மசாஜ் நிலைய விளம்பர பலகையுடன் இருந்திருக்கிறது. கண்ணாடிக்கு அருகில் சென்று அவளுடன் பேசியபோது, தன்னை அங்கு அடைத்து வைத்துள்ளதாகவும் தன்னை காப்பாற்றும்படியும் கேட்டு அழுதுள்ளாள். முதல்நாள் இரவு அவளை அங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். பூட்டப்பட்ட கதவை தட்டியும் யாரும் வரவில்லை.

உடனடியாக 119 பொலிஸ் அவசர இலக்கத்திற்கு அழைப்பேற்படுத்தி விடயத்தை சொல்லியுள்ளார். பதினைந்து நிமிடத்தில் பொலிசார் அந்த இடத்திற்கு வந்துள்ளனர். ஆனால் இதற்குள் அந்த யுவதி அங்கிருந்து காணாமல் போய்விட்டாள்.

பொலிஸ்காரரர் போய் கதவை தட்ட நடுத்தர வயது பெண்மணியொருவர் கதவை திறந்துள்ளார். பொலிசை கண்டதும் கதவை அடித்து சாத்தி விட்டார். பொலிசார் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு தகவல் சொல்லி பெண் பொலிசாரை வரவழைத்தனர். அவர்கள் வந்து சோதனை செய்ய, வீட்டின் பின்பக்கத்தால் அனைவரும் தப்பிச்சென்றிருந்தனர்.

பின்னர் நிலையத்தின் உரிமையாளர் கைதாகி, அங்கிருந்த பெண்களை அழைத்து வருமாறு பணிக்கப்பட்டுள்ளார். உதவிகோரிய சிறுமியை அடையாளம் காண்பிக்க, குறித்த பெண்மணியும் அழைக்கப்பட்டிருக்கிறார். நிலைய உரிமையாளர் அழைத்து வந்த பெண்களில், உதவிகோரிய யுவதி இல்லை. வேறு இரண்டு பெண்கள்தான் இருந்தனர். அவர்கள் தூர இடங்களில் இருந்து தொழிலுக்கு வந்தவர்கள். வீட்டுக்கு தெரியாமல் விபசாரத்தில் ஈடுபடுகின்றனர். அதில் ஒருவர் வெளிவாரியாக பட்டப்படிப்பை முடித்தவர்.

அந்த நிலையம் இதுவரை மூன்று முறை பொலிசாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது. ஒரு தடவை சட்டம் பயிலும் சகோதரிகள் அங்கிருந்து கைதாகியுள்ளனர். இறுதிவரை உதவி கோரிய யுவதி கண்டுபிடிக்கப்படவேயில்லை. அவருக்கு என்ன நடந்திருக்கும்?

ஏதோ சந்தர்ப்பத்தில் விபசார வலையமைப்பில் விழும் பெண்களை மீட்டுக்க நம்மிடம் ஏதாவது பொறிமுறை உண்டா?

## 20வது திருத்த சட்டம்:

# யாருக்கு வைக்கப்படும் பொறி?

நம்மாழ்வார்

20வது திருத்த சட்டத்தை எப்படியாவது நிறைவேற்றி விட வேண்டுமென அரசாங்கம் விடாப்பிடியாக நிற்கிறது. அரசாங்கத்தின் விடாப்பிடி ஒரு பக்கம், அதற்கு எதிரான கருத்துக்கள் ஒரு பக்கமென இன்றைய அரசியல் சூடாக நகர்கிறது. ஒரு சர்ச்சைக்குரிய சட்டத்திருத்தத்தை நிறைவேற்ற அரசாங்கம் ஏன் முயற்சிக்கிறது?

மிக நேர்மையாக, வெளிப்படையாக சொல்வதானால் அரசாங்கம் மாகாணசபை தேர்தல்களை பிற்போட விரும்புவது ஒரு காரணம். இருக்கும் நிலைமைகளில் ஒரு தேர்தலை எதிர்கொள்ள அரசு தயாராக இல்லை. தெற்கில் மஹிந்தவின் மீள் எழுச்சி, அரசுக்கு எதிரான விமர்சனங்களாக கணிசமானளவிற்கு மாற்றமடைந்து வருகிறது. இப்படியொரு மாற்றத்தை அரசாங்கம் இவ்வளவு விரைவில் எதிர்பார்த்திருக்காது.

இந்த வருடத்தில் ஆரம்பித்து 2019 வரை மாகாணசபைகளின் ஆயுள்காலம் நீடிக்கிறது. இப்பொழுது மாகாணசபை தேர்தல்களை நடத்த அரசாங்கம் தயாரில்லை. இதில் வேடிக்கையான ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். இப்பொழுது தேர்தலை நடத்துவதால் அரசுக்கு சிக்கலில்லாத ஒரேயொரு

**புதிய உள்ளூராட்சி சட்ட திருத்தத்தின் படி தொகுதி வாரியாக 60 வீதமானவர்களும், எஞ்சிய 40 வீதமானவர்களும் விகிதாசார முறையிலும் தேர்வாகவுள்ளனர். இன்றைய இலங்கையின் தேர்தல் முறைமை சர்வாதிகாரிகளையும், இனவாதிகளையுமே உருவாக்க வல்லது.**

மாகாணம் வடக்குத்தான்.

20வது திருத்த சட்டத்தின் சில கூறுகள் ஜனநாயக விழுமியங்களிற்கு எதிராக இருந்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை பாராளுமன்றம் கலைக்கும் அதிகாரம் உள்ளதென்பது மேலோட்டமான பார்வைக்கு ஜனநாயக தன்மையாக தெரியலாம். பாராளுமன்றத்தை ஒரு உயரிய சபையாக கருதி, இப்படியொரு வரைபை அரசு தயாரித்திருக்கலாம். ஆனால் வரலாற்றில் பலவிதமான பாராளுமன்றங்களை இலங்கை சந்தித்திருக்கிறது. எதிர்க்கட்சிகளில் இருந்து ஆட்களை உருவி, மகிந்த ராஜபக்ச ஒரு பாராளுமன்றத்தை உருவாக்கி வைத்திருந்தார். அங்குதான் 18வது திருத்தம் அங்கீகாரம் பெற்றது.

மாகாணசபைகளில் எதிர்ப்பு கடுமையான பின்னர் இதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. புதிய மாற்றங்கள் 20வது திருத்தத்தில் ஜனநாயககூறுகளை எவ்வளவு தூரம் உள்ளீர்த்துக் கொண்டிருக்கும் என்பது விவாதத்திற்குரியது. 20வது திருத்தம் தொடர்பாக தமிழ் அரசியல் பரப்பில் முறையான உரையாடல்கள் நிகழாததே இதற்கு காரணம். வெளிப்படையான உரையாடல் மூலமே சிக்கலான அரசியல் பொறிகளை கடந்த செல்லலாம்.

20வது திருத்தம் இலங்கைக்கு அவசியமா, உள்ளூராட்சி ஆட்சிமுறையை பலப்படுத்துமா என்ற கேள்விகளை வெளிப்படையாக எழுப்பி, வெளிப்படையரக உரையாட வேண்டும். 20வது திருத்தத்தின் உள்ளடக்கம் இன்னும் முழுமையாக பகிரங்கமாகவில்லை. இதன்பின்னர்தான் இது குறித்த தெளிவான உரையாடல் ஆரம்பிக்கப்படலாம். ஆனால் இப்பொழுது வெளியாகியுள்ள சில பரிந்துரைகள் மாகாணசபைகளின் அதிகாரங்களை பறிப்பதாக எழும் குற்றச்சாட்டு சரியானதல்ல.

மாகாணசபைகளின் அதிகாரங்கள் என்பது 13வது திருத்தத்தில் நிரலில் குறிப்பிடப்பட்டவை. அவற்றை 20வது திருத்தம் குறுக்கீடு செய்யவில்லை. ஆனால், இதற்காக 20வது திருத்தத்தை உடனடியாக ஆதரிக்க வேண்டியதில்லை. அதை மிக அவதானமாகவே அணுக வேண்டும். 20வது திருத்தம் நல்லதா, தீமையானதா என்ற முடிவிற்கு உடனடியாக வருவது முறையல்ல.

20வது திருத்தம் தொடர்பான கருத்தாய்வுகூட அரசாங்கத்திற்கு ஒரு பலப்பரீட்சையாகத்தான் இருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக்கட்சியும் தெளிவான பெரும்பான்மையை கொண்டுள்ள மாகாணசபைகளில் எந்த சிக்கலுமில்லாமல் திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேல், சப்ரகமுவ, கிழக்கு, ஊவா, வடமத்திய மாகாணங்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளன. வடக்கின் நிலைமை இன்னும் தெரியவரவில்லை. அனேகமாக வடக்கு அரசியலின் பலப்பரீட்சைக்கான ஒரு களமாக இது மீண்டும் அமையுமா தெரியவில்லை. முதலமைச்சர் அதை எதிர்க்கிறார், அவைத்தலைவர் எதிர்க்கவில்லை. கட்சியின் நிலைப்பாட்டிற்கு அவர் முக்கியத்துவம் கொடுப்பார். அதனால் மீண்டும் ஒரு முட்டி மோதலை வடமாகாணசபையில் எதிர்பார்க்கலாம். தென் மாகாணசபை திருத்தத்தை நிராகரித்து விட்டது.

தீவிர சிங்கள அடித்தட்டு மக்களை அதிகமாக கொண்ட தென்மாகாண சபைதான் மகிந்த அண்ட் கோவின் தளம். அங்கு அவர்கள் பலமாக இருக்கிறார்கள் என்பதை திருத்த வாக்கெடுப்பு புலப்படுத்தியிருக்கிறது.

20வது திருத்தத்திற்கு எப்படியான ஜனநாயக முலாம் பூசினாலும் இது மகிந்த ராஜபக்ச என்ற சவாலை எதிர்கொள்ள உருவாக்கப்பட்ட ஒரு உத்திதான். ஏற்கனவே எல்லை மீள் நிர்ணயம், தேர்தல் சீர்திருத்தம் என 2,3 வருடங்களாக உள்ளூராட்சி தேர்தல்கள் பின்தள்ளப்பட்டு வருகிறது. இதனால் அரசாங்கமாக இன்னொரு தேர்தலை பின்தள்ள விரும்பவில்லை. ஒரு சட்ட ஏற்பாட்டின் மூலம், இதை மாகாணசபைகளின் சம்மதத்துடன் பின்தள்ள விரும்புகிறது.



உள்ளூராட்சி தேர்தல்களை பிற்போடுவதன் மூலம், தென்னிலங்கை அதிதீவிர வாக்காளர்களை நெகிழச் செய்யலாமென அரசாங்கம் நினைக்கிறது. மகிந்த ராஜபக்சவை, அதிதீவிர சிங்கள தேசியவாத அரசியல் போக்கை தளர்வடைய செய்தால் மாத்திரமே இந்த அரசாங்கத்தின் இருப்பு நீடிக்கும். அல்லது பண்டாரநாயக்கா யுகம் போல ராஜபக்சக்களின் யுகம் ஒன்றிற்குள் இலங்கை புகும் அபாயமுள்ளதாக அரசு அஞ்சுகிறது. இதற்காக அரசாங்கம் முதலில் உள்ளூராட்சி திருத்த சட்டத்தை அறிமுகப்படுத்தியது. இப்பொழுது 20வது திருத்தத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இரண்டாம் உலகப்போரில் ஹிட்லர் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அங்கு ஏற்படுத்தப்பட்ட தேர்தல் மறுசீரமைப்பில் முக்கியமானது 6040 முறை. அதாவது இன்று இலங்கையில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் உள்ளூராட்சி தேர்தல் முறைமை, ஹிட்லர் தோற்கடிக்கப்பட்ட பின் ஜேர்மனியில் கையாளப்பட்ட உத்தி. ஜேர்மனிய பெரும்பான்மை மனங்களில் இறுகிப்போயிருந்த தீவிர நாசி மனநிலையை உடைத்து, ஜேர்மனியை ஜனநாயக நீரோட்டத்திற்குள் கொண்டு வர இந்த முறையை உலகம் கையாண்டது.

புதிய உள்ளூராட்சி சட்ட திருத்தத்தின் படி தொகுதி வாரியாக 60 வீதமானவர்களும், எஞ்சிய 40 வீதமானவர்களும் விகிதாசார முறையிலும் தேர்வாகவுள்ளனர். இன்றைய இலங்கையின் தேர்தல் முறைமை சர்வாதிகாரிகளையும், இனவாதிகளையுமே உருவாக்க வல்லது. விகிதாசார அடிப்படையில் நாற்பது வீதமானவர்கள் அரசியலுக்கு வரும்போது, அரசியலில் நெகிழ்வுத்தன்மை ஏற்படும்.


இந்த இரண்டு திருத்தங்களுமே உண்மையில் மகிந்தவிற்கான பொறிகள். தேர்தல்கள் பின்னால் செல்வது ஒரு பிரச்சனை. விகிதாசார தேர்தல் முறைமை அகற்றப்பட்டால் மகிந்தவிற்கு வாய்ப்பான அரசியல் சூழல் உருவாகுவதற்கும் வாய்ப்பு குறைவு. இனப்பிரச்சனை தீர்வு முயற்சிக்கு உள்ளூராட்சி திருத்த சட்டம் அத்தியாவசியமான ஒரு படிக்கல். தெற்கு அரசியலை நெகிழ செய்தால் மாத்திரமே, இனப்பிரச்சனையை தீர்க்கலாம். உள்ளூராட்சி திருத்த சட்டம் தெற்கை மட்டுமல்ல, எந்த இனத்திலும் அதிதீவிர அரசியல் கருத்துநிலையை பேணாது. நெகிழ்ச்சியடைய செய்துகொண்டிருக்கும். வடக்கிற்கும் பொருந்தும்.


புதிய அரசியல் யாப்பு பணிகள் முடிவடைந்து மக்களின் கருத்தறிய விடப்படும்போது, நிராகரிக்கப்படாத ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென அரசு நினைக்கிறது. உள்ளூராட்சி திருத்த சட்டம் ஏற்படுத்தும் அரசியல் நெகிழ்ச்சி, சர்வஜன வாக்கெடுப்பிற்கு சாதகமாக இருக்கலாமென்பதே அரசின் எண்ணம். சம்பந்தன் சர்வஜன வாக்கெடுப்பை கோருவது ஒரு பொறி, இது சிங்கள மக்களை நெருக்கடிக்குள் தள்ளிவிடுமென தயான் ஜெயதிலக அண்மையில் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். சர்வஜன வாக்கெடுப்பில் சிங்கள மக்கள் தீர்வு முயற்சிகளை நிராகரித்தால், அது தமிழர்கள் பிரிந்து செல்லும் அதிகாரத்தை கோரவோ, அதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவோ கூடிய சூழலை ஏற்படுத்திவிடும் என அவர் எச்சரித்துள்ளார்.


இப்படியொரு நெருக்கடியை சந்திக்க அரசு விரும்பாது. புதிய அரசியல் யாப்பை சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்ளும் ஒரு புறச்சூழலை ஏற்படுத்த அரசாங்கம் விரும்புகிறது. அதனால்தான், உள்ளூராட்சி திருத்த சட்டத்திற்கு துணையாக, 20வது திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறது.

இதேவேளை, 20வது திருத்த சட்டத்தை ஆதரிப்பதென தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அறிவித்திருக்கிறார். ஆனால் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களிடம் அப்படியான அபிப்பிராயம் இல்லை. ரெலோ, புளொட் இன்னும் தெளிவான முடிவை எடுக்கவில்லை. சுரேஷ் பிரேமச்சந்திரன் எதிர்த்திருக்கிறார். அவர் 20வது திருத்தத்தை எதிர்த்தாலும், அவரது கட்சி முக்கியஸ்தர் இரா.துரைரெட்ணசிங்கம் கிழக்கு மாகாணசபை வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களித்திருக்கிறார். 20வது திருத்தம் தொடர்பாக கூட்டமைப்பின் பங்காளிகளிடமே ஒருமித்த கருத்தில்லை, அதற்கு காரணம் கட்சிகளிடையே இது பற்றிய உரையாடல் நடக்கவில்லையென்பது சகிப்பதற்கு சற்று சிரமமான ஒரு சங்கதிதான்.

இனப்பிரச்சனை தீர்வு, புதிய அரசியல் மாற்றங்களுடன் தொடர்புடைய இப்படியான அத்தியாவசிய விடயங்களிலும் கூட்டமைப்பாக உட்கார்ந்து சச்சரவின்றி பேசி தீர்க்க முடியாவிட்டால், ஒரு தீர்வு கிடைப்பதாக இருந்தால் அதை எப்படி கையாள போகிறார்கள்? அதே நிலைமை நீடித்தால், இனப்பிரச்சனை தீர்விற்கான ஒருஏதுநிலையை ஏற்படுத்தவும், தீர்விற்கு எதிரானவர்களிற்கான பொறியாகவும் அமைக்கப்படும் அரசிலமைப்பு திருத்தங்களில் வேட்டையின் பங்காளிகளான தமிழர்களே சிக்கிக்கொள்ள மாட்டார்கள் என்பதற்கும் உத்தரவாதம் கிடையாது.





# போலி உறுதி மூலம் அரசகாணி மோசடி... அரச விடுதியில் சாராய விநியோகஸ்தர்!

## மட்டக்களப்பில் அரங்கேறும் அதிகார துஷ்பிரயோகம்

தீபம் CID

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றுவரும் பல்வேறு ஊழல் மோசடிகளை வெளிச்சமிடும் எமது தொடர் செயற்பாட்டில் இந்த வாரம் முக்கிய மோசடியொன்றை வெளிச்சமிடுகிறோம். அரச காணியொன்றை வெளிநாட்டில் வசிக்கும் ஒருவர் போலியான உறுதிப் பத்திரம் மூலம் கையகப்படுத்தியுள்ளார். இந்த மோசடியான செயற்பாட்டிற்கு அரச அதிகாரிகள் பலரும் துணை போயுள்ளார்கள் என்பதே அதிர்ச்சியளிக்கும் விடயம்.

மட்டக்களப்பிற்கு வடக்கே அமைந்துள்ள கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட காயான் கேணி கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள புல்லாவி எனும் இடத்தில் 31யு, 3 றூட், 35 பேர்ச் விஸ்தீரணமுடைய அரச காணியே மோசடியாக அபகரிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது வெளிநாடு ஒன்றில் வசிக்கும் மட்டக்களப்பை சேர்ந்த பெரியதம்பி குமணதாஸ் என்பவரால் இரண்டு ஆட்சி உறுதிகள் எழுதப்பட்டு அத்துமீறி வேலி அடைக்கப்பட்டுள்ளது. இது முறையற்ற விதத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலம், அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்த மோசடி நடைபெற்றுள்ள தென்பதற்கான முழுமையான ஆதாரங்களை தீபம் திரட்டியுள்ளது.

இவ் ஆதனம் தொடர்பாக பெரியதம்பி குமணதாஸினால் சமர்ப்பிக்கப்பட்ட மூல ஆவணம் 1984 ம் ஆண்டு எழுதப் பட்டுள்ளது. இந்த ஆவணத்துடன், 2015இல் காணியை பதிவுசெய்ய கோறளைப் பற்று பிரதேசசெயலகத்தை அணுகிய போது, அது அரசகாணியென கூறி விண்ணப்பத்தை நிராகரித்துள்ளனர். மீளவும் 29521 ஆம் இலக்க 11.09.2015ம் திகதிய போலி ஆட்சி உறுதி மூலம் எழுதப்பட்டுள்ளது. இதனையும் பிரதேசசெயலகம் நிராகரித்துள்ளது.

தமது காணியை, அரச காணியென கைப்பற்ற முயற்சிப்பதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் குமணதாஸ் தரப்பால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. குமணதாஸின் அடையாள அட்டை இலக்கமும், உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாள அட்டை இலக்கமும் வேறு வேறாக இருப்பதை காரணம் காட்டி, மனிதஉரிமை ஆணைக்குழு நடவடிக்கை எடுப்பதை தவிர்த்து விட்டது. இதேவேளை, தனியாரின் இந்த மோசடி நடவடிக்கை குறித்து நிதிக்குற்ற விசாரணை பிரிவு மற்றும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு ஆகியவற்றிலும் பொதுநலன் கருதிய முறைப்பாடு சமூக ஆர்வலர்களால் பதிவுசெய்யப்பட்டுள்ளது.


மேற்குறித்த அரசகாணி தொடர்பாக 1984ம் ஆண்டு மற்றும் 2015ம் ஆண்டு ஆகிய இரு வேறுபட்ட (31 வருட இடைவெளியில்) கால இடைவெளியில் மோசடியான முறையில் போலியான இரு ஆட்சி உறுதிகள் தயார்ரிக்கப்பட்டுள்ளன. பெ.குமணதாஸ் என்பவர் 1974ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பிறந்ததாக அடையாள அட்டை சமர்ப்பித்திருக்கிறார். 1984ம் ஆண்டை குறிப்பிட்ட ஆட்சி உறுதி தயாரிக்கப்பட்டுள்ளது. 2015 ம் ஆண்டு மீளவும் போலியான ஆட்சி உறுதி எழுதி இக் காணிக்கான உரிமை கோரப்படுகிறது.

மாவட்ட காணி பதிவாளர் க.திருவருள் பிரதேச செயலாளருக்கு கடிதமொன்று (மட்/கா.ப/ப.சே/பொது/2014 ஆம் இலக்க 2015.11.17ம் திகதி) அனுப்பியிருந்தார். இந்த காணி அரச காணியா அல்லது தனியார் காணியா என்பதை உறுதிசெய்யுமாறு அதில் கோரப்பட்டிருந்தது.


நிலஅளவை திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட ITRACING NO BT/ KPN/2013/LIED.020 படி துண்டு இலக்கம் 643 வடக்கு எல்லையாக காட்டப்பட்டு Pullavi Poomi Scrup juncle, State vd என

தொடர்ச்சி 7-ம் பக்கம்...


**இந்த காணி அரசகாணியென உறுதி செய்யப்பட்ட பின்னரும், அதை மீட்க அதிகாரிகள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? புதிதாக நியமனம் பெற்ற பிரதேச செயலாளர் அந்த முறைப்பாடு தொடர்பாக மேலதிகமாக என்ன நடவடிக்கை எடுத்தார்?**



1984 ஆதன உறுதி



பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம்




21015 ஆதன உறுதி




# மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் புத்தூர் போராட்டம்!

✎ மு.பரமேஸ்வரன்

கடந்த இரண்டு தீபம் இதழ்களில் மயான விவகாரம் தொடர்பாக எழுதப்பட்டு வந்த கட்டுரைகளை படித்து வந்தேன். இந்த விவகாரத்தை ஒரு விவகாதமாக முன்னெடுக்க தீபம் விரும்புவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையில் அது பாராட்டத்தக்கது. ஆனால், விவாதம் என்ற பெயரில் தர்க்க நியாயமற்ற மோசமான கருத்துக்களை கக்க இடமளிக்காமல் பார்த்து கொள்ள வேண்டும். கருத்து நாகரிகத்துடன் நாம் தர்க்கித்தால்தான் உண்மைகளை கண்டடையலாம். அல்லது மோசமான எதிர்நிலைக்கு சென்று, பகையை வளர்ப்பதிலேயே முடியும்.

இதனால் கடந்த இரண்டு இதழ் கட்டுரைகளுடன் சில விடயங்களில் என்னால் உடன்பட முடியவில்லை. சில விடயங்களில் உடன்பாடில்லையென்பதே மிகுதி விடயங்களில் உடன்பாடு உள்ள தென்பதை உறுதிசெய்து விடும். உடன் பாடற்ற புள்ளிகளை தொட்டு சில விடயங்களை குறிப்பிடலாமென நினைக் கிறேன்.

முதலாவது, எல்லா தர்க்க நியாயங் களிற்கும் அப்பால் மக்களிற்கு வாழிடம் அவசியம். இதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். வாழிடம் இல்லாத மக்கள் கூட்டத்தின் துயரை புரிந்துகொள்ள வேண்டும். இன்று ரோஹின்ஞா முஸ்லிம்கள் நாடற்று அவலப்படுவதாக கண்ணீர் விடுகிறோம். இனமாக நமது நிலையென்ன என்பதற்கு அப்பால், நமக்குள்ளேயே ஒரு சமூகம் வாழ நிலமற்று

**இலங்கை இடதுசாரிகளிற்கு அமெரிக்கா, இந்தியா என்றாலே உடலெல்லாம் பற்றியெரியும். தமிழ், சிங்கள இடதுசாரிகள் அனைவரின் நிலையும் இதுதான். உலக அரசியலை புரிந்துகொள்ள முடியாமல், வறட்டுவாதம் பேசுகிறார்கள் என்பதுதான் எனது கருத்து. அவர்களிடம் மக்கள் அரசியலை புரிந்துகொள்ளும் தீர்க்கமான பார்வை கிடையாது.**

அவஸ்தைப்படுகிறதென்பது எவ்வளவு துயரமானது? அந்த மக்களின் துயரத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில் மயானமா, குடியிருப்பா முதலில், வந்தது என்ற விவாதங்கள் பிரச்சனையை மேலும் அதிகப்படுத்தும். இது மக்களின் வாழ்வாதார சிக்கல் என்ற பொறுப்புணர்வுடன் அனைவரும் சிந்தித்தால் பிரச்சனை தீர்ந்தது.

மனிதன் வெறும் இரத்தத்தாலும் சதையாலும் ஆனவன் அல்ல. அவனை உணர்வுகளும், நம்பிக்கைகளும்தான் இயக்கிக் கொண்டிருக்கிறது. மத, தேச, இன அபிமானங்கள் உள்ளிட்ட பல்வேறு அபிமானங்களால் உலகிலுள்ள எல்லா மனிதர்களும் ஆனவர்கள். இதில் பிற்போக்கான அபிமானங்களை கடந்து வந்துவிட வேண்டும். நமது அபிமானங்கள் இன்னொருவரது வாழ்க்கைக்கு இடை யூறாக இருக்காமலும் பார்த்து கொள்ள வேண்டும்.

மயானமா, குடியிருப்பா என்ற விவா தமும் அவசியமல்ல என்பதையும், மனிதர்களின் அபிமானத்தையும் குறிப் பிட்டுள்ளேன். ஏனெனில், இந்த இரண்டு புள்ளிகளையும் இணைப்பதே இந்த விவகாரத்தில் தீர்வாக இருக்க முடியும்.

உறவுகளின் அறுபடாத தொடர்ச்சிதான் நமது வாழ்க்கை. மூதாதையரின் வாழ்வும், மரணமும் நமது வாழ்வின் மாபெரும் சம்பவங்கள். இந்த அடிப்படையில் மயானமொன்று வெறுமனே உட்கார்ந்து விட்டு எழுந்து செல்லும் இடமல்ல. இந்தவகையில் மயானத்திற்கு ஆதரவான குரல்களையும் புரிந்து கொள்ளலாம்.

மயானத்திற்கு அருகில் குடியிருத்தப் பட்ட மக்கள் ஏழ்மையானவர்கள். புத்தூர் கலைமதி கிராமம் மட்டுமல்ல, அயலிலுள்ள வேறு சில கிராமங்கள் அனைத்துமே கூலித்தொழிலாளர்களை கொண்டவை. குடாநாட்டின் பல பகுதிகளிற்கு தொழிலாளர்களை வழங்கும் கிராமங்கள். நிலம், வாழ்வாதாரம் இல்லாமல் அந்த மக்கள் புதிய வாழ்க்கைக்கு செல்வதற்கு பெரும் சிரமப்படுகிறார்கள். எல்லா சமூகத்திலும் புதிய தலைமுறை சடுதியான மாற்றத்தை சந்தித்த இன்றைய காலத்தில், இந்த பகுதியில் மட்டும் கணிசமான மாற்றம் நிகழவில்லை. அந்த சமூகத்தால் மட்டும் தனித்து போராடி நிமிர முடியாமலிருப்பதே காரணம்.

இந்த இடத்தில்தான் மத்திய, மாகாண அரசுகளினதும் புலம்பெயர்ந்த தமிழர்களினதும் பங்களிப்பு அவசியம். இந்த மக்கள் தொடர்பாக மத்திய, மாகாண நிர்வாகம் தெளிவான முடிவை எடுப்பது அவசியம்.

இந்த பகுதி குறுகிய நிலப்பரப்பையும், அதிக மக்கள் தொகையையும் கொண்டது. பெருகிவரும் இந்த கிராம சனத்தொகைக்கு அங்கு காணி வழங்குவதென்பது சாத்திய மில்லாத காரியம். எனவே, வேறு இடங்களில், தொழில் வாய்ப்புக்களுடன் காணியில்லாத மக்களை குடியமர்த்தும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கலாம்.

கொழும்பில் சேரிகளை அகற்றியபோது போலியகொடவில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பு தொகுதி அமைக்கப்பட்டது. இதற்கு முதலில் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. சேரி வாழ்க்கைக்கு பழக்கப் பட்டவர்கள், குடியிருப்பிற்கு செல்ல அஞ்சினார்கள். ஆனால் இன்று அந்த குடியிருப்பு தொகுதி மக்கள் அமைதியாக இருக்கிறார்கள். இதைபோல யாழில் சில குடியிருப்பு திட்டங்கள் ஆரம்பிக்கலாம். குடாநாட்டில் அரசாங்கம் திட்டமிடும் தொழிற்துறையுடன் இணைந்ததாக, இந்த குடியிருப்பு அமைக்கப்பட்டு, அந்த மக்களிற்கு தொழில் வழங்குவதன் மூலம் தீராத இருட்டில் இருந்த அவர்களின் குழந்தைகளையாவது மீட்டெடுக்கலாம். இதுதான் நமக்கு முன்னாலுள்ள பிரதான பணி.

புதிய ஜனநாயக கட்சியின் பிரமுகர் காணியை மக்களிற்கு விற்பனை செய்திருந் தால் அது கண்டிக்கத்தக்கதுதான். இதுபற்றிய சுயவிமர்சனம் இல்லாமல் அவர்கள் போராட்டத்தில் தொடர்பது தர்க்கவலிமையற்றது. புதிய ஜனநாயக கட்சி தனது பெரும்பாலான செயற்பாடுகளை தர்க்க வலிமையற்றுத்தான் செய்துள்ளது. அதன் முன்னோடி சண்முகதாசனும் அப்படித்தான். தேசிய இனப்பிரச்சனையை அவரால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. ஒரு இனக்குழுமம் எப்படி தன்னை தேசிய இனமாக உணர்கிறதென உலகில் புதிய சிந்தனைகள் தோற்றம் பெற தொடங்கிய காலத்தில், அதையெல்லாம் கணக்கில் எடுக்காமல், ஐந்தில் ஒன்று இல்லையே என விளக்கமளித்தார்கள்.

*1966 ஒக்ரோபர் புரட்சி, 1969 மேதின* ஊர்வலங்களில் பங்கேற்ற தோழர்கள் தாக்கப்பட்டு, படுகாயமடைந்த நிலையில் இருந்த போது, அவர்களை பார்க்காமல் சண்முகதாசன் சீனாவிற்கு பயணமானார். அவரை பொறுத்தவரையில் சீனாவிற்கு செல்வதுதான் தலைசிறந்த இடதுசாரிய செயற்பாடு என நினைத்தார்.

சண்முகதாசனில் இருந்து பிரிந்து கே.ஏ.சுப்ரமணியம் தலைமையில் புதிய ஜனநாயக கட்சி செயற்பட தொடங்கிய பின்னர், 1982 தேர்தலில் சிறிமாவோவை (கொப்பேகடுவ) ஆதரித்தனர். கொப்பேகடு வவின் வெற்றிக்காக சங்கானையில் பொதுக்கூட்டமும் நடத்தினார்கள். ஒரு இடதுசாரிய அமைப்பின் பார்வையில் சிறிமாவோவில் சாதகமாக தெரிந்த கூறுகள் என்ன?

பொதுவாகவே இலங்கை இடதுசாரி களிற்கு அமெரிக்கா, இந்தியா என்றாலே உடலெல்லாம் பற்றியெரியும். சோவியத் அமெரிக்க, சீனா இந்தியா மோதல்களின் விளைவது. தமிழ், சிங்கள இடதுசாரிகள் அனைவரின் நிலையும் இதுதான். உலக அரசியலை புரிந்துகொள்ள முடியாமல், வறட்டுவாதம் பேசுகிறார்கள் என்பதுதான் எனது கருத்தும். அவர்களிடம் மக்கள் அரசியலை புரிந்துகொள்ளும் தீர்க்கமான பார்வை கிடையாது. அதுதான் கட்சியின் பெரும் வீழ்ச்சிக்கு காரணம்.

கலைமதி விடயத்தில் புதிய ஜனநாயக கட்சியினர், தம் மீதான விமர்சனங்களிற்கு பதிலளிக்க வேண்டும். அதுதான் அரசியல் கட்சியாக அவர்கள் வெளிப்படுத்தும் ஒழுக்கம். மயான விவகாரம் வன்முறை யாக உருவெடுத்ததற்கு கட்சியின் முக்கியஸ் தர்களும் பின்னணியில் இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டும் உள்ளது. இடதுசாரிய கட்சி முழுமையாக ஆதிக்கம் செலுத்தும் கிராமம் முன்னுதாரணமாக நடந்து கொண்டிருக்க வேண்டியது அவசியம். ஆனால் புதிய ஜனநாயக கட்சி அதை செய்யவில்லை. கட்சியின் நடவடிக்கைகள்தான் போராட் டத்தை வலுவிழக்க செய்கிறது என்ற விமர்சனம் சரியானதுதான். இந்த போராட்டத்திலிருந்து கட்சி வெளியேறி, முழுமையாக மக்களின் கையில் ஒப்படைப்பதே முறை. அதுதான் அந்த மக்களிற்கு கட்சி செய்யும் நியாயமாகவும் இருக்கும்.



3-ம் பக்க தொடர்ச்சி...

நால்வர் மாதாந்தம் மூன்று மில்லியனிற்கு அதிகமான வருமானம் பெறுகிறார்கள்.

நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக (CEO) சுரேன் ரத்வத்த 2015 ஒக்ரோபரில் இருந்து பணியாற்றி வருகிறார். பிரதமரின் ஆலோசகராக உள்ள சரித்த ரத்வத்தவின் சகோதரரே சுரேன். இவரது மாத வருமானம் மூன்று மில்லியனிற்கும் அதிகமானது. அதிகாரிகளின் மாத வருமானம் பற்றிய தகவல்களை அறிய, தகவல் அறியும் சட்டத்தின் கீழ் சிறிலங்கள் விமான நிறுவன விமானிகள் சங்கம் விடுத்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பிரித்தானியாவில் வசித்த சிவராமசந்திரன் தற்போது இந்த நிறுவனத்தின் பிரதம வணிக அதிகாரியாக (CCO) பதவி வகித்து வருகிறார். தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் 2016 ஜனவரியில் பதவியேற்று கொண்டார். இரண்டு வருட ஒப்பந்தத்தில் இந்த பதவியை வகித்து வருகிறார். மாதாந்தம் 9,500 பவுண்ஸ் ஒப்பந்தத்தின் பிரகாரம் பெறுகிறார். தற்போதைய நாணயமாற்று விகிதத்தில் இது அண்ணளவாக 20 இலட்சம் ரூபாவாகும்.

இந்த அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமான பல்வேறு கொடுப்பனவுகளை பெற்றுவருகிறார். அவர் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரியையும் விமான நிறுவனமே செலுத்தி வருகிறது. வசிப்பிடத்திற்காக 250,000 ரூபா கொடுப்பனவு, எரிபொருளுடன் உத்தியோகபூர்வ வாகனம், சாரதி, இலவச விமானப்பயணங்களிற்கான செலவையும் சிறிலங்கன் விமான நிறுவனமே வழங்கி வருகிறது. நிறுவனத்தை இலாபத்தில் இயங்க வைக்க தேவையான வணிக மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இவருடையது.

2016 ஜனவரி 16ம் திகதி சிவராமச்சந்திரன் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். 2017 யூலை மாதம் வரையான 19 மாதங்கள் சிறிலங்கன் விமான நிறுவனத்திடம் இருந்து 4 கோடி 18 இலட்சத்து 92 ஆயிரத்து



சிவராமச்சந்திரன்



சுரேன் ரத்வத்த

166 ரூபாவை பெற்றுக்கொண்டுள்ளார்.

சிறிலங்கன் விமான நிறுவனத்தில் மாதாந்தம் 3 மில்லியனிற்கும் அதிக வருமானத்தை பெறும் நான்கு அதிகாரிகள் உள்ளனர் என்ற தகவலை கொழும்பு ஊடகமொன்றும் அண்மையில் வெளிப்படுத்தியிருந்தது. பெருந்தொகை பணத்தை சம்பளமாக பெறும் நான்கு அதிகாரிகள் கடமையில் இருந்தும், நிறுவனம் தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்திய நிறுவனத்திடம் இருந்து குத்தகைக்கு பெற்ற A 320 என்ற விமானத்தை உரியகாலத்தில் மீள ஒப்படைக்கா முடியாமல் போனதால் நிறுவனத்திற்கு சுமார் 2 மில்லியன் அமெரிக்க டொலர் மேலதிக செலவு ஏற்பட்டதை ஊடகமொன்று அண்மையில் வெளிப்படுத்தியிருந்தது. கடந்த ஆட்சிக்கலாலத்திலும் வினைத்திறனில்லாத நிர்வாகம் இயங்கியதாலேயே நிறுவனம் பாரியளவான வீழ்ச்சியை சந்திக்க வேண்டியேற்பட்டது. இந்த நிலைமை தற்போதைய ஆட்சியிலும் நீடிப்பதையே தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பெருமளவு கடன்சுமையுள்ள நிறுவனத்திற்கு பெருந்தொகை சம்பளத்தில் அதிகாரிகள் தேவையா, முறையன முகாமைத்துவம் இன்மையால் ஏற்படும் இழப்புக்களிற்கான வரிச்சுமைகளை மக்கள் தொடர்ந்து சுமப்பதா என்ற விமர்சனம் பரவலாக எழத் தொடங்கியுள்ளது. ●

3-ம் பக்க தொடர்ச்சி...

சபைக்கு அதனை வழங்குவதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி பன்னாட்டு குளிர்பான நிறுவனத்திற்கு நீர் வழங்குவது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. நீர் சுத்திகரிப்பு என்பதை குறிப்பிட்டால் போதும் என்பதால், பன்னாட்டு நிறுவனத்திற்கு நீர் வழங்குவது பற்றி குறிப்பிடாமல் விடப்பட்டிருக்கலாம்.

நீர் வழங்கல் வடிகாலமைப்புசபையின் திட்டத்தில் 1000 லீற்றர் கடல்நீரை சுத்திகரிக்க 1 அமெரிக்க டொலர் (சுமார் 164 ரூபா) செலவாகும். இது திட்டத்தின் மொத்த உற்பத்தி செலவுடனும் இணைந்தது. தனியே நீர் சுத்திகரிப்பிற்கு சுமார் 60 ரூபா செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. ரகுபா நிறுவனத்தின் முன்மொழிவில் சுத்திகரிக்கப்பட்ட 1000 லீற்றர் தண்ணீர் 90 ரூபா வீதம் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு வழங்கப்படும். எனினும் பொதுமக்கள் நாடு முழுவதுமுள்ள பொதுவான கட்டணமுறையின் அடிப்படையில் பணம் செலுத்த வேண்டும். முதலாவது 5 யுனிற் வரை (ஒரு யுனிற்= 1000 லீற்றர்) 15 ரூபா வீதம் கட்டணம் செலுத்த வேண்டும்.

ஏற்கனவே நாம் குறிப்பிட்டதை போல நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கடல்நீரை நன்னீராக்கும் தொழிற்சாலைக்கு மேலதிகமாக இன்னொரு தொழிற்சாலை எதற்கு? குடாநாட்டின் குடிநீர் தேவைக்கு கடல்நீரை நன்னீராக்கலாமென பரிந்துரைத்த நிபுணர்களும் இரண்டு நிலையங்களிற்கு பரிந்துரைத்ததில்லை. முறையான ஆய்வுகளை நடத்தி சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க ஒரு நிறுவனம் முயற்சிக்க, அந்த நிறுவனத்தின் பின்னணியில் இயங்க நினைக்கும் தனியார் திட்டத்தின் உண்மையான பின்னணி என்ன? இதை அமைக்க முயற்சிக்கும் அரசின் முக்கியஸ்தர்களிற்கு என்ன ஆதாயம் கிடைக்கிறது? ●

3-ம் பக்க தொடர்ச்சி...

உணவை கேட்டு சென்றார். இடியப்ப கொத்திற்கு அவர் சொல்லியிருந்தார். எனினும் அவருக்கு கொத்துறொட்டி வழங்கப்பட்டது. பேரூந்து புறப்பட்டு விடும் என்ற அவசரத்தில் வேறு வழியின்றி அவர் அதை சாப்பிட்டுவிட்டு பணம் செலுத்த சென்றபோது 450 ரூபா தருமாறு கேட்டுள்ளார்கள். இதனால் அதிர்ச்சியடைந்த அவர் அதற்கான பற்றுச்சீட்டை கேட்டுள்ளார். அதில் வேறு விபரங்கள் குறிப்பிடாமல் 450 ரூபா என எழுதி வழங்க முயற்சித்துள்ளனர். ஆனால் உணவின் பெயரை குறிப்பிட்டு, வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். தமது உணவகத்தில் உணவுகளின் பெயர் குறிப்பிட்டு வழங்கும் வழக்கமில்லையென கூறி, இரவு உணவென குறிப்பிட்டு பற்றுச்சீட்டு வழங்கியுள்ளனர். இந்த சம்பவம் கடந்த வார இறுதியில் நடந்துள்ளது.

சாதாரணமாக ஒரு கோழியிறைச்சி கொத்துறொட்டி 250 ரூபாய்க்கு அதிகமாக விற்கப்படாத நிலையில், இந்த உணவகத்தில் 450 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. உணவகங்கள், பேரூந்து உரிமையாளர்களிற்கு சலுகைகள் வழங்கி தமது உணவகங்களில் நிறுத்த செய்கிறார்கள். பயணிகளிற்கு மலிவான விலையில் உணவு கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டுமென்ற பொறுப்புணர்வு பேரூந்து உரிமையாளர்களிடமும் இருப்பதில்லை.

யாழ்ப்பாணம் கொழும்பு சேவையில் ஈடுபடும் அனேகமான சொகுசு பேரூந்துகள் இந்த உணவகத்திலேயே இரவு உணவிற்காக நிறுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ●


9-ம் பக்க தொடர்ச்சி...

இந்த காணி குறிப்பிடப்பட்டிருந்தது. இன்னொரு எல்லையாக, வவுனியாவை சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடைய காணி உள்ளது. உரிய விசாரணையின் பின்னர் பிரதேச செயலாளர் அரசகாணி என உறுதிப்படுத்தியிருந்தார். LAN/NOTDD/1/1 ஆம் இலக்க 10.12.2015ம் திகதிய கடித்தின் மூலம் பிரதேச செயலாளரினால் அரச காணி என மாவட்ட காணி பதிவாளருக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த விடயம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனின் கவனத்திற்கு சென்றதையடுத்து, அவர் மாவட்ட காணிப்பதிவாளரிடம் காணி தொடர்பில் கேட்டபோது, அது அரசகாணிதான் என்பதைகாணிப்பதிவாளர் உறுதிசெய்துள்ளார். இதனையடுத்து ஆளுனரின் கவனத்திற்கு இந்த விடயத்தை யோகேஸ்வரன் கொண்டு வந்துள்ளார்.

எனினும்,தற்போது காணி தற்போதுவரை தனியாரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. காணியை சுற்றி வேலியமைத்து, மின்சாரம் பெறுவதற்கு தற்போது முயன்று வருகிறார். தமக்கு காணி சொந்தமானதென காண்பிக்கும் ஆவணங்கள் சிலவற்றை குறிப்பிட்ட தனியார் பெற்றிருக்கிறார். அதிகாரிகளிடம் இருந்து குறிப்பிட்ட ஆவணங்களை தனியார் மோசடியாக பெற்றுக்கொண்டது எவ்வாறு? உயரதிகாரிகளின் அனுசரணை இல்லாமல் இவ்வாறான ஆவணங்களை தனியார் ஒருவர் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்? அவருக்கு ஆவணங்களை பெற்றுக்கொடுக்க முயலும் மாவட்டத்தின் முக்கிய அதிகாரி யார் என்பதை உரிய சமயத்தில் தீபம் ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தும்.

இந்த காணி அரசகாணியென, உறுதி செய்யப்பட்ட பின்னரும், அதை மீட்க



காணியின் அமைவிடம்

அதிகாரிகள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? மோசடியான உறுதியின் மூலம் காணி அபகரிப்பு முயற்சி செய்யப்பட்டதையடுத்து, கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பொலிஸில் முறைப்பாடு செய்தார். உடனடியாக அவரது இடமாற்றமும் நிகழ்ந்தது. புதிதாக நியமனம் பெற்ற பிரதேச செயலாளர் அந்த முறைப்பாடு தொடர்பாக மேலதிகமாக என்ன நடவடிக்கை எடுத்தார்?

இது அரசகாணி, அரசகாணியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் செய்ய முற்பட்டார் என கிராமசேவகரால் வாகரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆனால், பொலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது சதுப்பு நில காணி. சதுப்பு நில காணியை தனியாருக்கு அரசாங்கம் வழங்கியிருக்குமென்பதற்கு எந்த வாய்ப்புமில்லை. எனினும், அது தனியார் காணியென அடம்பிடித்து, அவருக்கு அதை பெற்றுக்கொடுக்க மாவட்ட உயரதிகாரிகள் சிலர் எடுத்த பகீரத பிரயத்தனங்கள் பற்றிய தகவல்கள் தீபத்திடம் உள்ளது.

இந்த போலி உறுதியில் சாட்சியாளராக குறிப்பிடப்பட்டுள்ள ஒருவருக்கு, நிறைவேற்று அரச அதிகாரிகளுக்கு வழங்கும் அரச விடுதியொன்றை மாவட்ட அரசாங்க அதிபர் வழங்கியுள்ளார். அவருக்கான நீர், மின்சார கட்டணங்கள் அரச செலவிலேயே செலுத்தப்படுகின்றன. அவரது தொழில் மதுபான விநியோகம். அரச அதிகாரி அல்லாத மதுபான விநியோகத்தர் ஒருவரை அரச செலவில், அரச விடுதியில் தங்கியிருக்க வைக்க வேண்டிய அவசியம் என்ன? அவரிடமிருந்து தனிப்பட்ட ஆதாயங்களை யாராவது அதிகாரிகள் பெற்றிருக்க கூடும் என பொதுமக்கள் கருதுவதற்கான ஏதுநிலையை இந்த சம்பவங்கள் ஏற்படுத்தாதா?

மட்டக்களப்பில் காணி அபகரிப்பு உயர்மட்ட அதிகாரிகள் சிலரது பின்னணியில் நடப்பதாக அண்மைக்காலமாக குற்றச்சாட்டுக்கள் எழுந்து வருகின்றன. அதிகாரிகள் சிலரது தனிப்பட்ட குடும்ப தேவைகளை பூர்த்தி செய்யும் வியாபாரிகள் அனுகூலங்களை பெற்றுவருவதாக எழும் குற்றச்சாட்டுக்கள் முறைப்படி விசாரிக்கப்பட வேண்டும்.

நாம் வெளிப்படுத்தியுள்ள இந்த காணி மோசடி, பெரிய ஊழல் வலைப்பின்னலில் சிறியதொரு இழை மாத்திரமே. இந்த மோசடியுடன் தொடர்புடைய அதிகாரிகள் உடனடியாக கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். காணி தொடர்பில் அதிகாரமுள்ள ஒரு சிலர் இந்த மோசடியின் பின்னணியில் இருப்பது நிச்சயம்.

வாகரை முன்னாள் பிரதேசசெயலாளர் எஸ்.ஆர்.இராகுலநாயகி இந்த காணி அபகரிப்பிற்கு தடையாக இருந்தார். ஒரு முறையற்ற செயல் நடந்தாலே பல சந்தேகங்களை கிளப்புமென்பதுதானே நியதி. இந்த காணி மோசடி எழுப்பும் கேள்வி முன்னாள் பிரதேசசெயலாளர் இராகுலநாயகி ஏன் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டார்? அவரது இடமாற்றத்திற்கும் இந்த காணி விவகாரத்திற்கு மிடையில் ஏதாவது தொடர்புள்ளதா? ●

சரவணபவ
ஆனந்தன் செந்தூரன்



# கிருசாந்தி
## ஒரு பெரும் துயரத்தின் கதை

**கிருசாந்தி குமாரசுவாமி!**

இந்த பெயரை தமிழர்கள் மறக்க மாட்டார்கள். சிங்களவர்களும்தான்... தமது படையினர் மனிதஉரிமை மீறலில் ஈடுபட்டார்கள் என்பதை ஆதாரத்துடன் மெய்ப்பித்த சம்பவம் அது. நிகழ்ந்த மனிதஉரிமை மீறல்களை ஒரு வீரசாகசமாக கருதும் இனத்திற்கு, இந்த சம்பவம் ஒரு மறக்க முடியாத உறுத்தல்தான்.

ஆனால் தமிழர்களை பொறுத்தவரை அது நீதிக்கான பயணத்தின் குறிகாட்டி... அரச பயங்கரவாதத்தின் ஆவணங்களில் ஒன்று...

கிருசாந்தி குமாரசாமி கொல்லப்பட்டு 21 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. இராணுவ முற்றுகைக்குள் இருந்த குடா நாட்டின் அடைக்கப்பட்ட கதவுகளிற்குள் நிகழ்ந்த அந்த கொடூரத்தின் மீள் நினைவிது. நினைக்கவே மயிர்கூச்செறியும் அந்த துயரத்தின் நாட்களிற்கு உங்களை அழைத்து செல்கிறோம்.

**1996 செப்ரெம்பர் 07ம் திகதி.**

காலை ஆறு மணிக்கெல்லாம் சரஸ்வதி படத்தின் முன் அந்த உயர்தர மாணவி நின்றாள். அப்பொழுது நடந்து கொண்டிருந்த உயர்தர பரீட்சையில் அந்த மாணவி தோற்றுகிறாள். அன்றைய பாடத்தை சிறப்பாக எதிர்கொள்ளும் தைரியத்தை கடவுளிடம் கேட்டிருக்க வேண்டும். அடுத்த சில மணி நேரங்களில் அவளுக்கான இரசாயனவியல் பரீட்சைகள் ஆரம்பிக்கவிருந்தன.

அவள்தான் கிருசாந்தி குமாரசாமி. யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல மகளிர் கல்லூரியான சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் கல்வி கற்ற மாணவி. சாதாரண தர பரீட்சையில் 7 டி, 1 சி என சிறப்பு பெறுபேறு பெற்றிருந்தாலும், உயர்தர பரீட்சை பரபரப்பு அவளுக்குள் இருந்திருக்க வேண்டும். தாயார் தயாரித்து கொடுத்த காலையுணவை சரியாக சாப்பிடவில்லை. அவசரமாக சாப்பிட்டு விட்டு, மீண்டும் சிறிதுநேரம் படித்து விட்டு பாடசாலைக்கு கிளம்பினார். 9.30 இற்கு பரீட்சை ஆரம்பிக்கும். எப்படியும் பாடசாலை செல்வதற்கு ஒரு மணித்தியாலம் தேவை.

அப்பொழுது காலை 7.15. கைதடியிலிருந்த வீட்டிலிருந்து தனது சிவப்பு சைக்கிளில் வீட்டை விட்டு புறப்பட்டாள். பரீட்சையில் சிறப்பாக முகம் கொடுக்க தாயார் வாழ்த்தி ,விடைகொடுத்து அனுப்பினார். கிருசாந்தி தனது கண்ணிலிருந்து மறையும் வரை வீட்டு வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார் தாயார்.

கிருசாந்தியின் தாயர் இராசம்மா குமாரசாமி. 59 வயதானவர். இந்திய பல்கலைகழகமொன்றில் ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றவர். கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய உப அதிபர். அடுத்த வருடம் ஓய்வுபெற காத்திருந்தார். அவருக்குமூன்று பிள்ளைகள். மூத்தவர் பிரசாந்தி. கொழும்பில் அப்போது கல்விகற்றுக் கொண்டிருந்தார். அடுத்தவர் கிருசாந்தி. கடைக்குட்டி பிரணவன். க.பொ.த சாதாரணதரம் எழுதிவிட்டு பரீட்சை முடிவுகளிற்காக காத்திருந்தார். துரதிஸ்டவசமாக 1984இல் தனது கணவனை இரசாம்மா இழந்து விட்டார்.

அன்று சனிக்கிழமை. அன்று அவர் விரதம். விடுமுறை தினமும். இராசம்மா கோவிலுக்கு சென்றார். வரும் வழியிலுள்ள சக ஆசிரியை ஒருவரின் வீட்டுக்கும் சென்று கொஞ்ச நேரம் கதைத்து கொண்டிருந்தார். மதிய உணவை பிள்ளைகளுடன் எடுப்பதே இராசம்மாவின் வழக்கம். அன்றும் மகளிற்காக காத்திருந்தார்.

கிருசாந்தியின் பரீட்சை 9.30 இற்கு ஆரம்பித்து 11.30 இற்கு முடிந்துவிடும் என்பது அவருக்கு தெரியும். 12.30 இற்கு எல்லாம் மகள் வந்துவிட வேண்டும். காத்திருந்தார்... காத்திருந்தார்.

எதிர்பார்த்த நேரத்திற்கு கிருசாந்தி வீடு திரும்பவில்லை. ஆரம்பத்தில் வழக்கமான தாமதமாகத்தான் நினைத்தார். நேரமாகிக் கொண்டு போக பதற்றமடைய தொடங்கினார். அவருக்கு ஏதோ கடுமையான பயம் ஏற்பட, அருகிலிருந்த சகோதரி சிவபாக்கியத்திடம் விடயத்தை சொன்னார். இப்பொழுது பதற்றம் இரு மனங்களில்.

இருவரும் வீட்டு வாசலில் உட்கார்ந்து, கிருசாந்திக்காக காத்திருக்க ஆரம்பித்தனர்.

அப்பொழுது வீட்டிற்கு பதற்றத்துடன் கிருபாமூர்த்தி என்பவர் வந்தார். இராசம்மா குடும்பத்தின் நீண்டகால குடும்ப நண்பர் அவர். ஒரு தாயாக இராசம்மா அறிய அச்சப்படும் அந்த துரதிஸ்ட செய்தியை அவர் சொன்னார். கிருசாந்தி செம்மணி காவலரணில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்!

செம்மணி காவலரண் பற்றிய விளக்கம் அதிகமாக தேவையில்லை. தென்மராட்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பரந்த நீர் மற்றும் சதுப்பா லான பகுதி. அங்கு மயானமொன்றும் இருந்தது. அருகிலுள்ள வீதியில் அந்த காவலரண் அமைந்தது. அப்பொழுது அது ஒரு மரணபொறியாக இயங்கியதென்பதை பின்னாளில் கிருசாந்தி விவகாரம் வெளிப்படுத்தியது.


இது விபரீதமானதென்பதை நொடியில் இராசம்மா உணர்ந்தார். ஒரு விநாடியும் தாமதிக்காமல் அங்கு செல்ல இராசம்மா முடிவெடுத்தார். கிருபாமூர்த்தியிடம் உதவி கேட்டார். எந்த தயக்கமுமின்றி அவரும் ஏற்றுக்கொண்டார். தனது மோட்டார்சைக்கிளில் இராசம்மாவை ஏற்றிக்கொண்டு அவர் அங்கு விரைந்தார். அவர்களின் பின்னால் பிரணவன் தனது சைக்கிளில் விரைந்தார்.

கைதடியில் உள்ள தமது வீட்டிலிருந்து அவர்கள் புறப்பட்ட அந்த தருணத்தின் பின், அவர்கள் உலகின் எந்த வீட்டிற்கும் திரும்பவில்லை. ஒரு மரண சுழலை நோக்கி பயணமானார்கள்.

மயானத்திற்கு அருகில் இருந்த காவலரணிற்கு சென்றனர். அதுதான் அவர்கள் கடைசியாக சென்ற இடம். அதன் பின் கிருசாந்தியோ, அவர்களோ வீடு திரும்பவில்லை.

மறுநாள் காலை கிருசாந்தியின் மாமாவும் இன்னொருவரும் செம்மணி காவலரணிற்கு சென்று விடயத்தை கேட்டனர். யாரையும் கைது செய்யவில்லையென இரா்ணுவம் மறுத்துவிட்டது. பின்னர், யாழ்ப்பாண தபாலதிபர் • சு.கோடீஸ்வரனை சந்தித்து விடயத்தை சொன்னார்கள். கோடீஸ்வரனும் கிருசாந்தி குடும்பத்தின் நெருங்கிய உறவினர்தான். தன்னிடம் வந்தவர்களை அழைத்துக் கொண்டு புங்கன்குளம் இராணுவ முகாமிற்கு கோடீஸ்வரன் சென்றார். கிருசாந்தி, தாயார், சகோதரன், அயலவர் காணாமல் போன விடயத்தை இராணுவத்திற்கு அறிவித்தார். கிருசாந்தி காணாமல் போன இருபத்திநான்கு மணித்தியாலத்திற்குள் தகவல் வழங்கப்பட்டது. பின்னர் வெளியான

தொடர்ச்சி அடுத்தபக்கம்...






தகவல்களில், கிருசாந்தி பரீட்சை முடிந்ததும், பாடசாலையில் இருந்து மரணவீட்டிற்கு சென்றது தெரிய வந்தது. கைதடியில் இராணுவ வாகனம் மோதி மரணமான மாணவியின் மரணவீட்டிற்கு சென்றுவிட்டு திரும்பியபோதே செம்மணி காவலரணில் தடுத்து வைக்கப்பட்டார்.

கிருசாந்தியை கண்டுபிடிக்கும் முயற்சிகளை கோடீஸ்வரனும் உறவினர்களும் ஆரம்பித்தனர். ஒவ்வொரு முகாம் முகாமாக அலைந்தனர். வழக்கம்போல எல்லா முகாம்களிலும் இராணுவம் கையை விரித்தது.

இந்த சமயத்தில் ஒரு சடுதியான திருப்பு முனை ஏற்பட்டது. கோடீஸ்வரனின் சகோதரியின் இரண்டு மகன்கள் பிரணவனுடன் நெருக்கமான நண்பர்கள். ஒன்றாக திரிவது,கிரிக்கெட் விளையாடுவது வழக்கம். அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கல்வி கற்றார்கள்.

ஒருநாள் கைதடியில் இருந்து இந்துக் கல்லூரிக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது,செம்மணி இராணுவ சோதனைச்சாவடிக்கு அண்மையில் இருந்த சைக்கிள் கடையொன்றில் ஒரு செயின் கவர் தொங்கியதை கவனித்தனர். அதில் பிளிழிஞிகி என பெரிய எழுத்தில் ஸ்டிக்கர் ஒன்று ஒட்டப்பட்டிருந்தது. மோட்டார் சைக்கிள் ஸ்டிக்கர் அது. கிருசாந்தியின் சகோதரனின் சைக்கிள் செயின் கவரிலும் அப்படி ஒட்டப்பட்டிருப்பது அவர்களிற்கு தெரியும். உடனே திரும்பி வந்து, பார்த்தார்கள். அது பிரணவனின் சைக்கிள் செயின் கவர்தான்!

வீட்டுக்கு வந்து விடயத்தை சொல்ல... கிருசாந்தியை தேடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வந்த தபாலதிபர் சு.கோடீஸ்வரனிற்கு விடயம் அறிவிக்கப்பட்டது. அவர் பொலிசாருக்கு தகவலை தெரிவித்து, அவர்களையும் அழைத்துக்கொண்டு அந்த கடைக்கு சென்றார்.

சைக்கிளை அவர்கள் அடையாளம் காட்ட, பொலிசார் சைக்கிள் குறித்து விசாரணை செய்தனர். மேளம் வாசிப்பவர் ஒருவர்தான் தனக்கு விற்பனை செய்ததாக அவர் கூறினார். மேளம் வாசிப்பரிடம் விசாரித்தபோது, செம்மணி சோதனைசாவடியில் கடமையில் உள்ள சிப்பாய் ஒருவர் தன்னிடம் விற்பனை செய்ததாக அவர் கூறினார். இதுதான் கிருசாந்தி காணாமல் போன மர்மத்தை விலக்கிய திறப்பு.

இந்த சம்பவங்கள் நடந்த போது குடாநாடு இறுக்கமான இராணுவ முற்றுகைக்குள் இருந்தது. நடப்பதெதுவும் வெளியுலகத்திற்கு சரியாக தெரியாமல் மறைக்கப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக இந்த சம்பவம் வெளியில் கசியாமல் இரகசியம் பேணிது இராணுவம். கொழும்பிலிருந்த ஊடகங்களும் மௌனமாக இருந்தன.

கொழும்பில் இருந்த மனிதஉரிமைகள் ஆர்வலரும் சட்டத்தரணியுமான பூபாலன் இந்தவிடயத்தில் அதிக அக்கறையெடுத்தார். பாராளுமன்ற உறுப்பினராக இருந்த யோசெப் பரராஜசிங்கத்திடம் விடயத்தை தெரியப்படுத்தினார். பாராளுமன்றத்தில் விடயத்தை கவனப்படுத்தினார் பரராஜ சிங்கம். சட்டத்தரணி பூபாலன் இதுபற்றி அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவிடமும் இதை தெரிவித்தார்.

இதில் கவனிக்க வேண்டிய ஒரு விடயமுள்ளது.இந்தசம்பவம் தொடர்பான முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதில் சந்திரிகாவும் அக்கறை காட்டினார். பாதுகாப்பு அமைச்சராக அவர் சில இறுக்கமான நடவடிக்கைகள் எடுத்ததும் விடயம் வெளிப்பட முக்கிய காரணம். சந்திரிகாவின் உத்தரவையடுத்து, லெப்.கேணல் குணரட்ண தலைமையிலான இராணுவகுழு யாழ்ப்பாணத்திற்கு சென்று விசாரணைகளில் ஈடுபட்டது.

கிருசாந்தி காணாமல் போன தினத்தில் செம்மணி காவலரணில் கடமையில் இருந்தவர்கள் வேறு முகாம்களிற்கு மாற்றப்பட்டிருந்தனர். எனினும், அவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். விசாரணையில் உண்மை வெளிப்பட்டது. கிருசாந்தியை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியதை, பின்னர் கிருசாந்தி, இராசம்மா, பிரணவன், கிருபாமூர்த்தியை கொலைசெய்ததை இராணுவச்சிப்பாய்கள் ஏற்றுக் கொண்டனர்.

அந்த காவலரணில் நிற்கும் சிப்பாய்கள் வழக்கமாக கிருசாந்தியை நக்கலடிப்பதை வழக்கமாக கொண்டிருந்தனர். கடுமையான முகபாவத்தின் மூலம் அதை கவனிக்காமல் கிருசாந்தி சென்று வருவார். இது சிப்பாய்களிற்கு கடுமையான ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தது. சம்பவ தினமான அன்று மாலை ஆறு மணிக்கு அண்மையாக சோதனை சாவடியை கிருசாந்தி கடக்க முயன்றார். அப்போது கோப்ரல் தர அதிகாரியொருவரே கிருசாந்தியை வழிமறித்து, சோதனைசாவடிக்குள் வருமாறு கட்டளையிட்டார்.

இரண்டு பொலிசார், ஒன்பது இராணுவத்தினர் என பதினொருவர் அந்த சிறிய பிஞ்சை கொடூரமாக சிதைத்துள்ளனர். கிருசாந்தியை தேடிச்சென்ற மற்றைய மூவரையும் அடித்து துன்புறுத்தி கழுதை நெரித்து கொலை செய்துள்ளனர். பின்னர் கிருசாந்தியையும் கொலை செய்து புதைத்தனர்.

கொலை செய்யப்பட்டவ்ர்கள் எங்கு புதைக்கப்பட்டனர் என்பதை சிப்பாய்கள் விசாரணையில் தெரிவித்திருந்தனர். கொல்லப்பட்டு 45 நாட்களின் பின்னர் சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டன. மூன்று குழிகளில் நான்கு ச்டலங்களும் புதைக்கப்பட்டிருந்தன. கிருசாந்தி தடுத்து வைக்கப்பட்டிருந்த காவலரணிற்கு சிறிது தூரத்திலேயே சடலங்கள் மீட்கப்பட்டன.

பின்னர் நடந்த . விசாரணையில் கிருசாந்தி கூட்டு பாலியல் வ்ன்முறைக்கு உள்ளானதும், விடயம் வெளியில் தெரியாமலிருக்க மற்றைய மூவரும் கொல்லப்பட்டதும் தெரிய வந்தது.

செம்மணி கொலை வலயத்தில் எத்தனை பேர் புதைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவில்லை. 600 இற்கும் அதிகமானவர்களை கொ்ன்று புதைத்ததாக படைச்சிப்பாய் ஒருவர் விசாரணையில் தெரிவித்திருந்தார். முன்னாள் தபாலதிபர் கோடீஸ்வரன் போன்ற சிலரது முயற்சியால் வெளிப்பட்ட உண்மை, பின்னர் குமார் பொன்னம்பலம், பூபாலன், பரராஜசிங்கம் போன்றவர்களின் ஒத்துழைப்புடன் உ்லகறிந்தது. இவர்களின் முயற்சியால் கிருசாந்தி விவகாரத்தின் மர்மம் வெளிப்பட்டது.

ஆனால்குடாநாட்டில்காணாமல்போன ஏனைவர்களிற்கு யார் பொறுப்பு கூறுவது? இன்றும் போராடிக் கொண்டிருக்கும் காணாமல் போனவர்களின் உறவுகளிற்கு யார் பொறுப்பு கூறுவது?






























# சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் டைரக்ஷன்



கே. பாலச்சந்தர் படங்களில், பின்னால் நடக்கப்போவதை உணர்த்தும் வகையில் காட்சிகளை அமைத்திருப்பார். அவள் ஒரு தொடர்கதை படத்தில், சுஜாதா ஒரு பாட்டுப் பாடுவார். அப்போது கூரை இல்லாத வீடு, துடுப்பு இல்லாத படகுகளைக் காட்டுவார் பாலச்சந்தர். அவளுக்கு வாழ்க்கை அமையப் போவதில்லை என்பதை, இந்தக் காட்சிகள் மூலம் உணர்த்துவார்.

இப்படி ஒரு காட்சியை சிலப்பதிகாரத்தில் வைத்துள்ளார் இளங்கோவடிகள்.

கண்ணகி திருமணம். மணவிழாவில் கலந்து கொண்ட பெண்கள், கண்ணகியை வாழ்த்துகிறார்கள். எப்படி தெரியுமா?

காதலற் பிரியாமல் கவவுக் கை நெகிழாமல்

தீது அறுக

என்று வாழ்த்துகிறார்கள். அதாவது, கணவன் மனைவி பிரியாமல், பிடித்த அவர்களின் கரங்கள் இறுக்கம் தளராமல், தீமைகள் ஒழிந்து வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

இன்றுபோல என்றும் சேர்ந்திருக்க வேண்டும். பிடித்த கைகள் இறுக்கியபடி இருந்து உங்கள் அன்பு அதிகரிக்க வேண்டும். உங்கள் வாழ்வில் நன்மையே நடக்க வேண்டும் என்பதுதான் அவர்கள் வாழ்த்தியதன் பொருள்.

ஆனால், "கணவன் மனைவி பிரியாமல், பிடித்த அவர்களின் கரங்கள் இறுக்கம் தளராமல், தீமைகள் ஒழிந்து வாழ்க" என வாழ்த்துகிறார்கள்.

பிரியாமல்

தளராமல்

தீமை ஒழிந்து

என்று முழுக்க முழுக்க அமங்கலச் சொல்லால் வாழ்த்துகிறார்கள். மங்கலச் சொற்களால்தான் வாழ்த்துவார்கள். நல்லா இரு என்று வாழ்த்துவதுதான் மரபு. கெட்டுப் போகாமல் இரு என்று யாரும் வாழ்த்தமாட்டார்கள். ஆனாலும் அமங்கலச் சொற்களால் வாழ்த்துவதாக எழுதியுள்ளார் இளங்கோவடிகள். ஏன்?

கண்ணகியின் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கப் போவதில்லை என்பதை உணர்த்தவே இப்படி அமங்கலச் சொற்களைப் போட்டு எழுதி குறிப்பால் உணர்த்துகிறார்.

இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்பே, இளங்கோ அடிகள் டைரக்ஷன் எப்படி? வியக்க வைக்கிறதல்லவா?

இதேபோல, கோவலனுக்கு மாதவி எழுதும் கடிதமும் கவனிக்கத் தக்கது.

தன்னைப் பிரிந்து சென்ற கோவலனுக்குக் கவுசிகன் மூலம் ஒரு கடிதம் அனுப்புகிறாள் மாதவி. அதில் மாதவி எழுதியிருப்பதாக இளங்கோவடிகள் சொல்கிறார் பாருங்கள்...

அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்

வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்.

குரவர் பணி அன்றியும் குலப்பிறப்பு ஆட்டியொடு

இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது

கையறு நெஞ்சம் கடிதல் வேண்டும்,

பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி.

கடிதத்தில் மாதவி கூறியிருப்பது இதுதான் அடிகளே உங்கள் முன் விழுந்து, உங்கள் திருவடிகளை வணங்குகிறேன். தெளிவற்ற என் சிறு மொழிகளை தயவு செய்து கேட்டருள வேண்டுகிறேன். வயதான தாய் தந்தைக்கு அருகில் இருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்யாமல், உயர்குடியில் பிறந்த கண்ணகியுடன் புகார் நகரை விட்டு சென்றது ஏன்? அதுவும், ஊரைவிட்டு யாருமே செல்ல விரும்பாத சிறப்பு மிக்க பூம்புகார் நகரைவிட்டு மனைவியுடன் இரவோடு இரவாக, யாருக்கும் தெரியாமல் சென்றதற்கு, நான் செய்த தவறுதான் காரணமோ என்று என் மனம் சோர்வடைகிறது. அப்படி என்னுடைய தவறுதான் காரணம் என்றால், என்னுடைய சொல்லைப் பொருட்படுத்தாமல், என்னை மன்னிக்க வேண்டுகிறேன். குற்றமற்ற அறிவை உடைய மேன்மை உடைய தங்களைப் போற்றுகின்றேன்.

இப்படி மாதவி எழுதிய மடலை வாசித்த கோவலன் மனம் நெகிழ்ந்தான். மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் என்றும் ஆடல் மகள் என்னிடமே நடித்தாள் என்றும் சொல்லிப் பிரிந்தவன், இந்தக கடிதத்தைப் படித்தபின் மாதவி குற்றமற்றவள் என உணர்கிறான்.

"என் பெற்றோரிடம் சொல்லாமல், ஊரை விட்டு வந்துவிட்டேன். அவர்களுக்கு நான் சொல்ல விரும்பும் செய்தி, மாதவியின் இந்தக் கடிதத்திலேயே உள்ளது. எனவே, இந்தக் கடிதத்தை, நான் கொடுத்ததாக என் பெற்றோரிடம் கோண்டுபோய்க் கொடு"என்று கவுசிகனை அனுப்பி வைக்கிறான் கோவலன்,

காதலன் கோவலனுக்கு மாதவி எழுதிய கடிதம், அதையே, கோவலன் தன் பெற்றோருக்கு அனுப்பக் கூடியதாக இருக்கிறது. ஒரே கடிதம், காதலனுக்கு அனுப்பினாலும் பொருந்துகிறது. அவனுடைய பெற்றோருக்கு அனுப்பினாலும் பொருந்துகிறது.

இந்தக் கடிதத்தை எவ்வளவு அற்புதமாக வடித்திருக்கிறார் இளங்கோவடிகள்!

---

# முத்தொள்ளாயிரம் காட்டும் குமிழ் தாள்பாள்

## இலக்கிய நயம்



சில வீடுகளில், பெரும்பாலும் ஹோட்டல் அறைகளில் குமிழ் வடிவில் தாழ்ப்பாளும் பூட்டும் இருப்பதை கவனித்திருப்பீர்கள். அறையின் கதவில், ஒரு குமிழ் இருக்கும். அதை திருகிதான் அறையை பூட்டவோ திறக்கவோ செய்வோம். வெளியில் போகும்போது கதவை சாத்தினால் அதுவாக பூட்டிக்கொள்ளும். அப்படி ஒரு குமிழ் தாழ்ப்பாளைச் சொல்கிறது முத்தொள்ளாயிரம்.

தாயார் அடைப்ப மகளிர் திறந்திடத்

தேயத் திரிந்த குடுமியவே ஆய்மலர்

வண்டுலாங் கண்ணி வயமான்தேர்க் கோதையைக்

கண்டுலாஅம் வீதிக் கதவு.

சேர மன்னன் வீதி உல வருகின்றான். அவனோ பேரழகன். கட்டிளங்காளை; கண்டாரை மயக்கும் தோள்கள். மாவீரன். அவனைக் கண்டால் மயங்காத கன்னியும் மயங்குவாள். அப்படிப்பட்டவன் வீதி உல வருகின்றான். பூமாலை அணிந்துள்ளான் அவன். எப்படிப்பட்ட பூமாலை தெரியுமா? எந்த மலரில் சுவையான தேன் இருக்கும் என்று ஆராய்ந்து அதில் வண்டுகள் மொய்க்குமோ, அந்தமலர்களால் ஆன மாலையை அணிந்துள்ளான். குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி வீதி உல வருகின்றான்.

மன்னனை மகள் பார்த்துவிட்டால், அவன் அழகில் மயங்கி, அவன் மீது காதலில்விழுந்துவிடுவாளே என்று தாய்க்குக் கவலை. பேரழகு மிக்க வீரனான மன்னனை எப்படியும் பார்த்துவிட வேண்டும் என்று மகளுக்கு ஆசை.

மன்னனை மகள் பார்த்துவிடக் கூடாதே என்று, "உள்ளே போ!" என்று மகளை வீட்டுக்குள் அனுப்பி கதவைத்தாழிடுகிறாள் தாய். அவள் எப்போது நகர்வாள் என்று காத்துக்கொண்டிருக்கிறாள் மகள்.

அடுப்படிக்குத் தாய் போனதுதான் தாமதம். உடனே, தாழ்ப்பாளைத் திறந்துவிட்டு, மன்னனைக் காண வாசலுக்குப் போக முயற்சி செய்கிறாள். அதற்குள் தாய் வந்துவிடுகிறாள். "போ உள்ளே"என்று மகளை வீட்டுக்குள் அனுப்பி, கதவைத் தாழிடுகிறாள். தாய் அசரும் நேரம் பார்த்து தாழ்ப்பாளைத் திறக்கிறாள் மகள். தாய் பார்த்துவிட்டு கதவை மீண்டும் தாழிடுகிறாள். இப்படியே தாய் தாழிடுவதும் மகள் திறப்பதுமாக திறந்து மூடி, திறந்து மூடியே, கதவில் பொருத்தப்பட்டுள்ள குமிழ் வடிவத் தாழ்ப்பாள் தேய்ந்துவிடுகிறதாம்.

அந்தக் காலத்திலேயே குமிழ் வடிவில் தாழ்ப்பாளை அமைத்திருக்கிறான் தமிழன். இப்படிப்பட்ட குமிழ் வடிவத் தாழ்ப்பாளை கலிங்கத்துப் பரணியும் ஒரு பாடலில் காட்டுகிறது. கடை திறப்புக் காதையில் வரும் அந்தப் பாடல்

வருவார் கொழுந ரெனத்திறந்தும்

வாரார் கொழுந ரெனவடைத்துந்

திருகுங் குடுமி விடியளவுந்

தேயுங் கபாடந் திறமினோ

கணவன் போருக்குச் சென்றுவிட்டான். வீட்டில் இருக்கிறாள் இளம் மனைவி. இவளை தனிமைத் துயர் வாட்டுகிறது. போர் முடிந்துவிட்டதாகத் தகவல் வருகிறது. இரவு வந்துவிடுவான் என்று எதிர்பார்க்கிறாள். விரகதாபத்தில் தவிக்கிறாள். தூக்கம் வரவில்லை. கணவன் வந்துவிடுவான் என்று எதிர்பார்த்து, கதவைத் திறந்து தெருவைப் பார்க்கிறாள். அவனைக் காணவில்லை.

சரி, இப்போது வரமாட்டன் என்று கதவைத் தாழிடுகிறாள். தூக்கம் வரவில்லை. அவன் நினைவாகவே இருக்கிறது. மீண்டும் கதவைத் திறந்து தெருவைப் பார்க்கிறாள். அவன் வரவில்லை. கதவைத் தாழிடுகிறாள். இப்படி விடியும் வரை, கதவைத் திறப்பதும் தாழிடுவதுமாக இருக்கிறாள். அவள் திறந்து, திறந்து மூடியதில் கதவில் இருந்த குமிழ் வடிவ திருகுத்தாழ்ப்பாள் தேய்ந்துவிட்டதே, அத்தகைய கதவைத் திறவுங்கள் என்று சொல்கிறார் செயங்கொண்டான்.

அந்தக் காலத்திலேயே குமிழ் வடிவ தாழ்ப்பாள் அமைத்த தமிழனின் தொழில் நுட்ப அறிவைப் பறை சாற்றுகின்றன் இந்த இரண்டு பாடல்களும்.





எம்.ஜி.ஆர் 100
நெடுந்தொடர் 73

# காட்சி அமைப்பாளர்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** படங்கள் இந்தக் காலத்திலும் மக்களால் ரசிக்கப்படுகின்றன. அதற்கு காரணம், அவர் படங்களின் விறுவிறுப்பான கதையமைப்பு, பொழுது போக்கு அம்சங்கள், பாடல்கள் மட்டுமின்றி படத்தை உருவாக்குவதில் சிறிய விஷயங்களில்கூட அவர் கவனம் செலுத்தியதுதான். காட்சிகளை அவர் படமாக்கியிருக்கும் விதமும் அதன் அழகும் படத்தோடு நம்மை கட்டிப்போடும்.

'உலகம் சுற்றும் வாலிபன்' படமே பிரம்மாண்டமான தயாரிப்பு. இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்கா வீசிய அணு குண்டுகள் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்களை உருக்குலைத்தன. 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில், மனித குலத்துக்கே அச்சுறுத்தலாய் விளங்கும் அணுசக்தி பற்றிய ரகசிய குறிப்பை வில்லன் கோஷ்டியிடம் இருந்து அதே ஜப்பானிலேயே எம்.ஜி.ஆர் மீட்பதுபோல காட்சி. இதற்காகவே, எம்.ஜி.ஆருக்கு சபாஷ் போடலாம்.

முன்னதாக, தாய்லாந்து தலைநகர் பாங்காக்கிற்கு எம்.ஜி.ஆர் செல்வார். அங்கே 'துஸித்தானி' என்ற பெயரில் ஒரு பிரம்மாண்டமான ஓட்டல். அந்த ஓட்டலில் படக்குழுவினர் தங்கியிருந்தனர். ஓட்டலின் அழகைப் பார்த்த எம்.ஜி.ஆர், அங்கேயே காட்சிகளை படமாக்க முடிவு செய்தார். படம் வெளியானது 1973ம் ஆண்டு. அந்தக் காலகட்டத்தில், கிராமங்களை விடுங்கள்; சிறிய நகரங்களில் கூட ஓட்டல் என்றால் குண்டு பல்பின் மங்கிய ஒளியில் கால் உடைந்த ஸ்டூல்களும், ஈக்கள் மொய்க்கும் மேஜையும், நசுங்கிய டம்ளர்களும்தான் நினைவுக்கு வரும். அதைத் தகர்த்தெறிந்து இப்படியெல்லாம்கூட இருக்குமா என்று வியக்க வைத்தது 'துஸித்தானி' ஓட்டல்.

எம்.ஜி.ஆரைப் பார்க்க தாய்லாந்து நடிகை மேட்டா ருங்ரட்டா 'துஸித்தானி' ஓட்டலுக்கு வருவார். ஓட்டலின் முன் அறையில் இருந்து வாயிலை பார்க்கும் கேமரா கோணம் நாமே உள்ளிருந்து வாயிலைப் பார்ப்பது போலிருக்கும். மேட்டா, நேராக தன்னை சந்திப்பது போல காட்சியை எம்.ஜி.ஆர் அமைத்திருக்கலாம். ஆனால், ஓட்டலின் அழகை ரசிகர்களுக்கு காட்ட வேண்டும் என்பதற்காகவே, "மிஸ்டர் ராஜ்" என்று அழைத்தபடி, (போலீஸ் அதிகாரியாக நடிக்கும் எம்.ஜி.ஆரின் பெயர்) ஓட்டலின் முன் அறையைத் தாண்டி வெல்வெட் பாதையில் நடிகை மேட்டா ஓடி வரும்படி காட்சியை அமைத்திருப்பார். அப்போது ஓட்டலின் வேலைப்பாடுகள் மிக்க விதானத்துடன் கூடிய நீளமான வராண்டாவின் அழகை ரசிக்க முடியும். வராண்டாவை கடந்து வெளியே சென்றால் பரந்த இடம். அங்கே நடிகை சந்திரகலாவும் நாகேஷும் இருப்பார்கள். அங்கு மேட்டாவை எம்.ஜி.ஆர் அழைத்து வருவார். இவர்கள் நான்கு பேரும் இருக்கும் இடத்துக்கு பின்னே பச்சையும் நீலமுமாய் நீரில் மின்னும் நீச்சல் குளம். அதன் எதிர்க்கரையில் பீறிட்டு அடிக்கும் நீரூற்றுகள்.

லோ ஆங்கிளில் கமராவை வைத்து படம்பிடித்திருப்பார்கள். இந்தக் காட்சியில் தான் ஓட்டல் 'துஸித்தானி'யின் முழு பிரம்மாண்டமும் தெரியும். சமீபத்திய ஆண்டுகள் வரை சென்னையிலேகூட, 14 மாடிகளைக் கொண்ட எல்.ஐ.சி.கட்டிடம் தான் பிரம்மாண்டம். ஒரு படத்தில் கதாநாயகன் சென்னை வருவதாக காண்பிக்கப்பட்டால் அந்த கட்டிடத்தைத்தான் காட்டுவார்கள். அதற்கே தியேட்டரில் சலசலப்பு ஏற்படும். அதைவிட பல அடுக்கு மாடிகளைக் கொண்ட, பலமடங்கு பிரம்மாண்டமான 'துஸித்தானி'யை திரையிலே பார்த்த மக்கள் வியப்பில் வாய் பிளந்தனர்.

அந்த அளவுக்கு கட்டிடங்களைக் கூட, மிகத் திறமையாகவும் அழகாகவும் காட்சிப்படுத்துவதில் எம்.ஜி.ஆர் வல்லவர். அதனால் தான் அவரது படங்களில் ஒவ்வொரு ஃபிரேமையும் இன்றும் ரசிக்க முடிகிறது.

தமிழ் திரைப்படங்களில் தாயைப் பற்றிய பாடல் என்றாலே சோகம்தான். ஆனால், தாயை போற்றும் பாடலையும் உற்சாகமாக பாடவைத்தது எம்.ஜி.ஆரின் 'அடிமைப் பெண்' படம். 'தாயில்லாமல் நானில்லை...' பாடலை எப்போது கேட்டாலும் தாயின் மீது பரவசம் கலந்த பக்தி ஏற்படும். இந்தப் பாடல் காட்சியின் சில பகுதிகள் ஒகேனக்கலில் படமாக்கப்பட்டன. பாறைகள் நிறைந்த பகுதியில் பாய்ந்து வரும் தண்ணீரின் நடுவே எம்.ஜி.ஆர் அமர்ந்திருப்பார். கொஞ்சம் கவனக்குறைவாக இருந்தால் தண்ணீர் அடித்துச் சென்றுவிடும். லாங் ஷாட்டில் காட்சியைப் பார்க்கும்போது எம்.ஜி.ஆரைச் சுற்றி சுமார் நூறடி தொலைவுக்கு யாரும் இருக்க மாட்டார்கள்.

இதைவிட இந்தப் பாடலில், தாயன்பை விளக்கும் காட்சி ஒன்று ரசிக்க வைக்கும். எந்த உயிரினமாக இருந்தால் என்ன? தாய்ப்பாசம் பொதுதானே? ஒரு பறவை தனது கூட்டில் குஞ்சுகளுக்கு இரையூட்டும். இது ஸ்டாக் ஷாட் போலிருக்கிறது, இடையில் சொருகியிருக்கிறார்கள் என்று நினைத்தால், கமரா லாங் ஷாட்டில் வரும்போது பறவைக் கூட்டின் அருகே தலையைக் குனிந்து எம்.ஜி.ஆர் பார்த்துக் கொண்டிருப்பார். காத்திருந்து இந்தக் காட்சியை அவர் படமாக்கியிருக்கிறார் என்பது புரியும்.

'ஊருக்கு உழைப்பவன்' படத்தில், இடம்பெற்ற 'அழகெனும் ஓவியம் இங்கே...' பாடல் தேவகானமாய் ஒலித்து நம்மை சொக்க வைக்கும். பாடலின் ஒரு காட்சியில் கதவை மூடியபடி, நம்மை நோக்கி எம்.ஜி.ஆர் வருவார். பார்த்துக் கொண்டிருக்கும்போதே, திடீரென நம்மிடமிருந்து எதிர்திசையில் நடிகை 'வெண்ணிற ஆடை' நிர்மலாவை நோக்கிச் செல்வார். அப்போதுதான் நமக்கு புரியும்; முதலில் எம்.ஜி.ஆர் நம்மை நோக்கி வந்த காட்சி, கண்ணாடியில் தெரிந்த அவரது பிம்பம் என்று. இதில் விசேஷம் என்னவென்றால், காட்சியைப் படமாக்கிய அதே நேரம், அந்தப் பெரிய கண்ணாடியில் கமரா தெரியாதபடி ஆங்கிளை அமைத்திருப்பார்.

இப்படி நிறைய சொல்லிக் கொண்டே போகலாம். ஒன்று நிச்சயம். 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில் 'உலகம் அழகு கலைகளின் சுரங்கம்...' பாடலில் வரும் வரிகளை, எம்.ஜி.ஆர் படங்களை பார்க்கும்போது அனுபவத்தில் நாம் உணர முடியும். அந்த வரிகள்...

'உள்ள மட்டும் அள்ளிக்கொள்ளும்
மனம் வேண்டும்,
அது சொல்லும் வண்ணம் துள்ளிச்
செல்லும் உடல் வேண்டும்!'

தொடரும்...





ஃபிலிம்ஃபேர் பத்திரிகையின் விருது பெற்ற முதல் தமிழ் படம் 'அடிமைப் பெண்'. இதற்கான விழாவில் கலந்து கொள்ள மும்பை சென்ற எம்.ஜி.ஆரிடம், "I am your fan" என்று கூறி பிரபல இந்தி நடிகரும் இயக்குனருமான ராஜ் கபூர் வாழ்த்தினார். 'அடிமைப் பெண்' கிளைமாக்ஸில் சிங்கத்துடன் எம்.ஜி.ஆர் மோதும் சண்டைக் காட்சியை தன்னால் கூட அப்படி படமாக்க முடியாது என்று ராஜ் கபூர் பாராட்டினார்.

# சின்னத்திரை

## ராமச்சந்திரனின் ஆசை!

வில்லன், குணசித்திர நடிகர், காமெடியன் என கலக்கி வருபவர் சீரியல் நடிகர் ராமச்சந்திரன். பனிவிழும் நிலவு என்ற படத்தில் பேராசிரியராக நடித்துமிருக்கிறார். இப்பொழுது மீண்டும் சினிமாவில் நடிக்கும் முயற்சியெடுக்கிறார். சினிமாவில் பெரிய நடிகராக வேண்டுமென நடிக்க வந்தவர், வாய்ப்பு கிடைக்காமல் சின்னத்திரை பக்கம் ஒதுங்கிவிட்டார். 50 இற்கும் மேற்பட்ட சீரியல்களில் நடித்த பின்னர் இப்பொழுது சினிமாவை மீண்டும் குறிவைத்துள்ளார். சில படங்கள் ஒப்பந்தமாகியுள்ளதாகவும், விரைவில் அது குறித்த அறிவிப்பு வருமென்றும் கூறியுள்ளார்.

## ராஜேஷின் புதிய நிகழ்ச்சி!

அந்த ஏழு நாட்கள், அச்சமில்லை அச்சமில்லை, கன்னி பருவத்திலே தொடங்கி ஏராளம் படங்களில் நடித்துவிட்டார் ராஜேஷ். தொடர்ந்தும் நடித்து வருகிறார். ஆர்ப்பாட்டமில்லாத நடிகர் என்ற பெயர் வாங்கியவர். கே.பாக்கியராஜ், டி.ராஜேந்தர், விசு வரிசையில் ரோக் ஷோ ஒன்றை நடத்தவுள்ளார். வேந்தர் தொலைக்காட்சியில் "இது உங்கள் மேடை" என்ற பெயரில் ஞாயிறு காலை ஒளிபரப்பாகவுள்ளது. இதற்காக தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்களுடன் கலந்துரையாடி, பிரச்சனைகளிற்கு தீர்வு சொல்லி வருகிறார். சமூக பிரச்சனையும், தனி மனித ஒழுக்கமும் நிகழ்ச்சியின் மைய கருத்தாக உள்ளது.



ஹர்சதா பட்டேல்

## உன்னை காணாத கண்கள்!

பிக்பாஸ் போட்டியாளராக இருக்கிறார் கணேஸ் வெங்கட்ராமன். அவரது மனைவி நிஷா சீரியல் நடிகை. அண்மையில் பிக்பாஸ் வீட்டிற்குள் சென்று வந்தார். கணேஷ் பொறுமையானவர் என்பதால் நூறுநாள் பிக்பாஸ் வீட்டிற்குள் சமாளித்துவிடுவார் என்று கூறியுள்ளார். கணேஷ் பிக்பாஸிற்கு வந்த ஆரம்ப நாட்கள் கடினமாக இருந்ததாகவும், தூர இடங்களில் சீரியல் சூட்டிங் நடந்ததால் ஆரம்பத்தில் சமாளித்து கொண்டாராம். இப்போது கணேஷின் பிக்பாஸ் நிகழ்ச்சிகளை பதிவுசெய்து வைக்கிறாராம். 73 நாளின் பின்னர் கணேஷை பிக்பாஸ் வீட்டிற்குள் சந்தித்தார். கணேஷின் கண்ணில் அடிபட்டு கண் திறக்க முடியாமல் இருந்த நிலையில்தான் நிஷா பார்க்க போனார். நிஷா போனதும் கணேஷின் கண்வலி தீர்ந்து விட்டதாம்.

## சினிமாவில் நடிக்கும் டிடி

காபி வித் டிடி நிகழ்ச்சி மூலம் பிரபல்யமானவர் டிடி. இப்போது அன்புடன் டிடி நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார். டிடி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கும் விதத்திற்கு பெரிய ரசிகர் பட்டாளமே இருந்தது. இதனால் அவரை சினிமாவில் நடிக்க வைக்க பலர் முயன்றனர். ஆனால் டிடி டிமிக்கி கொடுத்து வந்தார். டிடியின் நெருங்கிய நண்பரான தனுஷ் தனது பவர் பாண்டியில் எப்படியோ நடிக்க வைத்துவிட்டார். பின்னர் படங்களை தவிர்த்து வந்த டிடி இப்பொழுது விக்ரம் நடிக்கும் துருவ நட்சத்திரங்கள் படத்தில் நடித்து வருகிறார். படம் முழுவதும் வரும் முக்கிய பாத்திரமாம். இதை தொடர்ந்து வேறு படங்களில் நடிக்கவும் கதை கேட்டு வருகிறார். இதற்காக அன்புடன் டிடி நிகழ்ச்சிக்கு சில மாதங்கள் பிரேக் கொடுத்துள்ளார்.

## மிரட்ட வரும் தமிழ் கடவுள் முருகன்!

ராமாயணம், மகாபாரதம் என சரித்திர தொடர்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் நிலையில் தமிழ் கடவுள் முருகன் உன்ற தொடர் விரைவில் விஜய் டிவியில் ஒளிபரப்பாகவுள்ளது. தமிழ் கடவுள் முருகனின் வரலாற்றையும் பெருமையையும் சொல்லும் தொடர் இது. மும்பையில் பிரமாண்ட செட் அமைத்து தயாராகி வருகிறது. 50 கணினி கிராபிக்ஸ் நிபுணர்கள் படத்திற்காக பணியாற்றுகிறார்கள். லைவ் சிஸ்டம் என நடிக்கும்போதே வசனங்கள் பதிவாகிறது. இதனால் டப்பிக் வேலைகள் இல்லை. நடிகர்கள், நடிகைகள், தொழில்நுட்ப கலைஞர்கள் என 100 பேர் மும்பையில் முகாமிட்டுள்ளனர். தொடருக்கான டீசரை அண்மையில் விஜய் டிவி வெளியிட்டுள்ளது. மிரட்டலாக அமைந்துள்ள இந்த டீசர் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## திகில் தொடரான சரவணன் மீனாட்சி!

தமிழ் சின்னத்திரை வரலாற்றில் தொடர்ந்து ஒளிபரப்பாகி சாதனை படைத்து வருகிறது சரவணன் மீனாட்சி தொடர். இந்த தொடரின் நாயகன், நாயகிகள் பலர் மாறிவிட்டனர். ஆனால் தொடர் நீண்டுகொண்டே போகிறது. அண்மையில் ஆயிரம் எபிசோட்களை கடந்தது. காதல் கதையாக தொடங்கி நீண்டு வந்தது, அண்மைய ட்ரெண்டிற்கு ஏற்ப திகில் தொடராக மாறியுள்ளது. கதைப்படி சரவணன் குடும்பம் ஹோட்டல் நடத்த விரும்புகிறது. இதற்காக ஒரு வீடு பிடித்து அதை ஹோட்டலாக மாற்றுகிறார்கள். அந்த வீட்டுக்குள் இருக்கும் பேய் மீனாட்சிக்குள் புகுந்து கொள்கிறது. இதை தொடர்ந்து ஏற்படும் பல்வேறு திருப்பங்களுடன் கதை நகர்கிறது.

# வண்ணத் திரை

## தொப்புள் காட்சி கலைநயமாம்!

கவர்ச்சியாக நடிக்க மாட்டேன், நடிப்புக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் மட்டுமே நடிப்பேன் என புரளி கிளப்பி, முன்னர் தனது தொப்புளில் தேங்காய் அடித்த தெலுங்கு இயக்குனரையும் வறுத்தெடுத்திருந்தார் டாப்ஸி. அதே டாப்ஸிதான் இப்பொழுது நீச்சல் உடைக்கு மாறியிருக்கிறார். தமிழில் கவர்ச்சி காட்ட மறுத்துவிட்டு, இந்தியில் நடிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என பறந்து போனார். பிங்க், த காஸி அட்டாக், நாம் சபானா போன்ற படங்களில் அடிபட்டு, உதைபட்டு நடித்தார். எல்லாம் ஊற்றிக்கொண்டன. ஆனால் கவர்ச்சி ஹீரோயின்கள் நடித்த படங்கள் ஓஹோவென ஓட, வெறுத்துப்போய் முடிவை மாற்றியுள்ளார். ஜூட்வா 2ம் பாகத்தில் நீச்சல் உடையில் தோன்றி புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளார். தொப்புள் தெரிய நீச்சல் உடை அணிவதில் ஒன்றும் தப்பில்லை. இது கலைநயம் மிக்க படம் என அதற்கும் விளக்கம் கொடுத்துள்ளார். இளம் ரசிகர்களிற்காகத்தான் இப்படி நடித்திருக்கிறாராம்.

## மணிரத்தினத்தின் புதிய படம்!

சிம்புவின் திரை எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில், தனது புதிய படத்தில் அவரை ஒப்பந்தம் செய்துள்ளார் மணிரத்தினம். அரவிந்த்சாமி, விஜய் சேதுபதி, பாஹத் பசில் என ஒன்றுக்கு மேற்பட்ட ஹீரோக்கள் நடிக்கும் படத்திலேயே சிம்புவும் ஒப்பந்தமாகியுள்ளார். இது பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வரவுள்ளது. அடுத்த ஆண்டு இதன் படப்பிடிப்பு ஆரம்பிக்கிறதாம். இதேவேளை, அண்மைக்காலமாக வீட்டில் சும்மா உட்கார்ந்திருந்த சிம்பு, ஆங்கிப்படம் ஒன்றை இயக்க தயாராகியுள்ளார். கவுதம் மேனன் கதை வசனம் எழுதியுள்ளாராம். யுவன் சங்கர்ராஜா இசை. சிம்புவின் தமிழ் படங்களே நல்ல இலட்சணத்தில் வரும்போது ஆங்கிலப்படம் எப்படியிருக்கும்?

## திருப்பதிக்கு வந்த சோதனை!

சிம்பு நடித்தாலே படம் தாறுமாறாக தியேட்டரை விட்டு ஓடிவிடும் என்பதுதான் அண்மைய நிலவரம். வரிசையாக எல்லா படமும் கவிழ, பெரும் சிக்கலில் மாட்டியுள்ளார். போதாதற்கு காதலிலும் அவருக்கு வித்தை பிடிபடவில்லையென அப்பா டி.ஆர் கவலைப்படுகிறார். நயன்தாரா, ஹன்சிகாவில் தொடங்கிய பட்டியல் எதில்போய் முடியும் என்பது தெரியவில்லை. இந்த பிரச்சனைகள் எல்லாவற்றையும் தீர்த்து வைக்க வேண்டி, திருப்பதிக்கு போய் சாமி தரிசனம் செய்துள்ளார் டி.ஆர். சாமி தரிசனத்தின் பின், சிம்புவுக்கு விரைவில் நல்லது நடக்க வேண்டுமென வேண்டினேன். விரைவில் நல்லது நடக்கும். பிடித்த பெண்ணை அவரே தேர்வு செய்வார் என கூறியுள்ளார்.



பவானி

## விவேகம் தோல்வி!

தமிழில் பெரிய நடிகர்களின் படங்கள் வெளியாகி தமிழ்நாட்டில் ஓடுகிறதோ இல்லையோ, அவுஸ்திரேலியாவில் அப்படி ஓடியது, அமெரிக்காவில் இப்படி ஓடியது என அளந்து விடுவார்கள். இத்தனை டொலர் வருமானம் என நாளாந்தம் அறிவிப்பார்கள். ஆனால் விவேகம் படத்தை வாங்கி வெளியிட்ட நிறுவனம் இதுவரை வாயை திறக்கவில்லை. காரணம், படம் நட்டமாம். முதல்நாள் வசூலை மட்டும் வெளியிட்டார்கள். பின்னர் மௌனமாக இருக்கிறார்கள். அதேநேரம் விவேகத்துடன் வெளியான "அர்ஜுன் ரெட்டி" என்ற தெலுங்குப்படம் வெற்றிகரமாக ஓடியுள்ளது. இரண்டு வாரங்களில் 11 கோடிக்கு அதிகமாக வசூலித்துள்ளதாம்.

## விலைமாதுவான ரித்விகா!

மெட்ராஸ் படத்தில் கலையரசனிற்கு ஜோடியாக நடித்தவர் ரித்விகா. பின்னர் கபாலி, எனக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை, ஒருநாள் கூத்து, இருமுகன் பல படங்களில் நடித்தார். கதாநாயகி வாய்ப்பும் கதவை தட்டியது. ஆனால் கவர்ச்சியாக நடிக்க மாட்டேன் என்பதில் உறுதியாக இருந்ததால் அந்த வாய்ப்புக்களை இழந்தார். வித்தியாசமான கதைகளை தேடி நடித்து வருகிறார் ரித்விகா. இந்த நிலையில் சதா கதையின் நாகியாக நடிக்கும் டார்ச்லைட் என்ற படத்தில் விலைமாது வேடத்தில் ரித்விகா நடிக்கிறார். பிரச்சனையில் சிக்கி தவிக்கும் சதாவை சிவப்பு விளக்கு பகுதிக்கு கூட்டிச்செல்வதே இவர்தானாம். ரித்விகா பற்றிய கலங்கவைக்கும் பிளாஸ்பேக் ஒன்றும் படத்தில் உள்ளதாம். மெட்ராஸ் படத்தின் பின் இந்தப்படம் தன்னைப் பற்றி பேசவைக்குமென எதிர்பார்த்திருக்கிறார்.

## திறந்துவிடப்பட்ட மகிழ்மதி அரண்மனை

பாகுபலி படத்திற்காக பிரமாண்ட அரங்குகள் உருவாக்கப்பட்டிருந்தன. இவற்றில்தான் மகிழ்மதி, குந்தலதேசம் அரண்மனைகளும் உருவாக்கப்பட்டிருந்தன. பல கோடி செலவில் உருவான அந்த அரங்குகள் பிரமிக்க வைத்தன. கலை இயக்குனர் சாபு சிறில் தலைமையில் ஆயிரக்கணக்கானவர்கள் இதன் உருவாக்கத்தில் உழைத்தனர். போர்க்கருவிகள், தேர்கள் என சரித்திரகதைக்கு தேவையான அனைத்தும் உருவாக்கப்பட்டிருந்தது. ஹைதராபாத்தில் உள்ள ராமோஜி பிலிம் சிட்டியில்தான் இவை உருவாக்கப்பட்டன. படப்பிடிப்பு முடிந்த பின்னரும் அவை கலைக்கப்படாமல் இருந்தன. இந்த அரங்குகள் தற்போது பொதுமக்களின் பார்வைக்காக திறந்துவிடப்பட்டுள்ளன. பெருமளவானவர்கள் இவற்றை பார்த்து வருகின்றனர்.

# ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படைக் கூறுகள்



எம்.ரமணன் LLB



ஒப்பந்தச் சட்டத்தின் பிரகாரம் சட்டக்கட்டுப்பாடு உடைய உடன்படிக்கையை (Agreement) நாம் ஒப்பந்தமென்று கூறுவோம். இருப்பினும் எல்லா உடன்படிக்கையும் ஒப்பந்தமாக முடியாது. உடன் படிக்கையொன்று அதில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரையும் பிணைக்கும் தன்மை யுடையதும் நீதிமன்றத்தால் அமுலாக்கப் படக் கூடியதுமான ஓர் சட்டக் கடப்பாடாக விளங்குகின்ற போதே ஒப்பந்தமாகக் கருதப்பட முடியும்.

பேராசிரியர் C.G.Veeramantry ஒப்பந்தம் ஒன்றின் உள்ளார்ந்த பண்புகளாக பின்வருவனவற்றைப் பட்டியலிடுகின்றார்.

1) கொடைமுனைவும் ஏற்பும் (Offer & Acceptance) காணப்படல் வேண்டும்.
2) சட்டவலுவுள்ள நோக்கம் காணப்படல் வேண்டும்
3) ஒப்பந்தக் கிரயம் அல்லது பெறுமதி காணப்படல் வேண்டும்
4) ஒப்பந்தத் தரப்பினர் ஒப்பந்தம் செய்யும் தகைமையுடையவராக இருக்க வேண்டும்
5) நேர்மையான சம்மதம் ஊடாக இருதரப்பினரிடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்
6) ஒப்பந்த நிபந்தனை வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்க வேண்டும்
7) ஒப்பந்தமானது பிழை, மோசடி, வலுக் கட்டாயம், முறையற்ற செல்வாக்கு என்பவற்றின் தாக்கங்களிற்கு அப்பால் பட்டு காணப்படல் வேண்டும்

இத்தகைய ஒப்பந்தமானது பின்வரும் மூன்று அடிப்படைக் கூறுகளை கொண்டு காணப்படல் வேண்டுமென ஒப்பந்தச் சட்டம் குறிப்பிடுகின்றது.

1) கொடைமுனைவு (Offer)
2) ஏற்பு (Acceptance)
3) ஒப்பந்தக் கிரயம் அல்லது பெறுமதி (Consideration)

### கொடைமுனைவு (Offer)

கொடை' முனைவு என்பது தனக்காக ஒரு செயலை செய்து தருமாறும் அதற்காக அதை நிறைவேற்றுபவருக்கு தான் சிலவற்றைச் செய்வேன் எனவும் சில சந்தேகமற்ற நிபந்தனைகளை முன்வைத்து ஒருவர் மற்றொருவரையோ அல்லது பொதுமக்களையோ நோக்கி விடுகின்ற கோரிக்கை ஆகும். இது வெளிப்படையாக எழுத்து மூலமோ அல்லது வாய்மொழி மூலமோ அல்லது நடத்தை மூலமோ வெளிப்படுத்தப்படலாம். இக் கொடை முனைவு இரண்டு வகைப்படும்.

### விசேட கொடைமுனைவு (special offer)

குறிப்பிட்ட ஒரு நபரை மட்டும் அல்லது குறித்த குழுவை மட்டும் நோக்கி விடுக்கப்படும் கொடைமுனைவு விசேட கொடை முனைவு எனப்படும். உதாரணமாக குறித்த ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் மத்தியில் ஒரு பணி தொடர்பாக விடுக்கப்படும் கொடைமுனைவு விசேட கொடை முனைவு எனப்படும்.

### பொது கொடைமுனைவு (General Offer)

ஒரு நபர் அல்லது ஒரு குழுவால் பொது மக்களை நோக்கி விடப்படும் ஒரு கோரிக்கையாகும். ஊதாரணமாக ஒருவர் தனது குறித்த வேலையை மேற்கொள்வதற்க்காக குறித்த சன்மானம் வழங்கப் படும் என பத்திரிகையில் விளம்பரம் ஒன்றை மேற்கொள்ளும் போது அதனை யாராவது ஒருவர் முதலாவதாக ஏற்;கும் போது அது பொது கொடைமுனைவு ஆகும். இருப்பினும் கொடைமுனைவை வழங்குபவர் முன்மொழிதலை திட்டவட்டமாக குறிப்பிடல் வேண்டும். இது Gunthing VsLynn எனும் வழக்கில் குறிப்பிடப்பட்டது.

இக் கொடைமுனைவு என்பதனுள் பேரம் பேசுவதற்க்கான அழைப்பு என்ற விடயமும் உள்ளடங்குமா என்ற கேள்வி பல தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இருப்பினும் கொடை முனைவா பேரம்பேசுவதற்கான அழைப்பா என்பது கோரிக்கையினை விடுக்கும் நபர் பயன்படுத்தும் மொழிமற்றும் விடயத்தின் தன்மையில் தங்கியுள்ளது. குறித்த ஒரு நபர் குறித்த பணிக்காக மக்கள் மத்தியில் பொதுவானதோர் அழைப்பை விடுக்கும்போது அது பேரம் பேசுவதற்கான அழைப்பாகும். ஊதாரணமாக ஏல விற்பனைக்காரர் செய்யும் விளம்பரம் ஒன்றை எடுத்து நோக்கின் அது பேரம் பேசுவதற்கான அழைப்பாகக் கருதப்படுமே தவிர கொடைமுனைவு அல்ல. சட்ட வலிதான கொடைமுனைவு ஒன்று பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

1) திட்டவட்டமான நியதிகளைக் கொண்டிருக்கும்
2) சந்தேகமற்றதாக இருத்தல் வேண்டும்
3) சட்டக் கடப்பாட்டை ஏற்படுத்த வேண்டும்
4) பேரம் பேசும் அளவிலிருந்து முற்றாக வேறுபட்டிருக்க வேண்டும்
5) ஏற்பவருக்கு சரியாகத் தொடர்பாடப் பட்டிருக்க வேண்டும்

பின்வரும் சந்தர்ப்பங்களில் கொடை முனைவானது வலுவிழந்து போகின்றது.

1) கொடைமுனைவு முடிவுறுத்தப்படல்
2) கொடைமுனைவை பெற்றவர் அதனை நிராகரிக்கும் போது
3) கொடைமுனைவுக்குரிய காலப்பகுதி முடிவடைதல்
4) ஒப்பந்த பொருள் அழிவடைதல்
5) கொடைமுனைவை வழங்கியவர் அதனை மீளப்பெறல் அல்லது இல்லா தொழித்தல்
6) கொடைமுனைந்தவர் அல்லது ஏற்பவர் மரணமடைந்தால்

### ஏற்பு (Acceptance)

கொடைமுனைவில் சொல்லப்பட்ட கடமைகளை சொல்லப்பட்ட நியதிகளுக் கேற்ப எதுவித நிபந்தனைகளுமின்றி நிறைவேற்ற உடன்படுதல் ஏற்பு ஆகும். இவ் ஏற்பு ஆனது வாய்மொழி மூலம் அல்லது நடத்தை மூலம் அல்லது எழுத்து மூலம் கொடைமுனைந்தவருக்கு தெரிவிக்கப்படலாம். எனினும் கொடை முனைவில் ஏற்பு எவ்வாறு நிகழ்த்தப்படல் வேண்டும் என்ற நிபந்தனை குறிக்கப் பட்டிருந்தால் அவ்வாறே ஏற்பும் நிகழ்த்தப்படல் வேண்டும். இருப்பினும் கொடைமுனைவில் குறிப்பிடப்பட்ட முறைக்கு அண்மையான முறையில் கொடைமுனைந்தவருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிறைவேற்றப்படுமா யின் அவ் ஏற்பு ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏற்பு (Acceptance) கட்டாயமாக கொடை முனைந்தவருக்கு தெரியப்படுத்தப்படல் வேண்டும். ஏனெனில் தன்னுடைய கொடைமுனைவு ஏற்கப்பட்டதா இல்லையா என்பதை கொடைமுனைந்தவர் அறிந்தால் மட்டுமே வலிதான ஒப்பந்தம் உருவாகியிருப்பதை அறிய முடிவதுடன் தனது கொடைமுனைவுகள் ஏற்கப்படாத போது வேறு கொடைமுனைவுகளை மேற்கொள்ள முடியும். இவ் விடயம் Fern Gold Mining Company Ltd Vs Jopien என்ற வழக்கின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது. மேலும் ஏற்பவர் எதுவித அறிவித்தலையும் கொடைமுனைவு சார்பாக மேற்கொள் ளாது மௌனமாக இருப்பின் அதனையும் வலிதான ஏற்பாகக் கொள்ள முடியாது என FelthouseVs Bindley *(1863)* என்ற வழக்கில் நீதிமன்றம் குறிப்பிட்டது. தபால் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஏற்புக்களின் போது ஏற்புக் கடிதம் எப்போது தபாலிடப்படுகின்றதோ அன்று ஒப்பந்தம் நிகழ்ந்ததாகக் கருதப்படுமே தவிர ஏற்புக் கடிதம் உரிய நபரைச் சென்றடைந்ததா அல்லது அவரால் வாசிக்கப்பட்டதா என்பது கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

### ஒப்பந்தக் கிரயம் அல்லது பெறுமதி (Consideration)

ஒருதரப்பினர் மற்றைய தரப்பினரின் வேண்டுகோளுக்கமைய அவர்களது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மேற் கொண்டுள்ள ஒப்பந்தத்திற்கு விலையாகப் பெற்றுக்கொள்ளும் எவையும் ஒப்பந்தக் கிரயம் ஆகும். இவ் ஒப்பந்தக்கிரயம் பெறுமதியுடையதாகவும் அப் பெறுமதி சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதுமானதாக இருக்க வேண்டும்.

இப் பெறுமதி தொடர்பில் இலங்கையில் உரோமன் டச்சுச் சட்டம் மற்றும் ஆங்கிலச் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களும் வழக்கிலுள்ளன. உரோமன் டச்சுச் சட்டத்தில் நல்லேது (JustaCausa) என்றும் ஆங்கிலச்சட்டத்தில் பிரதிபலன் என்றும் பயன்படுத்தப்படுகின்றது.

> **தன்னுடைய கொடைமுனைவு ஏற்கப்பட்டதா இல்லையா என்பதை கொடைமுனைந்தவர் அறிந்தால் மட்டுமே வலிதான ஒப்பந்தம் உருவாகியிருப்பதை அறியமுடிவதுடன் தனது கொடைமுனைவுகள் ஏற்கப்படாத போது வேறு கொடைமுனைவுகளை மேற்கொள்ள முடியும்.**

உரோமன் டச்சுச் சட்டத்தில் நல்லேது எனும் சொல் பல்வேறு அர்த்தங்களை கொண்டிருப்பதுடன் பிரதானமாக அது பயன்படுத்தப்படுவது வலிதான ஒப்பந்தம் உருவாகுவது தொடர்பில் அத்தியாவசியமான மூலங்களில் ஒன்றாகும். இருப்பினும் உரோமன் டச்சுச் சட்டத்தில் இவ் நல்லேது தொடர்பில் தெளிவான அர்த்தம் இல்லை என்பதுடன் ஆங்கிலச் சட்டத்தில் குறிப்பிடப்படுகின்ற பிரதிபயன் என்பதிலிருந்து முற்றாக வேறுபட்டது என டச்சு சட்டவாளர்கள் கருதுகின்றனர். பொதுவாக கொடுக்கல் வாங்கலுக்கான நோக்கம் அல்லது காரணம் நல்லேதுவாகப் பொருள்படும்.

ஆங்கிலச் சட்டத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பிரதிபயன் அத்தியாவசியமான மூலகமாகும். ஒப்பந்தம் ஒன்றில் இருவருக்கிடையில் ஏற்படுகின்ற அன்னியோன்னியமான கொடுக்கல் வாங்கல்கள் பிரதிபலன் எனப்படும். ஒப்பந்தங்கள் தொடர்பான பிணக்குகள் வரும்போது பிரதிபயனைப் வழங்கியவர் வழங்கியதை நிரூபித்தல் வேண்டும். பிரதிபலன் மூன்று வகைப்படும்.

1) நிறைவேற்ற வேண்டிய பிரதிபலன் அல்லது எதிர்கால பிரதிபலன்
2) நிறைவேற்றிய பிரதிபலன் அல்லது நிகழ்கால பிரதிபலன்
3) முடிவடைந்த பிரதிபலன் அல்லது இறந்தகால பிரதிபலன்

இத்தகைய மூன்று விடயங்களையும் உள்ளடக்கியதாக ஒரு வலிதான ஒப்பந்தம் காணப்படல் வேண்டும்.

# கூகுள் பதில் சொல்ல விரும்பாத கேள்வி..

கூகுள் ஒவ்வொரு நொடியும் உலகம் முழுவதும் 40 ஆயிரம் கேள்விகளுக்கு பதில் சொல்கிறது. ஒரு நாளைக்கு 350 கோடி பதில்கள். ஓராண்டுக்கு ஒரு லட்சத்து 27 ஆயிரம் கோடி பதில்களை தருகிறது. ஆனால் கூகுள் நிறுவனத்திடம் ஒரே ஒரு கேள்வியை கேட்டால் மட்டும் பதில் அளிக்க மாட்டார்கள். அது... கூகுள் நிறுவனம் ஏகபோக வர்த்தகத்துக்கு துணை போகிறதா? என்ற கேள்விதான்.

அமெரிக்காவில் கடந்த 20 ஆண்டுகளாக ஏகபோக வர்த்தகத்துக்கு எதிரான பல ஆய்வுகளை மேற்கொண்டவர் பேரி லின். நியூ அமெரிக்கா பவுன்டேஷன் என்ற ஆய்வு அமைப்பின் உறுப்பினர். கூகுள், பேஸ்புக், அமேஸன் போன்ற மிகப் பெரிய நிறுவனங்களின் வளர்ச்சி குறித்து பல ஆய்வுகளை செய்தவர். இவற்றின் அபார வளர்ச்சியும் பலமும் மற்ற நிறுவனங்களை வளர விடாமல் தடுப்பதாக கருத்துக் கொண்டவர். இந்த கருத்தே இவருடைய வேலைக்கு வேட்டு வைத்துவிட்டது.

கடந்த வாரம் இவரும் இவருடைய சகாக்களும் நியூ அமெரிக்கா ஆய்வு அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டனர். தனது இந்த வெளியேற்றத்துக்கு காரணம் கூகுள்தான் என அடித்துக் கூறுகிறார் லின். நியூ அமெரிக்கா அறக்கட்டளைக்கு கடந்த 1999 முதல்




இதுவரை 2.10 கோடி டொலர் நன்கொடை அளித்திருக்கிறது கூகுள். இந்த அமைப்பின் கவுரவத் தலைவராகவும் இருந்திருக்கிறார் கூகுள் தலைவர் எரிக் ஸ்மித். இதுபோக, இங்குள்ள கருத்தரங்கு மையத்தின் பெயரே எரிக் ஸ்மித் ஐடியாஸ் லாப். கூகுள் செலவில் உருவான மையம் இது.

"நான் கடந்த 15 ஆண்டுகளாக நியூ அமெரிக்கா அமைப்பில் இருக்கிறேன். கடந்த ஆண்டுதான் பிரச்சினை ஆரம்பமானது. கடந்த ஜூன் மாதம் கூகுள் நிறுவனத்துக்கு ஐரோப்பிய யூனியன் 242 கோடி யூரோ அபராதம் விதித்தது. விதிமுறைகளை மீறி நடந்து கொண்டதால் இந்த அபராதம். இதை வரவேற்று கருத்துத் தெரிவித்தேன். ஐரோப்பிய யூனியனை பின்பற்றி அமெரிக்காவும் விதிமுறைகளை மீறும் மிகப் பெரிய நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறியிருந்தேன். இந்தக் கருத்துதான் எனக்கு ஆபத்தாகி விட்டது" என்கிறார் லின்.

"கூகுள் நிறுவனத்துடன் நமது உறவை பலப்படுத்தும் விதத்தில் பல நடவடிக்கைகள் எடுத்து வரும் இந்த நேரத்தில், இதுபோன்ற கருத்துகள் தேவைதானா... இது நமக்கு வரும் நன்கொடைகளை பாதிக்காதா..." என நியூ அமெரிக்காவின் தலைமை அதிகாரி ஆனி மேரி ஸ்லாட்டர் லின்னுக்கு மெயில் அனுப்பியிருந்தார். அதோடு, இப்படி எல்லாம் கருத்து தெரிவிப்பது தொடர்ந்தால் எங்களுடைய அத்தனை தொடர்புகளையும் துண்டித்துக் கொள்வோம் என கூகுள் மிரட்டியுள்ளது.

ஸ்லாட்டர் அனுப்பியிருந்த மெயில் செய்தியாக நியூயோர்க் டைம்ஸ் இதழில் வெளியானது.மறுவாரமேலின்னும் அவரது குழுவினரும் நியூ அமெரிக்கா அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

"பல துறையிலும் சிறந்த அறிஞர்களைக் கொண்ட அமைப்புதான் நியூ அமெரிக்கா.




இங்கு யாரும் தைரியமாக தங்கள் கருத்துகளைக் கூறும் சுதந்திரம் இருந்தது. அதனால்தான் இந்த அமைப்பின் பல கருத்துகளில் நம்பகத்தன்மை இருந்தது. ஆனால்,நிலைமை இப்போது மாறிவிட்டது. பெரிய அளவில் நன்கொடை அளிக்கும் நிறுவனங்கள், தாங்கள் என்ன விரும்புகிறமோ அதைத்தான் மற்றவர்களும் பேச வேண்டும் என நினைக்க ஆரம்பித்துவிட்டன.


கூகுள் நிறுவனத்தின் கோபத்துக்கு காரணம் இருக்கிறது. சமீப காலமாக, எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்கும் ஓப்பன் மார்க்கெட் கருத்து பலம் பெற்று வருகிறது. அதோடு, கூகுள் மீது மேலும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க ஐரோப்பிய யூனியன் திட்டமிட்டு வருகிறது. இந்த நிலையில் நிறுவனத்துக்கு எதிரான இதுபோன்ற நிபுணர்களின் கருத்துக்கள் வெளிவராமல் தடுப்பதற்காகவே என்னை வெளியேற்றி இருக்கிறார்கள்" என்கிறார் லின்.

ஆனால் இதை கூகுளும் நியூ அமெரிக்கா பவுன்டேஷனும் மறுத்துள்ளன. "லின் வெளியேற்றத்துக்கு நாங்கள் காரணமல்ல.. எங்களுக்கு எதிரான கருத்துகளை லின் வெளியிட்ட பிறகும், இந்த ஆண்டு நாங்கள் கொடுத்த நன்கொடையைக் கொஞ்சம் கூட குறைக்கவில்லை" எனக் கூறியுள்ளது கூகுள்.

"கடந்த 1999ம் ஆண்டு தைவானில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக, அமெரிக்கா முழுவதும் உள்ள கணினி நிறுவனங்கள் மூடப்பட்டன. அதற்கான காரணத்தை ஆராய முற்பட்ட போதுதான், அமெரிக்காவின் அத்தனை கணினி நிறுவனங்களுக்கும் தேவையான செமி கண்டக்டர்கள் தைவானில் இருந்துதான் இறக்குமதியாவது தெரிந்தது. நில நடுக்கத்தால், மின்சாரம் இல்லாமல் போக, தைவானில் செமி கண்டக்டர் உற்பத்தி அடியோடு நின்றுபோயிருக்கிறது. அது இல்லாமல் எப்படி கணினி உற்பத்தி செய்ய முடியும். அத்தனை நிறுவனங்களும் ஒரே இடத்தில், ஒரு சில நிறுவனங்களிடம் இருந்தே செமி கண்டக்டர்களை வாங்குவது தெரிய வந்தது. தயாரிப்புச் செலவு குறைவு, விலை மலிவு என்பதற்காக, இவ்வாறு உற்பத்தியை ஒரே இடத்தில் குவித்து வைத்திருந்தன நிறுவனங்கள். இதற்குப் பிறகுதான் இதில் தீவிரமாக கவனம் செலுத்த ஆரம்பித்தேன்" என்கிறார் லின்.

"அமெரிக்காவின் வளர்ச்சிக்குக் காரணமே ஏகபோக வர்த்தக தடுப்புச் சட்டம்தான். யாரும் எந்த வேலையும் பார்க்கலாம், சிறிய நிறுவனத்தை தொடங்கலாம், அதற்குத் தேவையான தகவல்களைப் பெறலாம். இதற்கான சுதந்திரத்தை உறுதி செய்வதே ஏகபோக வர்த்தக தடுப்புச் சட்டம்தான். அதிகாரமும் பணமும் ஒரு சிலரின் கைகளில் மட்டுமே இருப்பதை தடுப்பதுதான் இந்த சட்டத்தின் முக்கிய நோக்கமே. ஆனால் உலகம் முழுவதுமே இது மாறி வருகிறது. இதனால் புதிதாக ஆரம்பிக்கப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. தனித்தனியாக இருந்த மருத்துவமனைகள், மிகப் பெரிய குழுமத்தின் ஒரு பகுதியாக மாறி வருகின்றன. விமான போக்குவரத்தின் ஏறக்குறைய 80 சதவீதம் 4 விமான நிறுவனங்களின் கையில் இருக்கிறது. இதனால் சந்தையில் போட்டி குறைந்து, இந்த நிறுவனங்கள் வைத்ததுதான் விலை என்ற நிலை உருவாகியுள்ளது. அதோடு நாம் எப்படி வேலை பார்க்க வேண்டும் என நிபந்தனை விதிப்பதோடு, நாம் என்ன பேச வேண்டும், நினைக்க வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் தீர்மானிக்க விரும்புகின்றன. இதற்கு எதிராக நடந்தால் வேலை போய் விடும். 'அதற்கு நான்தான் சமீபத்திய உதாரணம் என்கிறார் லின்.






▶ ரோஹிங்ஞா முஸ்லீம்கள் மீதான வன்முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து முல்லைத்தீவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஹிச்சிராபுர ஜூம்ஆ பள்ளி வாசலில் முன் ஒன்று கூடியவர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# இந்த வாரம் பேஸ்புக் பிரபலங்கள்!

சரவணபவ ஆனந்தன் செந்தூரன்

அரசியல் செயற்பாடுகளில் தீவிரமாக இயங்குபவர்கள், பேஸ்புக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பா, தமிழ் தேசிய மக்கள் முன்னணியா என சிவனின் அடிமுடி தேடுவதை போன்ற விவாதங்களில் சமூக வலைத்தளங்களில் தீவிரமாக ஈடுபடுபவர்களை இந்த வாரம் அழைத்து வந்தால் எப்படியிருக்கும்?

தமிழ் தேசிய அரசியலில் அதீத ஈடுபாட்டுடன் செயற்படும், சமூக வலைத்தளங்களில் இயங்கும் சிலரை தொடர்பு கொண்டோம்.

இப்படி எத்தனையோ கேள்விகளை கூட்டங்களில் எதிர்கொண்டவனாக்கும், நம்மிடமேயா என தயாரானார் தமிழரசுக்கட்சியின் தீவிர செயற்பாட்டாளரும், ஆசிரியருமான ப.தர்சானந்...

என்ன கேள்வியென்றாலும் கேட்கலாம் என தயாரானார், தமிழரசுக் கட்சியின் தீவிர செயற்பாட்டாளரும், ஆசிரியருமான செ.பிரதாப்...


காலையில் பேஸ்புக்கை ஓப்பின் பண்ணினாலே ஏதாவதொரு கேள்வியுடன்தான் நமது வாழ்க்கையே ஆரம்பிக்கிறது, கேள்வி நமது கட்சியுடன் கூடப்பிறந்தது... கேளுங்கள் என தயாரானார் கலாசார நிலையத்தில் பணியாற்றும் பா.பார்த்தீபன். தமிழ் தேசிய் மக்கள் முன்னணியின் தீவிர அனுதாபி.

இவர்களுடன்... "நம்ம இமேஜை டமேஜாக்கி விடாதீங்கப்பா" என்றபடி தயாரானார் நடிகை லோஜினி.


ப.தர்சானந்


செ.பிரதாப்


பா.பார்த்தீபன்


லோஜினி

"துப்பெல்லாம் தப்பே இல்ல..." என்ற தென்னிந்திய சினிமா பாடலை எழுதிய ஈழத்து பாடலாசிரியர் யார்?

**பொத்துவில் அஸ்மின்**

*ப.தர்சானந்:* (கடுமையாக யோசிக்கிறார்) தெரியல தம்பி... நான் ஏதும் பொலிற்றிக்ஸ் கேள்வி கேட்பியள் என நினைச்சன்.

*செ.பிரதாப்:* (சிரிக்கிறார்) பொத்துவில் அஸ்மின்... சரியா?

*பா.பார்த்தீபன்:* என்ன ஈழத்து பாடலாசிரியர் இந்தபாடலைஎழுதினாரா? தெரியலையே

*லோஜினி:* ஓ... தெரியுமே.. அஸ்மின் அண்ணா...பொத்துவில் அஸ்மின் (வெற்றிப் புன்னகை தெரிகிறது)

தியாகி திலீபனின் உண்ணாவிரதத்தின் பன்னிரண்டாம் நாள், அவரது உடலை பரிசோதித்து, காலை தொட்டு வணங்கி திலீபன் மரணமானதை உறுதிப்படுத்திய வைத்தியர் யார்?

**வைத்தியர் சிவகுமார்**

*ப.தர்சானந்த்:* ம் (நீண்டநேரமாக யோசிக்கிறார்) தேடிப்பார்த்து தான் சொல்லனும் தம்பி.

*செ.பிரதாப்:* அது டொக்ரர் மயிலேறும் பெருமாள்...

*பா.பார்த்தீபன்:* திலீபனின் மரணமா? ம்... (கடுமையாக யோசிக்கிறார்).. தெரியலையே

*லோஜினி:* தெரியாது

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் வே.பிரபாகரன், புலிகள் அமைப்பை விட வேறெந்த ஆயுத இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவர்?

**தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ)**

*பா.தர்சானந்த்:* இதுக்கு விடை தெரியும்... ரெலோ. சிவாஜிலிங்கம் அண்ணை சொன்னவர்.

*செ.பிரதாப்:* புலிகள் அமைப்பை விடவா?... நான் அறியவில்லையே (யோசிக்கிறார்) புதிய தமிழ் புலிகள் என்றுதான் துவங்கினவர். (சந்தேகமாக பார்க்கிறார்)

*பா.பார்த்தீபன்:* வேற ஆயுத இயக்கத்தில செயற்பட்டவரா.. ஓ.. (கடுமையாக யோசிக்கிறார்)

*லோஜினி:* ரெலோ... நமக்கும் கிஸ்ட்ரி தெரியுமில்ல...

கிழக்கு மாகாணசபை அவைத்தலைவர் யார்,

**சந்திரதாச கலபதி**

*பா. தர்சானந்:* இரண்டு கேள்வி பாஸாகிற்றன்... சந்திரதாச கலபதி. இப்படியான கேள்வியள் என்றால் அடிச்சு நொருக்குவம்.

*செ.பிரதாப்:* ஆரியவதி க்லபதி..

*பா.பார்த்தீபன்:* கலபதி என்கிற அவாவோ? (இழுக்கிறார். வேறொரு கலபதி என்ற போது கடுமையான குழப்பமடைந்து விட்டார்)

*லோஜினி:* கிழக்கு மாகாணசபையோ... ஐயையோ. அதைப்பற்றி ஒன்றும் தெரியாதே. வடமாகாணசபை அவைத் தலைவரை தெரியும் சீ.வீ.கே.சிவஞானம்.

---

# மாரிகாலப் புன்னகைப்பு(பூ)

விக்னேஸ்வரன் அஜந்தன்,
மருக்காரம்பளை, வவுனியா.



வெண்மைத் திரை வானம்
கரு முகிலாய்த் திரண்டுவரும்
சிறகு முளைத்த முகில்
சிதறி விழ எத்தணிக்கும்
மழைத் துளியை முத்தமிட
மண் மேகம் தவமிருக்கும்
சிதறி விழுந்த நீரால் - மனமோ
சில்லென்று சிறகடிக்கும்

அந்தி சிவக்கும்
முந்திய கருமேகம்
அம்புலியின் நிழல் மறைக்கும்
கூதல் காற்றால்
குளிர் தாங்கா தேகமது
தேனீர் கோப்பையோடே
தென்றலாய் மிதந்து வரும்

மை இருளின் கனதியை
மழைக் குருவி ஓலமிட
முற்றத்தில் வெடித்த நீர்
முகம் மலரக் கோலமிடும்
வான வில்லின் ஓவியத்தின்
வண்ணச் சிதறல் சில - என்
கூரை வீட்டைப் பிய்த்துக் கொண்டு
குடிசைக்குள் வந்துவிடும்

பன்னீர் மரக் கிளைகள்
பசுமையாய் நீட்சி பெற
தண்ணீர் நிறைந்த குளம்
தாமரையாய் காட்சி தரும்
நிலம் கீறி புலம் காக்க
காளான்கள் குடை பிடிக்கும்

கரு நீலக் கடல் தேடி
(காகிதக்) கப்பல்கள் படையெடுக்கும்

விரால் மீனும் பனையேறியும்
நாரைகளும் நண்டுகளும்
நாக்கிளிப் புழுக்களோடே - சில
நத்தை வகைகளும்
குட்டைகளில் நீந்தி வரும்
அட்டைகளுமென
அரிய பல உயிரினங்கள்
அப்பப்போ தலையசைக்கும்

மருத மர நிழலில்
மரங் கொத்தி அமர்ந்திரக்கும்
வைகறை துயில் கலைய
வானம் பாடி வாழ்த்துப் பாடும்
சப்தஸ் வரங்களையும்
சங்கீத இசைகளையும்
ஓடை இடுக்குகளில்
பேடைக் குயில் கூவி நிற்கும்

வரம்புகள் உயர்வடையும்
வாய்க்காலில் நீர் வழியும்
வயல் வரம்புகளில்
வசந்தங்கள் கூடி வரும்
கொஞ்சும் மழை அழகால்
நெஞ்சம் பூத்துவிடும் நம்ம
பஞ்சம் பசியெல்லாம் - இந்த
பருவ மழை தீர்த்துவிடும்

தேன் சிந்தும் மழைத் துளிகள்
தேசமெல்லாம் விளைச்சல் தரும்

பாலை நிலமும் மீண்டு
பசுமை நிறைந்து வரும்
சோலை வெளியெல்லாம் - நல்ல
சொற்பனக் கனவு வரும்
செங்காந்த வேளைகளில்
தூர்வனத் துறல்களில்
சில்லரித்த தேகங்கள் - காதல்
சில்மிசத்தில் திளைத்து விட
முத்தங்கள் முளைக்கப்படும்
அது மழை நீரால் சுவைக்கப்படும்

பின்னிய இரவுகளின்
மின்னலின் ஒளிப் பிறப்பால்
வாழை மரங்களிலெல்லாம்
வண்ணத் திரவியங்கள் வந்து விழும்
மிதமான இராத்திரிக்காய்
மின் மினிகள் ஒளி சமைக்கும்
இதமான நறுமணத்தோடு - இந்த
இன்ப ம்ழை நின்று விடும்

அழகான தருணங்களில் ·
அங்கங்கள் மெய் சிலிர்த்து நிற்கும்
ஆனந்தப் பெருவெளியின்
அங்கலாய்ப்பில் மனம் பறக்க
முகம் மலர்ந்த நிறைவுடனே - இந்த
மும்மாரி விடையளிக்கும்

எத்தனையோ காலங்கள்
இத்திரையில் வந்திடினும்
பித்துப் பிடித்த மனம் - ஏனோ
மாரி ஒன்றின் வருகைக்காய்
மறுபடியும் தவமிருக்கும்...





# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்

கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்






**விந்தன் (வயது 26)**
**கிளிநொச்சி**

கேள்வி: எனக்கு தற்போது திருமணம் பேசி முற்றாக்கியுள்ளனர். ஆனால் எனக்கு திருமணத்தில் பயமாக உள்ளது. காரணம், எனது ஆண் உறுப்பு சிறிதாக உள்ளது. என்னால் மனைவியை திருப்திப் படுத்த முடியுமா என்ற தயக்கமுள்ளது. 15 வயதில் இருந்து சுயஇன்ப பழக்கமும் இருக்கிறது. சுயஇன்பத்தின் போது உறுப்பு பெரிதாக உள்ளது. எனது சந்தேகத்தை தீர்த்து வையுங்கள்.

பதில்: அன்புத் தம்பி, இனப் பெருக்கம் மற்றும் பாலியல் சுகாராதரம் தொடர்பில் நீர் கொண்டுள்ள விழிப்புணர்வு கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன். வெள்ளம் வரும் முன் அணை கட்ட வேண்டும் எனும்



உங்களின் வாழ்க்கைத் திறன் உன்னத மானதே சரி விடயத்துக்கு வரும் உண்மையில் இனப் பெருக்கம் மற்றும் பாலியல் ஆரோக்கியத்தில் ஆணுறுப்பின் பங்கு மிக மிக அவசியமான ஒன்றே. ஆணுறுப்பில் இருக்கக் கூடிய உடலியல் குறைபாடுகள் குடும்ப வாழ்வில் விரிச லையும், குழப்பங்களையும் தோற்றுவிக்கும் என்பது உண்மையே.

தாம்பத்திய உறவில், ஆணுறுப்பின் விறைப்புத் தன்மை, விந்து வெளியேற்றம் இரண்டும் மிக முக்கியமானவை. ஆண் குறியின் விறைப்புத் தன்மை, மற்றும் விறைப்புடன் இருக்கக் கூடிய நேரம் இரண்டும் ஆண் பெண் உடலுறவுக்கு அவசியமானவை. ஊடலியல் ரீதியாக ஒரு பெண்ணை பாலியல் ரீதியாக திருப்தி நிலைக்கு கொண்டு செல்வதற்கு ஆண் குறியின் விறைப்பின் அளவு அல்லது தடிப்பும் அது எவ்வளவு நேரத்துக்கு விறைப்புடன் செயற்பட்டு விந்து வெளியேற்றத்தை மேற் கொள்ளுகின்றது என்பதும் கவனிக்கப்பட வேண்டியவை, ஏனெனில் பெண் யோனியின் வாசலில் காணப்படக் கூடிய பெண் குறி மற்றும் ஆண் குறிகளுக்கிடையிலான தொடுகை நேரத்தினால் பொறுந்த தம்பதிகளுக்கான பாலியல் திருப்தி நிலை தீர்மானிக்கப்படுகின்றதே ஒழிய மாறாக ஆண் குறியின் நீளத்தைப் பொறுத்து அல்ல. நீளமான ஆண் குறிதான் பெண்ணை திருப்திப்படுத்த முடியும் என்பது ஒரு போலியான எண்ணக்கரு. நீண்ட ஆண் குறி இருந்தும் விறைப்பு நிலையில்லை அல்லது விறைப்பு நேரம் குறையுமாயின் பாலியல் உறவில் பிரச்சினைகள் ஏற்படலாம். விறைப்புத் தன்மை விந்து வீசல் வேகத்துடன் தொடர்புடையது. எனவே விந்து வீசல், அல்லது வெளியேற்றக் குறைபாடுகள் மலட்டுத் தன்மைப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

உமது மடலின் படி உமது ஆண் குறி விறைப்படைவதாகவும், சுய இன்பம் காணமுடிவதாக கூறியுள்ளீர்கள். உமக்கு திருமணம் பேசுவதாக கூறியுள்ளீர்கள். எனவே உமக்கு எதிர்கால குடும்ப வாழ்வு பற்றி எந்தப் பயமும் வேண்டாம். உண்மையில் நீளமான ஆண்குறி உள்ள ஆண்களைத் தான் பெண்கள் விரும்புவார்கள் என்பது தேவையற்ற பயம். ஆண்குறியின் அளவைப் பெருப்பிக்க எதுவித மருந்தும் இல்லை. உண்மையில் சில விற்றமின்களும் குறிப்பிட்டவகை புரத உணவுகளும் ஆண் இனப்பெருக்க ஓமோன் உற்பத்தியை துண்டக் கூடியவை. ஊடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் சிறந்த ஆரோக்கியமுள்ள ஒருவரால் எப்போதும் உடலுறவில் பெண்ணைத் திருப்திபடுத்த முடியும். பயம் வேண்டாம். பயணத்தை தொடரவும்.

**பெயர் குறிப்பிடவில்லை (வயது 27)**
**மட்டக்களப்பு**

***கேள்வி: நான் ஒரு ஆண். 3 வருடங்களுக்கு முன் படிக்கும் போது ஒரு பெண்ணுடன் உறவுகொண்டேன். அவள் கர்ப்பம் தரிக்கவில்லை. இருவர் சம்மதத்துடன்தான் இது நடந்தது. 3 வருடமாக எங்களுக்குள் பெரிய தொடர்பிருக்கவில்லை. ஆனால் இப்போது அவள் வந்து தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்கின்றாள். ஆனால் எனக்கு அதில் இஷ்டம் இல்லை. காரணம் நான் வேறு ஒரு பெண்ணைக் காதலிக்கின்றேன். ஆனால் அவள் நமது உறவு விடயத்தை என் காதலியிடம் சொல்லிவிடப் போவதாக மிரட்டுகின்றாள். நான் இப்போது என்ன செய்வது?***

பதில்: உமது கடிதத்தைப் பார்க்கும் போது மேற்கத்தைய கலாச்சாரம் எமது பிரதேசத்திலும் ஊடுருவிவிட்டது என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிகின்றது. இவ்வகையான உறவை ஆங்கிலத்தில் "Casual sex" என்பார்கள். இவ்வாறான உறவுகளை அவர்களின் கலாச்சாரத்திலே "வாழ்க்கைத் துணை" என்னும் பகுதிக்குள் அவர்கள் கொண்டு வருவதில்லை. அவர்களைப் பொறுத்தவரைக்கும் அது ஒரு சம்பவம்.; அவ்வளவே. ஆனால் காதல், கல்யாணம், குடும்பம் என்பவைகள் சம்பவங்கள் அல்ல. அவை சரித்திரங்களாகுபவை. அவற்றிற்கென்று ஒரு. தனித்துவம் உண்டு. சம்பவங்களான பாலியல் தொடர்புகள் சரித்திரமாகும் வாழ்க்கைத் துணையாக முடியாது.


தம்பி! நீர் 3 வருடங்களுக்கு முன் அப் பெண்ணுடன் உடலுறவு கொண்டபோது அப் பெண்ணைத் திருமணம் செய்வதாக வாக்குறுதி எதுவும் கொடுக்காவிடில் அப் பெண்ணுக்கு உம்மைத் திருமணம் செய்யும்படி கேட்பதற்கான எந்தவித உரிமையும் இல்லை. இதைவிட நீர் இன்னொரு பெண்ணைக் காதலிப்பதாகக் கூறியுள்ளீர். அப் பெண்ணும் உம்மைக் காதலிப்பதால் அவரையே திருமணம் செய்வதுதான் சரியானது. எமது பண்பாட்டில் காதலிப்பது என்பது திருமணம் செய்து மனைவியாக்கிக் கொள்ளவே. முனைவி என்பவள் இறப்புவரை கூடவே துணையாக வருபவள் என்பது இன்று காதலிக்கும் பலருக்குத் தெரியாமலுள்ளது. காதல் என்பது ஒரு புனிதமான ஆண், பெண் உறவு. இக் காதல் எண்ணங்கள், இலட்சியங்கள், உணர்வுகள், எதிர்பார்ப்புக்கள், தியாகங்கள் போன்றஇன்னோரன்ன பரிமாணங்களைக் கொண்டது என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.

உமது கல்லூரியில் ஒன்றாகப் படித்த மாணவியுடன் ஏற்பட்ட அந்தத் தொடர்பை ஒரு விபத்தாக நினைத்து இனிமேல் இப்படியான விபத்துக்கள் ஏற்படாமல் கவனமாக வாழ்க்கையைத் தொடருங்கள். அதைவிடவும் முக்கியமாக உம்முடைய அந்தக் கல்லூரி நண்பிக்கு ஆறதலான வார்த்தைகளைக் கூறி அவரைச் சமாதானப்படுத்தி வைப்பதே உம்மைப் பொறுத்தவரைக்கும் உசிதமான ஒரு காரியமாகும்.

உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள்

**மனமே நலமா?**

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, நல்லூர்
deepamdesk@gmail.com



# குரு பகவான கல்யாணத்திற்கு உதவுவாரா?

சென்ற இதழ் தொடர்ச்சி...

அந்த வகையில் லக்னம், இரண்டு, ஐந்து, ஏழு, பத்து போன்ற வீடுகளில் இருக்கும்பொழுது சில விஷயங்கள் வாழ்க்கையில் பிரச்னைகளையும், தடுமாற்றங்களையும் ஏற்படுத்தி விடுகின்றது. ஒவ்வொரு லக்னத்திற்கும் ஒவ்வொரு ஆதிபத்தியம் வருவதால் அந்தவகையிலும் சில சங்கடங்கள் உருவாகி விடுகின்றது. லக்னத்தில் குரு: குரு லக்னத்தில் இருப்பது பொதுவாக ஜாதகரை மிகப் பெரிய குழப்பவாதியாக்கும். சுயமாக முடிவு எடுக்கமுடியாமல் திணறுவார். கொள்கை, கோட்பாடுகளை அடிக்கடி மாற்றிக்கொள்வார். எடுப்பார் கைப் பிள்ளை என்றும் சொல்லலாம். ஆனாலும் இப்படிப்பட்டவர்களுக்குகுருவின் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் படுவதால் பூர்வ புண்ணிய யோக அதிர்ஷ்ட பாக்கியங்கள் கிடைக்கும்.

**இரண்டில் குரு:** தனம், குடும்பம், வாக்கு, நேத்ரம் என்ற இந்த ஸ்தானத்தில் தனித்த குருவால் பல குறைகள் இருக்கும். சதா வாக்குவாதத்தில் ஈடுபட வைப்பார். பலநேரங்களில் பணத்தட்டுப்பாடுகள் வரலாம், கடன் கொடுத்த பணத்தை வசூலிப்பது மிகவும் சிரமம். பேச்சில் தடுமாற்றம், திக்குவாய் வரலாம். திருப்தியற்ற நிலை, சொன்ன வாக்கை காப்பாற்ற முடியாமல் போகும். கண் சம்பந்தமான குறைபாடுகள் வரலாம்.

**ஐந்தில் குரு:** இந்த இடத்தில் தனித்த குரு இருப்பதால் ஜாதகர் ஏதாவது சிந்தனை செய்துகொண்டே இருப்பார். சாஸ்திர மறதி ஏற்படும். குழந்தை பாக்கிய பிரச்னைகள் இருக்கும். புத்திர தோஷம், புத்திர சோகம், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலை, கொள்கை, தத்துவ, மரபுகளை மீறுவது, சாஸ்திர விரோத மார்க்கம் என இருக்கும்.

இரண்டாம் இடம், ஐந்தாம் இடம் இந்த இரண்டும் தனம், புத்திரம் ஆகிய இரண்டிற்கு ஆதாரமாக உள்ளவை. குருவின் முக்கிய அம்சமே தன, புத்திரகாரகன் என்ற அமைப்பாகும். மேலும் இதை அஸ்திவாரம் என்றும் சொல்லலாம். இந்த இரண்டு இடங்களில் குருவின் தனித்த நிலை ஏதாவது ஒன்றில் இருக்கும்போது மற்ற கிரக யோக பலம் மற்றும் பூர்வ கர்ம புண்ணிய பலம் காரணமாக செல்வம் செழித்து லட்சுமி தாண்டவமாடினாலும் அந்த ஜாதகர் எல்லாம் இருந்தும் எதையும் அனுபவிக்க முடியாத நிலை இருக்கும். குடும்பத்தோடு இருப்பார். ஆனால், பற்றற்ற மனநிலை இருக்கும். இதேபோல் புத்திரஸ்தானத்தில் குரு தனித்து நிற்கும்போது பூர்வ புண்ணிய சுகிர்த விசேஷத்தினால் புத்திர பாக்கியம் கிடைத்தாலும், ஏதாவது குறை ஏற்பட்டு விடும். புத்திரர்களால் அவப்பெயர் வரக்கூடும். தக்க சமயத்தில் பிள்ளைகளின் அன்பு, ஆதரவு கிடைக்காது. காசு, பணம், பிள்ளைகள் என்று இருந்தாலும் முதியோர் இல்லத்தில் முடங்கிக் கிடக்க வேண்டியிருக்கும். 'காரகோ பாவ நாஸ்தி' என்ற ஸ்லோகப்படி தன, புத்திரகாரகன் காரகத்தில் அந்த குறிப்பிட்ட காரகாம்சம் கெட்டு விடுகின்றது.

**ஏழில் குரு:** லக்னத்திற்கு 7ம் இடமான சப்தம கேந்திரம் களத்திர ஸ்தானமாகும். சுபகிரக ஆதிக்கம் உள்ள குருவிற்கு இங்கு கேந்திராதிபத்திய தோஷம் உண்டு. இந்த இடத்தில் குரு தனித்து இருப்பதால் மணவாழ்க்கை வளர்பிற, தேய்பிறைபோல் போராட்டமாக அமையும். எதிலும் ஒரு நிச்சயமற்ற தன்மை இருக்கும். புரிந்துகொள்ளுதல் இருவருக்கும் சரியாக வாய்க்காது. குடும்ப உறவில்தான் இப்படி சிக்கல்கள் இருக்கும். ஆனால், வெளிவட்டாரத்தில் ஜாதகருக்கு அந்தஸ்து, கௌரவம், புகழ், செல்வாக்கு எல்லாம் குருவால் கிடைக்கும்.

**பத்தில் குரு:** லக்னத்திற்கு பத்தாம் இடம் என்பது தசம கேந்திரம். ஆகையால் கேந்திராதிபத்திய தோஷம் காட்டும். வியாபார, தொழில், உத்யோக, ஜீவனஸ்தானத்தில் குரு தனித்து இருக்கும்போது வியாபாரம், தொழிலில் தொடர்ந்து ஏதாவது பிரச்னைகள் இருந்துகொண்டே இருக்கும். அடிக்கடி தொழிலை மாற்றுவார்கள். பல தொழில்கள் செய்தாலும் எதிலும் நிறைவு இருக்காது. தொழில் செய்யும் இடங்களில் வழக்குகள், அரசாங்க குறிக்கீடுகள் இருக்கும். உத்யோக வகையில் பல நிர்ப்பந்தங்கள் இருக்கும். வேண்டா வெறுப்பாக வேலை பார்ப்பார். ஊர் மாற்றம், இலாகா மாற்றம், பதவி உயர்வில் தடங்கல்கள் வரும். இந்தளவிற்கு இடைஞ்சல் தர காரணம் முழுச் சுபகிரகமான குரு தனித்து 10ல் இருப்பதுதான். இதனால்தான் ஜோதிட சாஸ்திர வழிமுறைப்படி பத்தில் பாம்போ அல்லது சூரியனோ இருப்பது சிறப்பு.

**குரு சண்டாள யோகம்:** ராகுகேது இருவரும் தாம் இருக்கின்ற இடம், பார்க்கின்ற கிரகம், சேருகின்ற கிரகம், சாரபலம் போன்றவை மூலம் பல யோகங்களை, தோஷங்களை தரவல்லவர்கள். சுபகிரகங்களுக்கு கேந்திராதிபத்திய தோஷம் உண்டு. ஆனால் ராகு, கேதுவிற்கு கேந்திர, திரிகோணங்களில் அதிக யோகபலம் உண்டு. *(தொடரும்)*

# இந்தவார ராசி பலன்கள்

## 17.09.2016 – 23.09.2016



**மேஷம்:** செவ்வாய் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருப்பதால் மனக் குழப்பம் நீங்கும். சொத்து, பாகப் பிரிவினை சம்மந்தமாக முக்கிய ஒப்பந்தங்கள் போடுவீர்கள். கர்ப்பமாக இருப்பவர்கள் உரிய கவனத்துடன் இருப்பது நல்லது. சூரியன் ஆட்சி பலத்துடன் இருப்பதால் பிள்ளைகளிடம் இருந்து உதவி கிடைக்கும். சுப நிகழ்ச்சிகளுக்கு அச்சாரம் போடுவீர்கள். சுக்கிரன் ராகுவுடன் இருப்பதால் கணவன், மனைவி இடையே சில மனக்கசப்புக்கள் வரலாம். புதிய வண்டி வாங்குவதற்கான யோகம் உள்ளது. நண்பர்களால் வீண் செலவுகள் இருக்கும். கடல் கடந்து செல்வதற்கான காலநேரம் வந்துள்ளது.

**ரிஷபம்:** ராசிநாதனின் பார்வை சாதகமாக இருப்பதால் இல்லறம் இனிக்கும். தந்தையிடமிருந்து உதவிகள் கிடைக்கும். சூரியன் சாதகமாக இருப்பதால் எதிர்பார்ப்புக்கள் கூடிவரும். பாதியில் நின்ற கட்டிட வேலைகளை மீண்டும் தொடங்குவீர்கள். புதன் வலுவாக இருப்பதால் கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும். போட்டி, பந்தயங்களில் கலந்து கொண்டு வெற்றி பெறுவீர்கள். பயண திட்டங்களில் திடீர் மாற்றம் வரலாம். எலக்ட்ரிக்கல் சாதனங்கள் செலவு வைக்கும். பெண்களுக்கு தாய் வீட்டில் இருந்து உதவிகள் கிடைக்கும். உத்யோகம் சாதகமாக இருந்தாலும், அலைச்சல், வெளியூர் பயணங்கள் இருக்கும்.

**மிதுனம்:** திட தைரிய ஸ்தானத்தில் சூரியன் பலமாக இருப்பதால் சில அதிரடி முடிவுகள் எடுப்பீர்கள். சுக்கிரன் வலுவாக இருப்பதால் கையில் காசு, பணம் புரளும். பிள்ளைகளை பற்றிய கவலைகள் தீரும். மகனுக்கு நல்ல நிறுவனத்தில் இருந்து வேலைக்கான ஆர்டர் வரும். குடும்பத்தில் பழைய பிரச்னைகளை பேசிக் கொண்டிருக்க வேண்டாம். சகோதர உறவுகளால் மகிழ்ச்சி, அனுகூலம் உண்டு. மாமனார் உடல் நலம் பாதிக்கப்படலாம், மருத்துவ செலவுகளுக்கும் இடமுண்டு. வழக்கு சம்மந்தமாக நல்ல முடிவுகள் வரும். புதுமணத் தம்பதிகள் குழந்தை பாக்கியம் எதிர்பார்க்கலாம். உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**கடகம்:** சந்திரன் சாதகமான ராசிகளில் செல்வதால் உடல்நலம், மனநலம் சிறப்பாக இருக்கும். பெண்களால் அனுகூலம் உண்டு. மனைவியின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். சூரியன் 2ல் ஆட்சியாக இருப்பதால் சுப விஷயங்கள் கூடிவரும். முக்கிய விஷயங்களில் பேச்சுவார்த்தை உடன்பாடு ஏற்படும். செவ்வாய் தன ஸ்தானத்தில் இருப்பதால் வரவு, செலவு சீராக இருக்கும். சகோதரர்கள் ஒத்துழைப்பார்கள். பழைய வண்டியை மாற்றி புது வண்டி வாங்குவீர்கள். உத்யோகத்தில் இருந்த மனக்கசப்புக்கள் மறையும். வியாபாரம் லாபகரமாக நடக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கைக்கு வந்து சேரும். பயணத்தால் லாபம் உண்டு.

**சிம்மம்:** ராசிநாதன் ராசியிலேயே பலமாக இருப்பதால் மனநிம்மதி கிடைக்கும். சுப விஷயமாக நல்ல செய்தி வரும். உயர்பதவியில் இருக்கும் நண்பர் உதவுவார். செவ்வாய் ராசியில் இருப்பதால் வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். காலியாக இருக்கும் இடத்திற்கு புதிய வாடகைதாரர்கள் வருவார்கள். தாயாரிடம் இருந்து உதவி கிடைக்கும். வீடு, வாகன பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். கண் சம்மந்தமாக சில குறைபாடுகள் வரலாம். உத்யோகத்தில் நிலுவைத் தொகை, ஊக்கத் தொகை வரும். தொழில், வியாபாரம் சாதகமாக இருக்கும். வேலையாட்களால் சில சங்கடங்கள் வந்து நீங்கும்.

**கன்னி:** சுக்கிரனின் சுபயோக பார்வை காரணமாக இல்லறம் இனிக்கும். மாமன் வகை உறவுகளால் மகிழ்ச்சி, ஆதாயம் உண்டு. மகள் திருமண விஷயமாக முக்கிய சந்திப்புக்கள் நிகழும். சூரியன், செவ்வாய் 12ல் இருப்பதால் அவசியம், அநாவசிய செலவுகள் இருக்கும். தந்தையிடம் ஏற்பட்ட வருத்தங்கள் நீங்கும். குழந்தை பாக்கியம் எதிர்பார்த்தவர்களுக்கு இனிக்கும் செய்தி உண்டு. கடல் கடந்து செல்வதற்கான கால சூழ்நிலை உள்ளது. சொந்த, பந்தங்களுடன் பிரசித்தி பெற்ற கோயில்களுக்கு சென்று வருவீர்கள்.

**துலாம்:** கேது சுகஸ்தானத்தில் இருப்பதால் அலைச்சல், பயணங்கள், சோர்வு ஏற்பட்டாலும் சுக்கிரனின் பார்வை காரணமாக எல்லாம் சாதகமாக முடியும். தசாபுக்தி சாதகமாக இருப்பவர்களுக்கு அசையும், அசையா சொத்து வாங்கும் யோகம் உள்ளது. செவ்வாயின் பார்வை காரணமாக கடன், பாக்கிகள் வசூலாகும். சொந்த, பந்தங்களின் விசேஷம் காரணமாக செலவுகள் வரும். உத்யோகத்தில் வெளியூர் சென்று பணியாற்ற வேண்டியது வரும். பெண்கள் சமையலறையில் அதிக கவனமாக இருப்பது மிக அவசியம்.

**விருச்சிகம்:** ராசிநாதன் செவ்வாய், ஆட்சி பெற்ற சூரியனுடன் இருப்பதால் தடைகள் நீங்கும். உத்யோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். சொந்த, பந்தங்கள் உங்களை புரிந்து கொண்டு உதவுவார்கள். பெரிய பதவியில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். பெண்களுக்கு பிறந்த வீட்டில் இருந்து பணம் வரும். கேது 3ல் இருப்பதால் மிக தூரத்தில் உள்ள புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள். தொழில் வியாபாரம் சீராக இருக்கும். பண வரவுகள் சாதகமாக இருக்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

**தனுசு:** சூரியனின் அருள் காரணமாக தடைகள் விலகும். தந்தையிடம் இருந்து உதவி கிடைக்கும். உத்யோகத்தில் ஏற்பட்ட சங்கடங்கள் தீரும். செவ்வாய் சாதகமாக இருப்பதால் பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. எதிர்பார்த்த சுபச் செய்தி வார மத்தியில் வரும். சனியின் சஞ்சாரம் காரணமாக பயணங்களில் தடைகள், மாற்றங்கள் வர வாய்ப்புள்ளது. அக்கம், பக்கம் இருப்பவர்களிடம் வீண் விவாதங்கள் வேண்டாம். பெண்கள் விரும்பிய தங்க, வைர ஆபரணங்கள் வாங்கி மகிழ்வார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பரிகார தலங்களுக்குச் சென்று பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** ராசியில் கேது இருந்து குழப்பத்தை தந்தாலும், சுக்கிரனின் பார்வை காரணமாக எதையும் சமாளித்துவிடுவீர்கள். கன்னிப் பெண்கள் விரும்பிய இரண்டு சக்கர வண்டி வாங்கி மகிழ்வார்கள். சனி சாதகமாக இருப்பதால் புதிய சொத்து வாங்கும் யோகம் உண்டு. செவ்வாய் 8ல் இருப்பதால் எதிலும் நிதானம் தேவை. உத்யோக விஷயமாக ஊர்விட்டு ஊர் சென்று பணி செய்ய வேண்டி வரும். வியாபாரம் கைகொடுக்கும். வங்கியில் இருந்து உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்:** புதனின் பார்வை காரணமாக சமயோசிதமாக பேசி எல்லாவற்றையும் சாதிப்பீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி உண்டு. சூரியன் 7ல் வலுவாக இருப்பதால் அரசாங்க காரியங்கள் அனுகூலமாய் முடியும். குழந்தை பாக்கியம் எதிர்பார்த்தவர்களுக்கு தித்திக்கும் செய்தி உண்டு. அலுவலகத்தில் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பது நல்லது, குறிப்பாக பெண்களிடம் வீண் விவாதம் வேண்டாம். சனியின் பார்வை காரணமாக தாயார் உடல் நலத்தில் கவனம் தேவை. சொத்து சம்மந்தமாக தீர ஆலோசித்து முடிவு எடுக்கவும்.

**மீனம்:** சூரியன் 6ல் பலமாக இருப்பதால் மறைமுக, நேர்முக எதிர்ப்புக்கள் நீங்கும். பூர்வீக சொத்து சம்மந்தமாக ஒருமித்த கருத்து உண்டாகும். சுக்கிரன், ராகுவுடன் இருப்பதால் கணவன், மனைவி இடையே அனுசரணை தேவை. பேரன், பேத்திகள் மூலம் செலவுகள் ஏற்படும். சந்திரன் அருளால் வராத பணம் வசூலாகும். வெளிநாடு செல்வதற்கு விசா கிடைக்கும். வேலை சம்மந்தமாக தேர்வு எழுதியவர்களுக்கு நல்ல தகவல் உண்டு. கண் சம்மந்தமான உபாதைகள், கிட்னியில் கல் போன்ற குறைபாடுகள் வர வாய்ப்புள்ளது.

# குருப்பெயர்ச்சி பரிகாரம் யாருக்கு செய்வது குருவுக்கா? தட்சிணாமூர்த்திக்கா?

## ஒரு ஜோதிடப் பார்வை



ராஜ கிரகங்களில் ஒன்றான குருபகவான் கடந்த 2ம் திகதி கன்னி ராசியில் இருந்து துலாம் ராசிக்குள் பிரவேசித்தார். 2.10.18 வரை துலாம் ராசியில் இருந்துகொண்டு, பன்னிரண்டு ராசிகளுக்குமான பலாபலன்களைத் தருவார். பூரண சுபகிரகமான குருபகவான், ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்குச் செல்லும்போது, குருபகவானின் துலாம் ராசி சஞ்சாரத்தால் அசுப பலன்கள் ஏற்படக்கூடிய ராசிகளைச் சேர்ந்த அன்பர்கள் பலரும் பரிகாரங்கள் செய்து வருகின்றனர். ஆதி குருவான சிவபெருமானை தட்சிணமூர்த்தியாகவும், அவரது அம்சமாக குருபகவானையும் பார்க்கும் வழக்கம் காலகாலமாக இருந்து வருகின்றது. அதன் காரணமாக குருப்பெயர்ச்சிக்கு பலரும் தட்சிணாமூர்த்திக்கு வழிபாடு செய்கின்றனர். இப்படிச் செய்வது சரிதானா என்பது பற்றி ஜோதிட நிபுணர் காலச்சித்தர் ஞானபண்டிதரை தொடர்பு கொண்டு கேட்டோம். அவர் சொன்ன விளக்கம் இது.

"தட்சிணாமூர்த்தி வேறு; குருபகவான் வேறு. தட்சிணாமூர்த்தி சிவாம்சமான மூர்த்தி. குருபகவான் நவகிரகங்களில் ஒருவர். எனவே, குருப்பெயர்ச்சியின்போது நவகிரகங்களில் ஒருவரான குருபகவானுக்குத்தான் பரிகார பூஜைகள் செய்யவேண்டும். ஆனால், சமீபகாலமாக கோயில்களில், வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்தி சந்நிதியில் பக்தர்களின் கூட்டம் அதிகரித்து வருகிறது. இப்படி வருபவர்களில் 99 சதவிகிதம்பேர் குருவுக்குப் பரிகாரம் செய்வதற்காக வருகிறார்கள். ஆனால், நவகிரகங்களில் ஒருவரான குருபகவானை வழிபடுபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

குருவுக்குச் செய்யவேண்டிய பரிகாரங்களை தட்சிணாமூர்த்திக்கு செய்வது சரியா? என்று பார்க்க வேண்டும். தட்சிணாமூர்த்தி எல்லா ஆலயங்களிலும் தெற்கு நோக்கி அமர்ந்திருப்பார். அதனால் அவரை தென்முகக்கடவுள் என்றே அழைப்பார்கள். நவகிரகங்களில் ஒருவரான குருபகவானின் திசை வடக்கு. இரண்டு பேரும் வீற்றிருக்கும் திசைகளே வேறாக இருக்கின்றது. வியாழனுக்கு உரிய நிறம், மஞ்சள். இவருக்கு உரிய தானியம், கொண்டைக்கடலை. தட்சிணாமூர்த்தி வெள்ளை உடை அணிபவர். 'ஸ்வேதாம் பரதரம் ஸ்வேதம்' என வேதம் உரைக்கிறது. 'ஸ்வேதம்' என்றால், வெள்ளை நிறம் என்பது பொருள் ஆகும்.

உண்மை இப்படி இருக்க, குருவுக்கு பரிகாரம் செய்பவர்கள், ஞான குருவாய் அருள்பாலிக்கும் தட்சிணாமூர்த்திக்கு மஞ்சள் நிற வஸ்திரமும், கொண்டைக்கடலை மாலைகளும் சாற்றுகிறார்கள். இது, தியானத்தில் ஆழ்ந்திருக்கும் தட்சிணாமூர்த்திக்குத் தொல்லை கொடுப்பது போல் அமைகிறது. ஞானத்தைத் தேடி தட்சிணாமூர்த்தியை வழிபடுபவர்களுக்கு கிழமை முக்கியமில்லை. வியாழன் அன்றுதான் வழிபட வேண்டும் என்ற அவசியமும் இல்லை. வியாழக்கிழமைக்கும் தட்சிணாமூர்த்திக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சிவபெருமான் ஞானத்தை போதிக்கும் குரு. ஸநகாதி முனிவர்களுக்கு வேத ஆகமங்களின் பொருளை உபதேசிக்கும் திருவுருவமே தட்சிணாமூர்த்தி.

கல்லால மரத்தின் கீழ் அமர்ந்திருப்பவராக இவர் காட்சியளிக்கிறார். இவர் 'ஆதி குரு' அல்லது 'ஞான குரு' என்று போற்றப்படுகிறார். தேவர்களின் சபையில் தேவர்களுக்கு ஆச்சார்யராகத் திகழ்பவர் வியாழன் என்று அழைக்கப்படும் பிரகஸ்பதி. ஆசிரியர் பணி புரிவதால் அவரை குரு என்று அழைக்கின்றனர்.

ஞானகுரு வேறு, நவகிரக குரு வேறு என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். குரு பகவானுக்கு உரிய அதிதேவதை 'மருத்வந்தன்' என்றும், ப்ரத்யதி தேவதை 'பிரம்மா' என்றும் தெளிவாகச் சொல்கிறது வேதம். எந்தவிதத்திலும் தட்சிணாமூர்த்தியோடு வியாழ (குரு) பகவானை சம்பந்தப்படுத்தி வேதத்திலோ, புராணங்களிலோ சொல்லப்படவில்லை.

குரு பகவானுக்கு உரிய பரிகாரத்தை தட்சிணாமூர்த்திக்குச் செய்யவேண்டிய அவசியம் என்ன? இந்தக் குழப்பத்துக்கு என்ன காரணம்?

ஞான குருவாம் தட்சிணாமூர்த்தியை வழிபடும் வகையில் பள்ளிக் குழந்தைகளுக்கும் இந்த ஸ்லோகத்தை எளிதாகச் சொல்லித் தருகிறார்கள்.

**"குரு பிரம்மா: குருவிஷ்ணு**
**குரு தேவோ மஹேஸ்வர**
**குரு சாட்சாத் பரபிரம்ம தஸ்மைஸ்ரீ**
**குருவே நம:**

இந்த ஸ்லோகத்தில் இடம்பெறும் 'குரு' என்ற வார்த்தையைக் கொண்டு குருபகவானும் இவரும் ஒன்று என எண்ணும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

இறைவன் இட்ட பணியைச் செய்பவர்களே நவகிரகங்கள். ஒன்பது கோள்களுக்கும் ஒவ்வொரு காரகத்துவம் உண்டு. இந்த உலகத்தில் நாம் ஆனந்தமாய் வாழ்ந்திடத் தேவையான அனைத்து சுகங்களையும் அருள்பவர் குரு பகவான்.

மனம் சஞ்சலமடைந்திருக்கும்போது தட்சிணாமூர்த்தியின் சந்நிதியில் அவருக்கு முன்பாக அமைதியாக அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டால், மனம் ஒரு நிலைப்படும்; நினைத்த காரியம் வெற்றி பெறும்.

ரிஷபம் காளையா என்று கேட்டால், ரிஷபம் காளைதான். ஆனால், காளை எல்லாம் ரிஷபம் கிடையாது. அதுபோல் தட்சிணாமூர்த்தி குருவா என்றால் அவர் குருதான். ஞானகுரு. ஆனால், குருபகவான் தட்சிணாமூர்த்தியா என்றால், அவர் தட்சிணாமூர்த்தி இல்லை என்பதே உண்மை.

ஞானத்தை அருள்பவர் தட்சிணாமூர்த்தி இக வாழ்க்கையில் சகல சுகங்களையும் அருள்பவர் குருபகவான். ஆன்மிக ஞானத்துக்கு தட்சிணாமூர்த்தியை வழிபடவேண்டும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு குருபகவானை வழிபட வேண்டும் என்பதுதான் சரி!" என்றார்.

# விநாயகர் சிலை வகைகளும்... வைக்க வேண்டிய திசைகளும்!

வாஸ்து சாஸ்த்திரத்தின் படி, பல வகைகளான பொருட்களை கொண்டு விநாயகர் சிலை செய்யப்படுகிறது. அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு விதமாக கையாள வேண்டும். அதில் முக்கியமான ஒன்று அவைகளை வைக்க வேண்டிய திசை, வைக்க கூடாத திசை.

உங்களுக்கு புகழையும் விளம்பரத்தையும் தேடி தரும் வெள்ளியால் செய்த விநாயகர் சிலை. வெள்ளியில் செய்த விநாயகர் சிலை இருந்தால், அதனை தென் கிழக்கு, மேற்கு அல்லது வட மேற்கு திசையில் வைக்கவும். தெற்கு அல்லது தென் மேற்கு திசைகளில் வைக்க கூடாது.


தாமிர விநாயகர் சிலையை வீட்டில் வைத்தால் சந்ததியை விரும்புபவர்களுக்கு நல்லதாகும். இந்த சிலைகளை கிழக்கு அல்லது தென் திசையில் வைக்கவும். தென் மேற்கு மற்றும் வட மேற்கு திசைகளை கண்டிப்பாக வைக்ககூடாது.

சந்தனக்கட்டை உட்பட, மரத்தினால் செய்யப்பட விநாயகர் சிலைகள் பல பயன்களை அளிக்கிறது. நல்ல ஆரோக்கியம், நீண்ட ஆயுள் மற்றும் வெற்றியை விரும்புபவர்கள் இவ்வகையான சிலையை வழிபடலாம். இவற்றை வடக்கு, வட கிழக்கு அல்லது கிழக்கு திசைகளில் வைக்கவும். தென் கிழக்கு திசையில் வைக்க கூடாது.

களிமண் விநாயகராலும் கூட பல பயன்கள் உள்ளது. களிமண் சிலைகளை வணங்குவதால் வெற்றி, நல்ல ஆரோக்கியம் கிடைத்து, தடைகள் நீங்கும். இந்த சிலைகளை வடக்கு திசையில் உள்ளே வைக்க கூடாது. தென் மேற்கு திசையில் தான் வைக்க வேண்டும்.

வெண்கலத்தில் செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் வீட்டில் வளமை மற்றும் சந்தோஷத்தை அளிக்கும். இவற்றை கிழக்கு, தெற்கு அல்லது மேற்கு திசைகளில் வைக்க வேண்டும். வட கிழக்கு அல்லது வடமேற்கு திசைகளில் வைக்க கூடாது.





2

# விஜய மகாதேவி

## சாண்டில்யன்

இந்தச் சமயத்தில் மூர்சமதின் முகத்தில் சாயை பூர்ணமாகப் படர்ந்தது. கண்கள் பயங்கரமாக உருண்டன. 'கிழவா! நீ யாருடன் பேசுகிறாய் என்பதை உணர்ந்து பேசு' என்றான் நெருப்பைக் கக்கிய குரலில்.

'உணர்ந்துதான் பேசுகிறேன். நதியைக் கடக்க முடியாது என் உதவியை நாடும் இருவருடன் பேசுகிறேன்' என்ற கிழவன், 'என் பின்னே வாருங்கள்' என்று குடிசைகளை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

கிழவனுடன் குடிசைக் கூட்டத்தை விஜயனும் சமத்தும் அடைந்தபோது மாலை மறைந்து விளக்கு வைக்கும் சமயம் வந்துவிட்டதால், சின்னஞ்சிறு அகல் விளக்குகள் அந்தக் குடிசைக் கூட்டத்தை அலங்கரிக்க ஆரம்பித்தன. வானில் நட்சத்திரங்கள் தோன்றி மழைக்கு முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டிருந்தன. ஏழைகளின் அந்தக் குடிசைக் கூட்டம் ஏதோ பல வைரங்கள் பொருந்தி மாலையணிந்த இளமங்கையைப் போல இரவின் ஆரம்பத்தில் பார்ப்பதற்கு மிக ரம்மியமாயிருந்ததால், அவற்றின் அழகைப்பருகிக்கொண்டு புரவியைச் செலுத்திய விஜயனை, 'பிரபு! இந்த ஏழையின் குடிசையை தங்கள் பாதங்கள் புனிதப்படுத்த வேண்டும்' என்று விண்ணப் பித்துக் குடிசைக்குள் புகுந்த அந்தக் கிழவன் மற்ற இருவருக்கும் வழி காட்ட நீளமான வெண்கல அலங்கார விளக்கு ஒன்றை எடுத்துக்கொண்டு வந்தான்.

அவன் விருப்பத்தை பூர்த்தி செய்ய மூர்சமதுக்கு இஷ்டமில்லாவிட்டாலும் விஜயன் புரவியை விட்டு இறங்கியதால் அவனும் இறங்கினான். உள்ளே அவர்களை அழைத்துச் சென்ற கிழவன் ஒரு பாயில் அவ் இருவரையும் உட்கார வைத்து, 'பிரபு! என் மனைவி உங்கள் இருவருக்கும் சூடாகப் பால் கொடுப்பாள். அருந்துங்கள். அதற்குள் நான் படகைச் சுத்தம் செய்து விட்டு வருகிறேன்' என்று கூறி வெளியே சென்றான்.

கிழவி பாலைக் காய்ச்சி இரு பித்தளை குவளைகளில் கொடுக்க அதைச் சுவைத்து அருந்திய விஜயன் தனது மெய்க் காவலனை நோக்கி, 'சமத்! ஏழையின் அன்பில் எத்தனை சுவை சேருகிறது பார்த்தாயா?' என்று கேட்டான்.

அந்தச் சுவையை விஜயன் அளவுக்கு ரசிக்க முடியாத மூர்சமத், 'இது ஆட்டுப்பால்' என்றான் எரிச்சலுடன்.

'ஏழையின் கையால் கொடுத்ததால் பாராட்டத்தக்கது' என்று கூறிய விஜயன், 'பாட்டி! பாத்திரங்களை எடுத்துச் செல்லுங்கள்' என்று கூறி இருவர் பாத்திரங்களையும் எடுத்துக் கொடுத்தான்.

கிழவியின் நன்றி மிகுந்த கண்கள் விஜயனை நோக்கின. அந்த சமயத்தில் மூர் தனது கச்சையிலிருந்து எடுத்த இரண்டு பொற்காசுகளைத் தனது கையின் ஓர் அசைவினால் தடுத்தாள் கிழவி. 'இங்கு பால் விற்பனை கிடையாது, படகு ஓட்ட பணம் கொடுத்தால் போதும்' என்று கூறிவிட்டுக் குடிசையின் ஓரத்துக்குச் சென்றாள். சிறிது நேரத்தில் உள்ளே வந்த படகோட்டி கிழவன், 'பிரபு!, படகு சுத்தமாகி விட்டது. ஆனால் தங்களுடன் வர இன்னொரு பயணியும் இருக்கிறார். தங்களுக்கு ஆட்சேபனை ஏதுமில்லையே?' என்ற வினாவினான்.

'இல்லை' என்று கூறிக் கொண்டு விஜயனும் சமதும் எழுந்த சமயத்தில் கிழவன் குறிப்பிட்ட அந்த மூன்றாவது பயணியும் உள்ளே குனிந்து வந்தார். அந்த பயணியைப் பார்த்து திகைத்தான் விஜயன். வந்தது ஒரு பெண். அவள் குனிந்து குடிசைக்குள் நுழைந்தபோது அவளது காசுமாலையின் சலங்கைகள் இன்ப இசையை சலசலவென கிளப்பின. அந்தப் பெண்ணை பார்த்ததும் விஜயனும் சமதும் கண்களால் மௌனமாக சைகை செய்து கொண்டனர். வந்த கட்டழகி இருவருக்குமே புதியவளல்ல.

**காவியக் காரிகை**


கழுத்தை வளைத்து இளமார்பில் புரண்ட காசு மாலை சலசலத்து இன்னிசை பாட, கரிய தலைக் குழல் இரண்டு நெற்றி உச்சியில் காற்றில் மெல்ல அலைய. குடிசைக் கோடியில் வைக்கப்பட்டிருந்த கலிங்கத்தின் அலங்காரக் கைவிளக்கில் இரு கண்களும் நட்சத்திரங்களைப் போல ஒளி வீச, குனிந்த நிலையில் ஒடிந்த இடை சற்றே அசைய, குடிசைக்குள் நுழைந்து வந்த கட்டழகியைக் கண்டதும் அவளை இன்னாரென்று புரிந்து கொண்டாலும் ஏதும் புரியாதவர்களைப் போலவே விஜயனும் அவன் மெய்காவலனும் குனிந்த தலையை நிமிர்ந்தார்களில்லை. விஜயன் மட்டும் ஓரக் கண்ணால் அந்தக் காவியப் பாவையை மீண்டும் ஒரு தரம் நோக்கினான். முன்னமே அந்த அழகியை பார்த்திருந்தாலும் கூட அத்தனை அருகாமையில் பார்க்காத காரணத்தால், தனது அரைப் பார்வையிலேயே அவள் லாவண்யத்தை அளவெடுக்கத் தொடங்கி னான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவளைப் பார்த்திருந்ததற்கும் இன்று பார்ப்பதற்கும் மாற்றங்கள் பல அவள் உடலமைப்பில் இருந்ததை உணர்ந்ததால், 'பெண்கள் இவ்வளவு சீக்கிரம் வளர்ந்து விடுகிறார்கள்!' என்று உள்ளூர வியந்து கொண்டான் விஜயன். இரண்டு ஆண்டு களுக்கு முன்பு ஒல்லியாக இருந்த அவள் உடலை இயற்கையின் கரங்கள் நன்றாகச் செப்பனிட்டு அளவு மீறாத புஷ்டியை அளித்திருந்ததையும், அதன் விளைவாக இடைக்கு மேலும் கீழும் தெரிந்த லேசாகப் பருத்த எழில் மேடுகளும், உருண்ட மணிக்கைகளும், யானையின் துதிக்கையைப் போல மேலே புஷ்டியாகித் திரணட்டு பிறகு சாட்டை போல் கீழே இறங்கிய கால்களும் பருவத்தின் செழிப்பைக் காட்டினவென்றால் மறைந்த இடங்கள் எல்லையற்ற ஊகங்களுக்கு இடம் கொடுத்தன.

அவள் காலில் அணிந்திருந்த பாதரசத்தின் முத்துக்கள் பாண்டிய நாட்டு உயர்ந்த முத்துக்களால் செய்யப் பட்டிருந்தாலும், அவற்றில் கண்ணுக்கு உடனடியாகப் புலப்படாத சின்னஞ் சிறு சலங்கைகள் இணைக்கப்பட்டிருந்ததாலும், அவள் நடந்து வந்த போது அவள் பாதங்களை முத்தமிட்ட பாதரச முத்துக் களும், பாதரசம் நெளிந்ததின் விளைவாக லேசாக ஒளித்த சலங்கைகளும் அவளை நடனச் சித்திரமாகக் காட்டின. அவள் கால் விரல்களின் நுனியில் திட்டியிருந்த மருதாணியின் செந்நிறம் விரல்களைப் பவளங்களாக அடித்திருந்ததல்லாமல் அவள் நடந்த போது விரிந்தும் கூடியும் ஏதோ பவளக் கொடி அசைந்த வருவதைப் போன்று பிரமையை அளித்தன. போதாக் குறைக்கு அவள் அணிந்திருந்த கலிங்கத்தின் நுண்ணிய ஆடை நடந்த நிலையில் அசைய நேரிட்டதால் அடிக்கடி கால்களின் வெண்மையை அவ்வப் பொழுது காட்டி மறைத்து மனத்தை அலைக்கழிக்கவே செய்தது.


(தொடரும்)

# இணைய யன்னல்



விளக்கம் மஹிந்த ராஜபக்சவின் இளைய மகன் ரோஹித ராஜபக்சவின் லேட்டஸ்ட் அவதாரம் நடிகர். இசை அல்பங்களில் பிஸியாக நடிக்கத் தொங்கியுள்ளார். அண்மையில் நிதிக்குற்ற விசாரணைப்பிரிவில் ஆஜரான பின்னர், ஊடகங்களிற்கு "கெத்து" பேட்டி கொடுத்து எல்லோரையும் திரும்பி பார்க்க வைத்தார். அந்த வேகத்தில், அண்ணன் நாமலின் துணையுடன் தொலைக்காட்சி ஒன்றில் முதலாவது நேர்காணல் கொடுத்தார். இவ்வளவு பரபரப்பிற்குமிடையில் ஜோடி போட்டுக்கொண்டு ஒரு சுற்றுலா கிளம்பியிருக்கிறார்.

(www.facebook.com/rohithachandana.rajapaksa # வீதிச் சாகசக்காரன்)



இலங்கை அணியிலிருந்து கழற்றி விடப்பட்ட திசர பெரேரா உலக லெவனிற்காக உயிரை கையில் பிடித்துக் கொண்டு பாகிஸ்தான் போயிருக்கிறார். இடைப்பட்ட காலத்தில் அவர் அணியில் ஆடி செஞ்சுரி போடுவார் என பார்த்தால், ஆள் மனைவியுடன் ஊர் சுற்றி படம்தான் போட்டுக் கொண்டிருந்தார்.

(www.instagram.com/tp_perera #ஊரெல்லாம் நம் பாட்டுத்தான்)




விஜய் உடன் மெர்சல் படப்பிடிப்பிடிப்பை முடித்துவிட்டு லண்டன் பறந்து விட்டார் காஜல் அகர்வால். மெர்சலிற்காக உணவுக்கட்டுப்பாடு அது இதுவென செம காண்டில் இருந்திருப்பார் போல... அங்குள்ள பிரபல பென்ஸ் கன்ரீனுக்கு போய் உட்கார்ந்து விட்டார். ஓடர் பண்ணிய உணவு வந்த பின்னரும் அம்மணி பிஸி. நல்லது கெட்டது எல்லாவற்றையும் இன்ஸ்டகிராமில் பதிவேற்றாவிட்டால் அம்மணிக்கு தூக்கம் வராதாம். அது சரி எதிரிலுள்ள தட்டு யாரது என கேட்டு விடாதீர்கள்... அதுவும் என்னோடதுதான் என்பார்.

(www.instagram.com/kajalaggarwal #படம் போட்டு சாப்பிடு)




சச்சின் டெண்டுல்கரின் மகனிற்கு கிரிக்கெட் ஆட கற்றுக்கொடுத்திருக்கிறாரோ இல்லையோ, நன்றாக சமைக்க கற்றுக்கொடுத் திருக்கிறார் போல. சச்சினின் படுக்கைக்கே காலை உணவை தயார்செய்து கொடுத்துள்ளார்.

(www.instagram.com/sachintendulkar #மகனதிகாரம்)




ஆட்சியில் பங்காளியில்லை... அமைச்சு பதவியுமில்லை என மிக நொந்து போயிருந்தனர் தோழர்கள். ஒரு காலத்தில் களை கட்டியிருந்த சிறீதர் தியேட்டர் இன்று இழவு விழுந்த வீட்டை போல வெறிச்சோடிப் போயிருக்கிறது. இப்படியே விட்டால் காணாமல் போனவர்கள் பட்டியலில் வந்துவிடுவோம் என்றோ என்னவோ, தோழர்கள் மாஸ் காட்டியுள்ளனர். அரசியல் கூட்டங்களிற்கு ஆள் பிடிக்க வேண்டிய இன்றைய நிலையில், மகளிர் ஒன்றுகூடலொன்றை பெருமெடுப்பில் நடத்தியிருக்கிறார்கள் ஈ.பி.டி.பியினர்.

(www.facebook.com/Douglas Devananda # மகளிர் மட்டுமல்ல)



உசைன் போல்ட் ஆரம்பத்தில் கால்பந்தாட்டத்தில்தான் ஆர்வமாக இருந்தார். ஓட்டப்பந்தயத்தில் இருந்து ஒதுங்கிய பின் உலகம் சுற்றும் மெகா ரிப் ஒன்று கிளம்பினார். அவுஸ்திரேலியா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளிற்கு சென்று கடைசியில் இங்கிலாந்திற்கு போனார். வந்தவரை அப்படியே லபக்கி கொண்டுபோன மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் மெகா கௌரவம் வழங்கியுள்ளது. அன்று நடந்த உள்ளூர் லீக் போட்டியில் மன்செஸ்டர் வெற்றியடைய, மன்செஸ்டருடன் கொண்டாடினார் போல்ட்.

(www.instagram.com/usainbolt #பார்ட்டிக்கு போகலாமா?)



பார்சிலோனா அணியில் இருந்து நெய்மர் விலகி சென்றுள்ளார். பார்சிலோனாவின் முன்களத்தில் ஆடிய மெஸ்ஸி, நெய்மர், சுவாரஸ் கலக்கிய காலம் ஒரு கனாக்காலம் போல மறைந்து போகிறது. கூட்டணியின் இறுதிக்காலத்தில் மெஸ்ஸி, நெய்மர், சுவாரஸ்.

(www.instagram.com/leomessi # மூன்று வல்லவர்கள்)

# கண்ணகியும் நாவலரும் ஒரு “சைவ” முரண்

**மைங்கணான்**

ஒருவர் பேரறிஞராக இருக்கலாம், நம் பெருமதிப்புக்குரியவராக இருக்கலாம். அதற்காக, அவர் என்ன சொன்னாலும் சரி என்று ஏற்றுக்கொண்டிருக்கிறோமா? சில முரண்பட்ட இடங்களைச் சுட்டிக்காட்டக் கூட முயல்வோம், இல்லையா?


அப்படி, என் பெருமதிப்புக்குரிய ஒருவரை, ஒரேயொரு கருத்தில் மட்டும் நான் மறுக்க நேரிட்டதுண்டு, அவர் ஆறுமுக நாவலர்!

அப்படி அவர் சொன்னது:

*“சமண சமயத்துச் செட்டிச்சி விக்கிரகத்தின் இருபக்கத்தும் விநாயக்க் கடவுள் விக்கிரகமுஞ் சுப்பிரமணியக் கடவுள் விக்கிரகமும் அஞ்சாது வைத்துப் பூசை உற்சவமுதலியன செய்கிற அதிபாதகர்களுஞ் சைவசமய குருமாரோ!” (யாழ்ப்பாணச் சமயநிலை, 1872)*

*"செட்டிச்சியும் புறச்சமயத்தவளுமாகிய கண்ணகி பரம்பொருள் எனவும், விநாயகக்கடவுள் சுப்பிரமணியக் கடவுள் இருவரும் அவளிற்றாழ்ந்தவர் எனவும் மயங்கி வழிபடும் அதிபாதகர்களும் சைவசமய நிந்தகர்கள்" (நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இரண்டாம் பத்திரிகை,1875)*

நாவலரால் வட இலங்கையில் சைவ மறுமலர்ச்சி முன்னெடுக்கப்பட்டபோது, குடாநாட்டின் பெருமளவு கண்ணகி ஆலயங்கள், புவனேஸ்வரி இராஜராஜேஸ்வரி ஆலயங்களாக மாற்றப்பட்டன. இதன் 'விளைவு எங்குவரை தாக்கம் செலுத்தியிருக்கின்றது என்றால், அப்படிப் பெயரோ தோற்றமோ மாறாமல்,



“கண்ணகாம்பிகை” என்ற திருப்பெயருடன் உமையவளின் இடத்தில் அருள்பாலித்த கண்ணகியை, சிவனிடமிருந்து “விவாகரத்து”(?!) பெறவைத்து தனிக் கோயில் கட்டி அமர்த்திவிட்டு, “மீனாட்சி” என்ற வேறொரு தேவியை சிவனுக்கருகே குடியமர்த்திய வினோதம், வட்டுக்கோட்டை கண்ணலிங்கேசுவரர் கோயிலில் இடம்பெற்றிருக்கின்றது. இத்தனைக்கும் அது ஆரம்பத்திலிருந்தே கண்ணகி கோயிலாக இருந்து 1882 இல் சிவாலயமாக மாற்றப்பட்ட கோயில் !

சைவம், இறைவனைப் பிறப்போ இறப்போ அற்றவனாகக் காணும் சமயம். எனவே “அவதாரம்” என்ற கோட்பாட்டை அது ஏற்றுக்கொள்வதில்லை. ஈசன் அன்றி, உமையவள் பூமியில் “அவதரிப்பதை”க் கூட, பெண்ணின் கருப்பை வாய்ப்படுவதாகச் சொல்லாமல், தாமரைப் பூவில் கிடைத்ததாகவோ, வேள்வித்தீயில் தோன்றியதாகவோ தான் சொல்லும். அத்தகைய சைவநெறியை மறுமலர்ச்சிக் குள்ளாக்கிய நாவலர், சிலம்பின் கதாநாயகியான கண்ணகியை “சிலம்பு சமணக்காப்பியம்” என்ற கருத்தோடு இணைத்துச் சிந்தித்து, அவள் வழிபாட்டை மறுதலித்ததை தவறென்று சொல்லிவிட முடியாது.

உண்மையில், நாவலர் காலத்துக்கு முன்வரை, “கண்ணகியின் மண்” என்று இன்றுவியந்துகூறப்படும்கிழக்கிலங்கையை விட, அதிகப்படியான கண்ணகி ஆலயங்களும் பக்தர்களும் கொண்டு விளங்கிய பூமி யாழ்ப்பாணம். கண்ணகி வழிபாட்டின் எச்சசொச்சங்களை இன்றும் மட்டுவில், புங்குடுதீவு, மாதகல், அங்கணாக்கடவை முதலான இடங்களில் காணமுடிகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் பெரும்பாலும் கண்ணகியின் அடியவர்கள். அவ்வளவு ஏன், கிழக்கில் வைகாசிச் சடங்கில்பாடப்படும்“வழக்குரை காவியமே” செயவீர சிங்கையாரியன் என்ற யாழ்ப்பாண மன்னனால் பாடப்பட்டது தான்!

சைவப்பார்வையில் கண்ணகியை மறுதலிப்பது சரியா தவறா என்ற வாதங்களுக்குள் இறங்க முன்பு, தமிழர் நாட்டாரியலைப் பற்றி, நாம் கொஞ்சம் தெரிந்துகொள்ளவேண்டும்.

நம் கிராமியத்தெய்வங்கள் யாரை எடுத்தாலுமே, அவர்கள் சாதாரண மனிதராய்ப் பிறந்து செயற்கரும் செயல்கள் செய்தவர்கள் தான் என்பதைக் கண்டுகொள்ளலாம். அதிலும் பெண் தெய்வங்கள், பெரும்பாலும் துரோக மிழைக்கப்பட்டவர்கள், வசதி படைத்தவர்களின் காமப்பசிக்கு இரையானவர்கள்

அல்லது குடும்பக் கௌரவத்தைக் காக்க உயிரோடு எரிக்கப்பட்டவர்கள், இப்படிப் பட்டியல் நீள்கின்றது. தமிழ் நாட்டின் கன்னியம்மன், பேச்சியம்மன், இசக்கியம்மன், நாச்சிமார், நீலி என்று நீளும் நாட்டார் தெய்வங்கள் யாரின் வரலாற்றைப் புரட்டினாலும் இறுதியில் இப்படி அவலமாக இறந்த பேதைப்பெண்ணொருத்தியின் உண்மைக் கதையில் தான் போய் முட்டிநிற்கின்றது.

இன்றைய காலகட்டத்தில், இந்த நாட்டார் தெய்வங்களெல்லாம் மெல்ல மெல்ல உயர்நிலைக்கு உயர்த்தப்படுவதைக் காணலாம். அங்கு உயிர்ப்பலி தவிர்க்கப் படுகிறது. தெய்வமாடுதல், தீமிதித்தல் போன்றன அருகி வருகின்றன. மடாலயங்களாகவும், மரத்தடிக் கோயில்களாகவும் இருந்த அவை, இன்று விமானம், கோபுரம் எழுந்து அழகான வண்ணப்பூச்சுகளுடன் பேராலயங்களாகக் காட்சியளிக்கின்றன. அகோரமாகக் காட்சியளித்த அத்தெய்வங்களின் சிலைகள் நீக்கப்பட்டு, அம்சமான திருவுருவங்கள் செய்யப்பட்டு “அருள்மிகு சுவாமி/அம்மன் ஆலயம்” என்று பெயர் கூட மாற்றப்படுகின்றன. இது தமிழ்நாட்டின் இன்றைய பொதுவான நிலை.

இவை குறிப்பிட்ட சிலரின் திட்டமிட்ட செயற்பாடுகள் என்று கருதி, ஆரம்பத்தில் இதை “சமஸ்கிருதமயமாக்கம்” அல்லது “வைதிகமயமாக்கம்” என்ற சொற்களால் குறிப்பிட்ட நாட்டாரியல் அறிஞர்கள், இன்று அது ஒரு இயல்பான நிகழ்வு என்பதை உணர்ந்து இச்செயற்பாட்டை “மேல்நிலையாக்கம்” என்று அழைக்கின்றார்கள். ஆனால், வரலாற்றில் தேடினால், இந்த மேல்நிலையாக்கம் என்பது, இந்திய நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து நிகழும் ஒன்று என்பதை உணர்ந்துகொள்ளலாம். சீதை, இராமன் எனும் அரச தம்பதி தம் அரும்பெரும் செயல்களால், திருமால் திருமகளின் அவதாரங்களாக மாறியிருக்கிறார்கள். வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த கண்ணன், அனுமன், திரௌபதி, ஐயப்பன் ஆகியோரின் நிலையும் அதுவே. மீனாட்சியும் சொக்கநாதரும் கூட, சிவசக்தியாக மேல்நிலைக்குள்ளான, பாண்டியர் பரம்பரையில் தோன்றிய அரசனும் அரசியும் தான் என்ற கருத்துக் கூட நிலவுகின்றது.

இனி,ஈழத்துக்கண்ணகி இலக்கியங்களில் பரிச்சயமுள்ளவர்கள் இந்தப் பொதுத் தகவல்களோடு கண்ணகையைப் பொருத்திப் பார்த்தால், உண்மையைப் புரிந்துகொள்ளமுடியும். கண்ணகி எப்படி பார்வதியின் அவதாரமாக “மேல் நிலையாக்கப்படுகின்றாள்” என்பதற்கான ஆதாரங்கள் அவற்றில் கொட்டிக் கிடக்கின்றன.சிலப்பதிகாரக்கண்ணகிக்கும் ஈழத்துக் கண்ணகைக்கும் வெகுதூரம்! புரிகிற மாதிரிச் சொன்னால், வான்மீகியின் இராமனுக்கும், கம்பனின் இராமனுக்கும் உள்ள வேறுபாடு!

ஆதி முதல் அந்தம் வரை கண்ணகையை சைவப்பெண்ணாகவே காட்டும் ஈழத்து இலக்கியங்கள், இறுதியில் அந்த ஈசனின் மனைவி உமையவளாகவே அவளை உயர்த்தி, அந்தக் கவித்துவ உச்சியிலேயே நிறைவுறுகின்றன.

“பரம கயிலாய சிவதேவி சிவாயநம
பஞ்சாட்சரத்தின் ஒளி ஆனாய் சிவாயநம
திரையில் வந்தே கிருபை செய்தாய் சிவாயநம
திருமாலின் சோதரி செல்வி கண்ணகையே”
**- தாண்டவன்வெளி அம்மன் காவியம்**

“பத்தினியம்மா உனக்கோலம் ஓலம்
பார்ப்பதி அம்மா உனக்கோலம் ஓலம்
அத்தனார் பாரி உனக்கோலம் ஓலம்
அம்பிகை அம்மா உனக்கோலம் ஓலம்”
**- பட்டிமேட்டு அம்மன் காவியம்**

“அக்கரரவிந்த அரனார் இடம் இருந்தநீ
அம்மையென அன்பருக் கருளது கொடுத்தநீ
சக்கரக்கரத்தவன் தங்கையென வந்தநீ
மலையரசன் மகளணைய மாது கண்ணகையே”
**- தம்பிலுவில் அம்மன் காவியம்**

“ஆறாறு சமயங்க ளாயிருந் தாயே
அரனாரி டப்பாக மேயமர்ந் தாயே
வீறான மாங்கனிய தாயுதித் தாயே
வெற்றிபுனை மன்னவன் விழிமறைத் தாயே”
**- மண்முனைக் காவியம்**

“பாற்கடலில் பள்ளிகொளும் பச்சைவண்ணன் தங்கையே
வேல்முருகன் தாயே வினாயகனை யீன்றவளே
மயிடாசுரன் சிர்சில் வாது நடம் கொண்டவளே
கயிலைகிரி மேவிவளர் காரணி பூரணியே”
**கண்ணகை அம்மன் பிரார்த்தனை**

கண்ணகி மட்டுமல்ல, எந்தவொரு நாட்டார் தெய்வத்தின் கதையைக் கிளறினாலும், அவற்றில் சிவனுக்குத் தவிர்க்கமுடியாத இடமொன்று இருப்பதைக் காணலாம். அவர்களின் தோற்றம் பெரும்பாலும்திருக்கயிலாய மலையிலேயே ஆரம்பமாகும். பெரும்பாலான நாட்டார் தெய்வங்கள் சிவனின் அல்லது உமையின் அம்சமாகவோ, சிவனின் மகனாகவோ மகளாகவோ தான் இன்றும் வழிபடப்படுகின்றார்கள் என்பது நாட்டாரியல் ஆய்வுகள் தெரிவிக்கும் சுவாரசியமான உண்மை! (தொடரும்)



ஈசனைப் பிரிந்து தனிக்கோயில் கொண்ட கண்ணகாம்பிகை, தெக்கணப்பாய், வட்டுக்கோட்டை



வடகொரிய இராணுவமும், புலிகளும் பாவித்த ஒரே விதமான ZU 23-4 விமான எதிர்ப்பு துப்பாக்கி

# இந்தியாவின் கொல்லைக்குள் ஆயுதக்கப்பல்களை நிறுத்திய புலிகள்.!



## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 47

பீஷ்மர்

ஆயுத கொள்வனவில் பெருந்தொகை பணம் தேவை, அதற்காக பல்வேறு வர்த்தகங்கள் மூலம் புலிகள் பணமீட்டினார்கள் என்பதை கடந்த வாரங்களில் குறிப்பிட்டேன். இந்த வர்த்தகங்கள் அனைத்தும் கே.பியின் நேரடி கட்டுப்பாட்டிலேயே இருந்தது. அனைத்து கணக்குகள், நிதி கையாள்கை அனைத்தையும் கே.பியே கையாண்டார். அவருக்கு கீழ் ஒரு கணக்கு பிரிவு இருந்தது. அந்த பிரிவு கே.பிக்கு மாத்திரமே பொறுப்பு சொல்லும்.

புலிகளிடம் ஒரு நிதிப்பிரிவு இருந்தது. தமிழேந்தி அப்பா அதற்கு பொறுப்பாக இருந்தார். பின்னர் பாலதாஸ் இருந்தார். இவர்கள் யாருக்கும் கே.பியின் வருமானம் பற்றி எதுவும் தெரியாது. இது அமைப்பிற்குள் ஒரு பிரச்சனையாக இருந்தது. கே.பி வெளிநாட்டு பொறுப்பாளர் பொறுப்பிலிருந்துவிலகிச்செல்லவேண்டிய நெருக்கடியை இந்த பிரச்சனைதான் ஏற்படுத்தியது. அது பற்றி தொடர்ந்து வரும் பகுதிகளில் குறிப்பிடுவேன்.

கே.பியின் கீழ் வெளிநாட்டில் பல பிரிவுகளாக செயற்பாடுகள் இயங்கின. ஆயுதக்கொள்வனவு கடத்தல் விவகாரத்தை மட்டும் இதில் குறிப்பிடுகிறேன். கே.பியின் நேரடி கட்டுப்பாட்டில் ஒரு கணக்காளர் இருந்தார். அதுதவிர, மேலும் ஆறு அல்லது ஏழு பேர் கொண்ட ஒரு அணியிருந்தது. அவர்கள் தனித்தனியாக பல்வேறு நாடுகளில் வசித்து வந்தார்கள். இவர்கள்தான் ஆயுத பேரத்தை முடிப்பார்கள். நாடுகள், முகவர்களிடம் பேசி பேரத்தை முடிப்பார்கள். இவர்களிற்கு பல நாடுகளுடன் தொடர்பிருந்தது. வர்த்தகர்களாகத்தான் தமது அடையாளத்தை வெளிக்காட்டுவார்கள். இவர்களில்எக்ஸ்என்றஒருவர் இப்பொழுது நைஜீரியாவில் வாழ்கிறார். உலகத்தில் பல வசதியான நாடுகள் இருக்கிறது, இவர்களிடமும் பணம் இருக்கும், பிறகேன் நைஜீரியாவில் வாழ்கிறார் என நீங்கள் நினைக்கலாம். அதற்கு காரணமிருக்கிறது.

குறித்த எக்ஸ் என்பவர் அனேகமாக ஆபிரிக்க ஆயுத முகவர்களுடன்தான் தொடர்பை வைத்திருந்தார். கடல்கொள்ளையர்கள், ஆயுத இயங்கள் என அங்கு ஏராளம் அமைப்புக்கள் இருந்தன. அதுதவிர, வறுமையான அந்த நாடுகளின் அரசுகளும் கொஞ்சம் காசை கொடுத்தாலே சொல்வதை செய்வார்கள். இப்படி நைஜீரியாவில் செல்வாக்கனவராக எக்ஸ் மாறிவிட்டார்.

கே.பி புலிகள் அமைப்பை விட்டு 2002 இல் இருந்து படிப்படியாக ஒதுங்க ஆரம்பித்த பின், சர்வதேச நாடுகளின் புலனாய்வு அமைப்புக்கள் புலிகளின் ஆயுதக்கொள்வனவு அணியை துரத்தி துரத்தி வேட்டையாட தொடங்கினார்கள். பலர் கைது செய்யப்பட்டார்கள். சிலர் விசாரணை வளைத்திற்குள் இருந்தார்கள். அடுத்து என்ன செய்வதென தெரியாத நிலையில், சிலர் தமக்கு நெருக்கமான அரசுகளுடன் பேசி, அந்தந்த நாடுகளில் குடியிருக்க ஆரம்பித்தனர்.


மேலே குறிப்பிட்ட எக்ஸிற்கு நைஜீரிய அரச, பாதுகாப்புதுறையில் நெருக்கமான தொடர்புகள் உள்ளன. அவர் நைஜீரியாவிலேயே குடியிருந்து விட்டார். அங்கு தற்போது பெரிய வர்த்தக புள்ளியாக இருக்கிறார்.

கணக்கு, ஆயுத பேரம் என்ற இரண்டு பிரிவுகளிற்கு அடுத்ததாக இன்னொரு பிரிவு இருந்தது. அதுதான் மிக முக்கியமான பிரிவு. ஆயுதங்களை ஏற்றி, இலங்கைக்கு கொண்டு செல்வது. இவர்களின் வாழ்க்கை அனேகமாக கடலிலேயே கழியும். இந்த செயற்பாட்டை பற்றி விபரமாக குறிப்பிட வேண்டும்.

விடுதலைப்புலிகளிற்கு சொந்தமாக பெருமளவு கப்பல்கள் இருந்தன. இறுதி யுத்த சமயத்தில் கே.பியின் தொடர்பு வட்டத்திற்குள் இருந்தவர்களின் பொறுப்பில் இருந்த கப்பல்கள் அனேகமாக இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டு விட்டன. ஆனால், புலிகளின் வெளிநாட்டு பொறுப்பாளர் பொறுப்பிலிருந்து கே.பி அகற்றப்பட்ட பின்னர், புதியவர்களின் பொறுப்பில்தான் பெருமளவான கப்பல்கள் இருந்தன. அவை புலிகளின் அழிவின் பின் தனிநபர் சொத்துக்களாகி விட்டன.

கண்ணாடி யோகன் என்ற புலிகள் அமைப்பின் பெயரை உடைய ஒருவர் தற்போது லண்டனில் இருக்கிறார். கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவன். கடற்புலிகளை சேர்ந்தவர். கே.பியிடம் இருந்து படிப்படியாக பொறுப்புக்கள் குறைக்கப்பட தொடங்கிய சமயத்தில், முதன்முதலாக கொஞ்சம் பொறுப்புக்கள் இவரிடம்தான் கைமாற்றப் பட்டது.

புலிகளின் அழிவின் பின் இவரின் பொறுப்பில் ஐந்து கப்பல்களும், பல கோடி ரூபா பணமும் தங்கிவிட்டது. இதை வைத்து என்ன செய்வதென தெரியாமல் திண்டாடினார். யாருக்கும் சொல்லாமல் அமெரிக்காவிற்கு தப்பியோடிவிடலாமென திட்டம் போட்டார். எனினும், அமைப்பின் மற்றைய நண்பர்களிற்கு விடயம் தெரிந்து அவரை தடுத்து நிறுத்தி விட்டார்கள். இப்படி பல கதைகள்.




கடற்படையால் தாக்கியழிக்கப்பட்ட புலிகளின் ஆயுதக்கப்பல்கள் சில. அனைத்தும் நிக்கோபர் தீவுகளிற்கு அண்மையில் அழிக்கப்பட்டிருந்தன.

புலிகளின் ஆயுதக்கப்பல்கள் ஏதாவதொரு நிறுவனத்தின் பெயரில்தான் பதிவு செய்யப்பட்டிருக்கும். இந்த நிறுவனங்களும் புலிகளின் லேபிள் நிறுவனங்கள்தான். கப்பல் நிறுவனங்கள் என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருப்பார்கள். அதாவது, மிக நேர்த்தியான சட்ட ஏற்பாடுகளுடன் அவை செயற்பட்டு கொண்டிருப்பார்கள்.

இப்பொழுது எக்ஸ் உக்ரேனியில் ஒரு ஆயுத பேரத்தை முடித்துவிட்டார் என வைத்துக்கொள்வோம். விடயம், கப்பல்களை கையாள் பவர்களிற்கு அறிவிக்கப்படும். அவர்கள் ஒருகில்லாடி வேலை செய்வார்கள். அந்த கப்பல் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் எந்த நாட்டில் உள்ளதோ, அங்கு ஒரு முறைப்பாடு பதிவு செய்வார்கள். தமது நிறுவனத்திற்கு சொந்தமான இந்த பெயருடைய கப்பலை யாரோ கடத்திவிட்டார்கள் என முறைப்பாடு செய்வார்கள்.

பின்னர் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்ட கப்பலை உக்ரேனிற்கு அனுப்பி ஆயுதங்களை நிரப்புவார்கள். ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு கப்பல் நிக்கோபர் தீவுகளிற்கு வரும். அங்கு வைத்து கப்பலின் நிறம் மாற்றியமைக்கப்படும். வேறொரு நாட்டின் கொடி பறக்கவிடப்படும்.

ஏன் நிக்கோபர் தீவுகளிற்கு கப்பலை புலிகள் கொண்டு வருகிறார்கள்?

புலிகளின் பிரதான ஆயுத கடத்தல் செயற்பாடு நிக்கோபர் தீவுகளை அண்டித்தான் இயங்கியது. கிழக்காசிய நாடுகளை மையமாக வைத்து கே.பி முதலானவர்கள் இயங்கினாலும், ஆயுதங்களை ஏற்றிய கப்பல்களின் செயற்பாடு நிக்கோபர் தீவுகளை மையமாக வைத்தே நடந்தது. ஆயுதங்களை ஏற்றிய கப்பல்கள் அனைத்தும் நிக்கோபர் தீவுகளில்தான் கட்டி வைக்கப்படும். முல்லைத்தீவு அல்லது கிழக்கு கடற்கரையில் ஏதாவதொரு இடத்தில் ஆயுதம் இறக்கும் சூழல் உருவாகும் வரை நிக்கோபர் தீவுகளில் கப்பலை கட்டிவைப்பார்கள்.

நிக்கோபர் தீவு கூட்டம் என்பது ஆயிரக்கணக்கான சிறிய தீவுகளை கொண்டது. இங்குள்ள பெரும்பாலான தீவுகளில் மக்கள் குடியிருப்பதில்லை. ஆளரவமற்ற பிரதேசமாக இருக்கும். எப்பொழுதாவது மிகச்சில மீனவர்கள் தான் அந்தப்பகுதிக்கு செல்வார்கள். அதனால் மிக பாதுகாப்பான இடமாக இருந்தது.

இதைவிட இன்னொரு பெரிய பாதுகாப்பிருந்தது. இது இந்து சமுத்திர பகுதியில் உள்ள தீவுக்கூட்டம். இந்தியாவின் கடற்படை ஆதிக்கத்திற்குரிய இடம். இதனால் அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய கடற்படைகள் அங்கு கவனம் செலுத்துவதில்லை. நிக்கோபர் தீவுகளிற்கு அப்பால் றெனியூன் தீவுகளில்தான் அமெரிக்காவின் ராடர் மையமொன்று உள்ளது. றெனியூன் தீவுகளை அண்டிய கண்காணிப்பே போதுமென அமெரிக்க கடற்படை சிறியதொரு ராடர் கட்டமைப்பையே அங்கு நிறுவியுள்ளது. அமெரிக்கர்களால் நிக்கோபர் தீவுகளை அண்டிய நடமாட்டத்தை கண்காணிக்க முடியாது?

சரி. அமெரிக்காவால்தான் கண்காணிக்க முடியாது. இந்திய கடற்படையின் அதிகார எல்லைக்குட்பட்ட நிக்கோபர் தீவுகளில் புலிகள் ஆயுதக்கப்பலை கட்டிவைத்துவிட்டு, மாதக்கணக்கில் படுத்துக் கிடக்கிறார்களே, இந்திய கடற்படை என்ன செய்து கொண்டிருந்தது? ஏன் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை?

(தொடரும்)



# உள்ளூராட்சி தேர்தல் முறைமை தெரிந்திருக்க வேண்டிய விடயங்கள்

சட்டத்தரணி எம்.எம். பஹீஜ்

உள்ளூராட்சி சபைகளுக்கான புதிய தேர்தல் முறை, 2017ம் ஆண்டின் 16ம் இலக்க சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**உறுப்பினர்கள் எண்ணிக்கை**

உள்ளூராட்சி சபைகளுக்கான அங்கத்தவர்கள் தெரிவில் 60 சதவீதமான அங்கத்தவர்கள் வட்டார அடிப்படையிலும் 40 சதவீதமான உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர். மொத்த உறுப்பினர்களுள் 25 சதவீதம் பெண்கள் உறுப்பினர்களாக இருப்பர்.

ஏற்கனவே வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள வட்டாரங்களின் எண்ணிக்கையினை அடிப்படையாக வைத்தே சபையொன்றின் மொத்த அங்கத்தவர் தொகை தீர்மானிக்கப்படும். அதாவது, ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள வட்டாரங்களின் தொகையினை 60 சதவீதமாகக் கொண்டு அத்துடன் மேலதிகமாக 40 சதவீதத்தினை சேர்த்து அங்கத்தவர் தொகை தீர்மானிக்கப்படும்.

உதாரணமாக சபையொன்றின் வட்டாரங்களின் எண்ணிக்கை 12 என்றால் அது 60 சதவீதமாக கொள்ளப்பட்டு மிகுதி 40 சதவீத்தத்திற்கும் இன்னும் 08 அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டு மொத்த அங்கத்தவர்கள் தொகை 20 ஆக அமையும்.

**வேட்பு மனு**

கட்சிகள் அல்லது குழுக்கள் இரண்டு வேட்புமனுப் பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

**முதலாவது வேட்பு மனு**

முதலாவது வேட்புமனுப்பத்திரம் வட்டாரங்களுக்கு பெயர் குறிப்பிட்டு வேட்பாளர்களை நியமிக்கும் வேட்பு மனுவாகும்.

இந்த வேட்புமனுவில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வேட்பாளர்களை பெயர் குறித்து நியமிக்க வேண்டும். இவர்களுள் 10 சதவீதமானவர்கள் கட்டாயமாக பெண்களாக இருத்தல் வேண்டும்.

**இரண்டாவது வேட்பு மனு**

இரண்டாவது வேட்பு மனுப்பத்திரத்தில் விகிதாசார முறையில் தெரிவு செய்யப்பட வேண்டிய 40 சதசவீதமான உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையுடைய நபர்களும் மேலதிகமா 03 நபர்களும் சேரக்கப்பட்டு பெயர்கள் வழங்கப்பட வேண்டும்.

இவர்களுள் 50 சதவீதமானவர்கள் கட்டாயமாக பெண்களாக இருத்தல் வேண்டும்.

**இளைஞர் பிரதிநிதித்துவம்**

மொத்த வேட்பாளர்களின் தொகையில் 30 சதவீதமானவர்கள் இளைஞர்களாக இருக்க வேண்டும்.

**கட்டுப் பணம்**

கட்சிகளின் வேட்பாளர்கள், வேட்பாளர் ஒருவருக்கு ரூபா. 1500 வீதம் கட்டுப் பணம் செலுத்துதல் வேண்டும்.

சுயேச்சைக் குழுக்கள் வேட்பாளர் ஒருவருக்கு ரூபா. 5000 வீதம் கட்டுப் பணம் செலுத்துதல் வேண்டும்.

**வாக்கெடுப்பு**

வாக்காளர்கள் தமக்கு வழங்கப்படும் வாக்குச் சீட்டில் தாம் விரும்புகின்ற கட்சியின் சின்னத்திற்கு அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்திற்கு நேரே புள்ளடியிடுதல் வேண்டும்.

**வாக்கெண்ணல்**

வாக்குகள் வாக்களிப்பு நிலையங்களிலேயே எண்ணப்படும். அவசர நிலமைகளில் தெரிவத்தாட்சி அலுவலரினால் வாக்கு எண்ணும் நிலையங்கள் மாற்றப்படலாம்.

**தேர்தல் முடிவுகள்**

**வட்டார பிரதிநிதித்துவம்**

வட்டாரங்களில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் ஆகக் கூடுதலான வாக்கினை பெறும் கட்சியின் வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவார்.

**விகிததாசார முறைமை**

உள்ளூராட்சிப் பிரதேசம் ஒன்றில் அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை குறித்த சபைக்கு தெரிவு செய்யப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையினால் பிரிக்கப்பட்டு பெறப்படும் தொகை தகைமை பெறும் எண்ணிக்கை எனப்படும்.

ஒவ்வொரு கட்சிகளும் பெற்ற வாக்குகள் தகைமை பெறும் எண்ணினால் பிரிக்கப்பட்டு கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் உரித்தாக வேண்டிய உறுப்பினர்களின் தொகை தீர்மானிக்கப்படும்.

ஏற்கனவே வட்டார அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கட்சிகள் சார்பான உறுப்பினர்களின் தொகை, கட்சிகளுக்கு உரித்தான தொகையிலிருந்து கழிக்கப்பட்டு மிகுதி உறுப்பினர்களை நியமிக்குமாறு கட்சிகள் கோரப்படும்.

அவ்வாறு நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் இரண்டு வேட்புமனுக்களில் எதிலிருந்தும் கட்சியின் செயலாளரினால் நியமிக்கப்படலாம்.

**பெண் அங்கத்தவர் நியமனம்**

ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் மொத்த அங்கத்தவர் தொகையில் 25 சதவீதமானவர்கள் பெண்களாக இருப்பதனை உறுதி செய்வதற்காக மேலே விபரிக்கப்பட்டவாறு விகிதாசார அங்கத்தவர்களை நியமிக்கின்ற போது ஒவ்வொரு கட்சியும் எத்தனை பெண்களை நியமிக்க வேண்டும் என தேர்தல் ஆணையம் கீழே சொல்லப்படும் விதத்தில் பின்வருமாறு கணக்கீடு செய்து அறிவுறுத்தல் வழங்கும்.

அதாவது, ஒரு கட்சியில் விகிதாசார அடிப்படையில் குறித்த கட்சிக்கு உரித்தான உறுப்பினர் தொகையினை விட அதிகமான அங்கத்தவர்களை வட்டார அடிப்படையில் பெற்றிருந்தால் அக்குறித்த கட்சிகளில் பெண் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் அக்கட்சிகள் மேலதிகமாக பெண்களை நியமிக்க வேண்டிய அவசியமில்லை.

மேலும், ஒரு கட்சி அளிக்கப்பட்ட வாக்குகளில் 20 சதவீதத்திற்கு குறைவான வாக்குகளையும் 03 பேருக்கு குறைவான உறுப்பினர்களையும் பெற்றிருந்தால் அக்கட்சியும் பெண்களை நியமிக்க வேண்டிய அவசியமில்லை.

ஏனைய கட்சிகளின் வாக்குகளின் விகிதாசார அடிப்பைடயில் பாராளுமன்ற தேர்தலின் பின்பு தேசியப்பட்டியல் தீரம்லீனிக்கபடுவது போன்று குறித்த சபைக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட 25 சதவீதமான பெண் அங்கத்தவர்கள் தெரிவு உறுதிப்படுத்தப்படும். இதன் போது கட்சியின் இரண்டு வேட்புமனுக்களில் எதிலிருந்தும் கட்சியின் செயலாளரினால் பெண் அங்கத்தவர்கள் நியமிக்கப்படலாம்.

ஆக மொத்தத்தில் ஒரு உள்ளூராட்சி பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு பிரதிநிதி இருப்பதுவும், மொத்த அங்கத்தவர்களில் 25 சதவீதமானோர் பெண்களாக இருப்பதுவும், அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் ஆசனங்கள் பிரிக்கப்பட்டு வழங்;கப்படுவதுவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல்களை நடத்துவதற்கு முன்னர் தேர்தல் ஆணையம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட வேண்டியுள்ளது அத்துடன் உள்ளூராட்சி அமைச்சர் பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபை சட்டங்களை திருத்த வேண்டியுள்ளது.






▶ யாழ் வடமராட்சி பருத்திதுறை ஹாட்லி கல்லூரிக்கான வகுப்பறை கட்டடதொகுதிநு அதிபருக்கான விடுதி திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன், வட மாகாண கல்வி அமைச்சர் கே.சர்வேஸ்வரன், மாகாண கல்வி பனிப்பாளர் உதயகுமார் உட்பட கல்வி அதிகாரிகள் கலந்துக் கொண்டார்கள்.


வாரத்தில் சில நாட்கள் மட்டுமே வேலை நாட்கள்
ஆனால் மாதத்தில் 40,000.00ரூபா வரை சம்பாதிக்கலாம்
இளைஞர்கள், யுவதிகள் விண்ணப்பங்களை
அனுப்பலாம், உயர்கல்வி கற்றக்கும் மாணவர்களுக்கும்
பகுதி நேர வேலை வாய்ப்பு
விண்ணப்ப முடிவு திகதி 20/10/2017
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகப் பணிப்பாளர் (தீபம் வாரமலர்)
நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட்
989/1 பருத்தித்துறை வீதி ,கல்வியங்காடு
நல்லூர். யாழ்ப்பாணம் 0768255560,0214927561


வேலை
வாய்ப்பு
இலங்கையில் மிக வேகமாக வளர்ந்து வரும் தீபம் வார இதழிற்கு பின்வரும்
நகரங்களில் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றார்கள்.
✓ மனிப்பாய் ✓ பருத்தித்துறை ✓ வவுனியா ✓ முல்லைத்தீவு
✓ சுன்னாகம் ✓ சாவகச்சேரி ✓ மன்னார் ✓ மட்டக்களப்பு
✓ நெல்லியடி ✓ கொடிகாமம் ✓ கிளிநொச்சி ✓ திருகோணமலை
✓ சங்கனை ✓ யாழ் நகர் ✓ புதுக்குடியிருப்பு ✓ அம்பாறை
தொடர்பு
0768255563


தீபம்
செய்திகள்
இப்போது புதிய வடிவமைப்புடன் விறு விறுப்பான
செய்திகளுடன் வாரத்தில் எழு நாட்களும் (24 X 7)
வலம் வருகின்றது.
தீபம்
நீங்கள் உடனுக்குடன் பார்வையிட
www.deepamtv.asia







இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 17.09.2017 அன்று வெளியிடப்பட்டது.